Registered as a News Paper


பக்கம் - 28

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 24 | 13 - 19 - ஓகஸ்ட் - 2004



# திருமுக அறிமுகம்

'அவர் ஒரு வித்தியாசமான சிந்தனையாளர்.'

மாறுபட்ட ஆனால் மனித நேயமிக்க படைப்பாளி,

சிந்தனை - எழுத்து - செயல் மூன்றையும் ஒன்றிணைத்து இயங்கிய மனிதன் வாழ்வில் சத்தியத்தை ஆத்மதாகத்துடன் தேடிய ஒருவராகவும், அதையே தனது படைப்புகளினூடாக எந்தவிதமான குழப்பமும் இன்றி வெளிப்படுத்த முயன்ற எழுத்தாளரான மு.தளையசிங்கம் ஆழமான கவனத்திற்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப்படவேண்டிய ஒருவராவார்.

புதியதோர் உலகை உள்ளொளியுடன் கூடிய சத்தியநோக்கில் உருவாக்கும் ஆத்மதாகத்துடன்... தன்னையும் தனது கருத்து நிலைப் பாடுகளையும், சமூகம், அரசியல், ஆன்மீகம் என அனைத்து விடயங்கள் குறித்த படிமுறை பரிணாமவளர்ச்சியின் பாற்பட்ட சிந்தனைகளையும் சுயவிமர்சனத்திற்கும் ஆய்வுக்கும் உட்படுத்திய வண்ணம் தனது அறிவுசார் ஆளுமையை நெறிப்படுத்திக்கொண்டவரான தளையசிங்கம் பலரால்... அவரின் வலிமையான ஆனால் வழமைக்குமாறான சத்தியத்துவமிக்க செயற்பாடுகளினூடாக, படைப்புகளினூடாக இலகுவில் புரிந்துகொள்ள முடியாத ஒருவராகவே விளங்கினார்.

அவருக்கென்றொரு தனித்துவ ஆன்மீக இலக்குடன் கூடிய அரசியல் கோட்பாடும் இருந்தது. அது அடைவதற்கு கடினமான - சத்தியவேட்கையுடன் தேடல் முயற்சியை மேற்கொள்ள வேண்டிய ஒன்றாக இருந்ததால் அவரை நன்கு புரிந்துகொண்டோரால் கூட அவரளவு ஆன்ம




சுத்தியுடன் அதனை முழுமையாக தொடரமுடியாமல் உள்ளது.

மெல்லிய உருவம் எளிமையான தோற்றம்.

அடர்ந்த மீசை - அதற்கும் மேல் பளபளக்கும் கண்ணாடியை ஊடுருவி தீர்க்கமாகவும், தீட்சண்யமாகவும் ஒளிரும் கண்கள் எந்தக் கணமும் தேடல் உணர்வையே வெளிப்படுத்தும்.

அதிர்ந்து பேசாத ஆனால் ஆணித்தரமான குரல் தெளிவான சிந்தனையை வெளிப்படுத்தி நிற்கும்.

தளையசிங்கம் மாறுபட்ட மனிதர், படைப்பாளி, சிந்தனையாளர். மட்டுமல்ல ஒருதனிமனித இயக்கம் என்பதை அவரை நன்கு அறிந்தோரே அறிவர். அவர் சமூக கொடுமைகளை கருத்தியல் ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் மிகவும் தீர்க்கமான கொள்கையுறுதியுடன் எதிர்த்தவர்.

சாதீய அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்... போராடியவர். சர்வோதய சிந்தனைகளுடன் சமூகப் பணிகளில் தன்னைப் பிணைத்துக் கொண்டவர், அவரது இலக்கியப் படைப்புகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்தவை மட்டுமல்ல, சராசரி இலக்கியவாதிகளிலும் பார்க்க உறுதியான இலட்சிய இலக்குடன் இயங்கிய படைப்பாளியாக அவரைப் பிரமிப்புடன் நோக்க வைத்தவையாகும்.

1957இல் 'தியாகம்' என்ற சிறுகதைமூலம் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த பட்டதாரியான தளையசிங்கத்தின் தனித்துவத்தை முதலில் அடையாளப்படுத்திய சிறுகதைத்தொகுதி 'புதுயுகம் பிறக்கிறது' என்பதாகும்.

அரசு வெளியீடாக வெளிவந்த 'புதுயுகம் பிறக்கிறது' தொகுப்பில் இனப்பிரச்சினையை மையமாக வைத்து எழுதப்பட்ட பல கதைகள் உண்டு. தமிழ் மக்களின் தாயகக் கோரிக்கையை வைத்து எழுதப்பட்ட முதல் நாவல் 'ஒருதனிவீடு' தளையசிங்கம் அவர்களாலேயே படைக்கப்பட்டது.

"தமிழில் புத்திலக்கிய வடிவத்தின் வழிகாட்டிகளாக அவர் படைத்த போர்ப்பறை" - "மெய்யுள்" போன்ற நூல்கள் அமைந்துள்ளன. இந்த நூல்கள் வெளியான காலத்தில் பரபரப்பான இலக்கிய விமர்சனங்களும் சர்ச்சைகளும் இவை பற்றி எழுந்தன.

ஆனாலும் முற்போக்கு - பிற்போக்கு - நற்போக்கு மற்றும் இன்னோரன்ன போக்குகளைச் சேர்ந்த இலக்கியவாதிகள் அனைவராலும் அந்தநூல்கள் ஆழமாக நோக்கப்பட்டன என்பது மட்டும் உண்மை...

அவரை மட்டுமல்ல அவரது படைப்புக்களையும் ஆழ்ந்து ஊடுருவி உணர்வது ஒரு அதிசயிக்க வைக்கும் அற்புதமான அனுபவமேயாகும்.

ஆனாலும் அவரையும் அவரது படைப்புக்களையும் உய்த்துணர்ந்து கொண்டோர் வெகுசிலரே... அதற்குரிய தேடல் ஞானத்துடன் கூடிய வாசிப்புத்திறன் பலரிடம் இல்லை என்பதே அதற்கு காரணமுமாகும். இவற்றைவிட புதுக்குரல்கள், கலைஞனின்தாகம், அண்டைவீடுகள் உள்ளும், வெளியும், மெய், வெள்ளையானை போன்ற அவரது தனித்துவமான படைப்புகளும் இவ்வாறானவையே....

'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி' - முற்போக்கு இலக்கியம் ஆகியவை இவரது விமர்சனப்பார்வையின் கூர்மையை வெளிப்படுத்தும் நூல்களாகும்.

கருத்து முரண்பாடுகளுக்கப்பால் நின்று காழ்ப்புணர்வற்ற நிலையில் ஒரு ஆன்ம ஈடுபாட்டுடன் அவரது மெய்யுள், போர்ப்பறை போன்ற புத்திலக்கிய நூல்களுடன் ஒன்றினால் மட்டுமே பொது உடமை வழி நின்று பொருள் முதல் வாதப் போக்கிற்கும் அகப்பண்பாடு ஆன்மீகம் என்ற நிலைப்பாட்டில் உள்ள கருத்து முதல்வாதப் போக்கிற்கும் இடையே தளையசிங்கம் அவர்கள் வைத்த 'மெய்முதல்வாதம்' குறித்த கருத்துக்களை புரிந்துகொள்ளமுடியும்.

அது முழுமையாக சாத்தியமாகும் போதே தளையசிங்கம் என்ற அந்த மாறுபட்ட சிந்தனையாளரின் படைப்பியள் செழுமையின் ஆளுமையைப் பூரணமாக புரிந்து கொள்ள முடியும்.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமொன்றில் பொலிசாரால் தாக்கப்பட்டு அதன் காரணமாக ஏற்பட்ட உட்காயப்பாதிப்பினால் நோயுற்று சொற்ப வயதில் சாவைத் தழுவிய தளையசிங்கம் இன்னமும் ஆய்வுசெய்ய, உணரப்படவேண்டிய மனிதராகவே உள்ளார்'.

அந்த அற்புதமான மனிதநேய - ஆன்மநேய படைப்பாளியை ஈழத்தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்த "புங்குடுதீவு" மண்ணுக்கு தலைவணங்கவே வேண்டும்.

அட்சயன்

# கார சாரம்

## வெளியில மட்டுமல்ல... வீட்டிலும் வேண்டும்

அதெப்பிடி பொம்பிளையளெண்டா சம உரிமை கேக்கிறியள். ஆணும் பெண்ணும் சமம். பிரிச்சுப் பாக்காதையுங்கோ. பொம்பிளை ஜீன்ஸ் போடுறாள். வாகனம் ஓடுறாள், நெஞ்சில் வாகனம் ஏற்றுறாள், துவக்கைத்தூக்குறாள், கடலில நீந்துறாள், சுழி ஓடுகிறாள், படகு ஓட்டுகிறாள். இப்படி இப்படியா விமானியா, விளக்குமாறா.... வீட்டுக்கு வீடு கிடக்கிறதும் பொம்பிளைதான். ஐயா பெரியவர். ஆம்பிளையோ கொக்கோ? பொம்பிளை யார் ஜீன்ஸ் போடுறாள். இன்னும் ஜீன்ஸ் போடாத பொம்பிளையளும் இருக்கினம் ஆம்பிளையளும் இருக்கினம்தான். சம உரிமைய எங்க பேணுறியள். முற்போக்குள்ள அலுவலகங்கள் ளயே சேலையச்சுத்திக் கொண்டு வாங்கோ, எண்டுதான் சொல்லுகினம். ஏன் சீருடை வடிவமைப்பே சேலைதான். பன்னெண்டு முழம் சேலைய காத்தில பறவாமக் கட்ட ஒருடசின் சட்டைப்பின்னுக்கு மேல தேவைப்படுது. நீங்களாரும் வேட்டிகட்டி வேலைக்கு வாறியளோ எண்டா இல்லை. சரி இந்த சேலை அணியிறது தானாம் அடக்க ஒடுக்கமான உடுப்பு. இடுப்புக்குக் கீழ அரையில தொப்புள் தெரியக்கட்டி அதை நைலோன் சீலையால மெல்லிய திரைபோட்டு மறைக்கிற மாதிரி, மறைக்காத சேலைக்கட்டு. சட்டை மட்டுமென்ன பின் பக்கத்தால ஒண்டரை ஏக்கர் வெளி. யன்னல் கதவுகள் எண்டு ஜமாய்க்கினம். பஸ்ஸில பெண்கள் நிக்கயும், அலுவலகத்தில பெண்கள் வேலை செய்யேக்கயும் கைகளைத் தோள் மட்டத்துக்குத் தூக்க வேணும். இப்ப பக்கத்துச் சீற்றில (பஸ்ஸிலும் அலுவலகத்திலும்) அமர்ந்திருப்பவர் என்ன ரிஸ்ய சிருங்கரோ. அடுத்த விசயம். வாகனம் ஓடுறாள். ஆம்பிளையளும் வாகனம் ஓடுகினம். அதுக்காக உலகத்தில உள்ள எல்லா ஆம்பிளையளும் வாகனம் ஓடுகினமெண்டாச் சிரிப்பியள் அப்பிடித்தான் பொம்பிளையளும் எல்லாரும் ஓடேல்ல. நெஞ்சில வாகனம் ஏத்துறாள் ஒருத்தி, சரி ஒருவனும்தான் ஏற்றினான். பேருந்தில பிரசங்கம் செய்தவரைக் கிடத்தி ஏத்தவெளிக்கிட்டா என்ன நடக்கும். துவக்கைத் தூக்குறாள். ஆம்பிளையும்தான் தூக்கினான், தூக்குறான். ஒட்டு மொத்த முழு ஆம்பிளையளும் தூக்கியிருந்தா.... நிலைமை என்ன? பிரசங்கியார் உங்களுக்குத்தான். கடல்ல நீந்த சுழியோட படகுவிடப் பெண்கள் போனதாத்தான் குறிப்பிடுறியள். அந்தக் களத்துக்கும் வெளியால, தலைமுறையைச் சுமந்து பெற்று காப்பாற்றி, போருக்குள்ள நிண்டு புறவயல் வேலையளச் செய்து, புதல்வரைப் புதல்வியை கணவனைப் போருக்கனுப்பி குடும்பச் சுமையைத் தாங்கி தன் குடும்பத் தேவைகளுக்கோ மற்றெதற்கோ பயணம் செய்யும் பெண் எந்த விதத்தில் மதிப்புக் குறைந்து போனாள். எண்டைக்காவது பிரசங்கியார் அடுத்த பெண்களைத் தன்ர சகோதரியா, தாயா, மதித்து நடந்து பழக்கமிருக்கோ- விரோத மனப்பான்மையும் வெறுப்பும் தெறிக்கப் பேசின போது நின்றவள் தன்னுடைய அக்கா தங்கச்சி எண்டு இருந்து வேற யாரும் இதை சொல்லியிருந்தா.... நல்லா கவனியுங்கோ பொம்பிளையள் வெளியால வந்தது சமுதாயத்தின் தேவை கருதித்தான். சமுதாய மெண்டாத் தெரியுமோ அப்ப மெண்டா சுட்டுக்காட்டினாத்தானே தெரியும். தனிமனிதர் பலரைக் கொண்டது ஒரு குடும்பம், பல குடும்பங்களைக் கொண்டது ஒரு சமுதாயம். அப்ப சமுதாயம் எண்டா அதன் தேவைகள் தனித்து நிறைவேறினாத்தான் குழுக்கள் முன்னேறும் பொம்பிளையள் வெளியால வந்திட்டினமே யொழிய அவயட வீட்டுச்சுமை அப்படியே தான் இருக்கும். நீங்கள் பாக்கிற ஒவ்வொரு பெண்ணும் அண்மையில் தாயானவளாக இருக்கலாம் அல்லது தாயாகப் போகிறவளாக இருக்கலாம். அல்லது மாதவிலக்குக் காலமாக இருக்கலாம். ஏன் ஒரு காயப்பட்ட போராளியாக இருந்தவளாகவும் இருக்கலாம். இந்த இடையூறுகள் ஆண்களுக்கில்லை. பெண்ணொருத்தி பஸ்ஸில் ஊசலாடித்தொங்கிக் கொண்டு வரும் போது, உட்கார்ந்திருக்கும் ஆண் தேக நலனுள்ள மனிதனாக இருக்க முடியாது. சமஉரிமையை வீட்டில் கொடுங்கள் நாடுதிருந்தும். வீட்டில் நானே ராசா நானே மந்திரி என்பவர்கள் வெளியில் வந்து சமஉரிமை பேசுவது வேடிக்கை கேவலம் வாழ்க்கை துணைவியிடமே வாழ்வதற்குப் பணம் கேட்பவர்கள் வழிப்பயணத்தில் எப்படி மனிதாபிமானம் உடையவர்களாக முடியும். அத்தோடு இன்னொன்று. பஸ்தரிப்பு நிலையங்களில் வருபவர்கள் வந்த முறைப்படி வாகனத்தில் ஏறும் ஒழுங்குகள் இல்லை. இதனால்தான் பெண்களை இடித்துத்தள்ளிவிட்டு ஆண்கள் இருக்கையைக் கைப்பற்ற முடிகிறது. இந்தநிலை மாற்றப்பட சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்வார்களா?

மாயா

## இது கதையா.... படமா...?

காலத்துக்குக் காலம் நேரத்துக்கு நேரம் சிங்கள அரசுத்தலைமையள் எடுக்கிற முடிவுகளப் பற்றி ஏன் கேட்பான். முன்ன பண்டாரநாயக்க ஐயா இருக்கேக்க பெரிய ஆசைவச்சிருந்தவர், அதுதான் தமிழருக்கும் சிங்களவருக்கும் மொழியடிப்படையில சம அந்தஸ்து தர வேணுமெண்டு பிறகு ஏலாமப் போச்சு. எண்டாலும் இவற்ற உறுதியில நம்பிக்கையில்லாமத்தானே அகிம்சாவாதியள் துவக்குத்தூக்கி?! இவரைச் சுட்டுத்தள்ளினவை. பிறகும் பாருங்கோ அவற்ற மனிசி சிறிமா ஆட்சிக்கு வந்து கணவனே கண்கண்டதெய்வமா மதிச்சு. அவற்ற லட்சியங்களை மனதில கொண்டு மாத்தினதுதான் எழுவத்தி ரெண்டாம் ஆண்டின்ர குடியரசு அரசியல் யாப்பு- விளங்குதோ அந்த நாளயில மொழிச் சட்டத்துக்கெதிரா கோடீஸ்வரன் போட்ட வழக்கில வட்ட, மாவட்ட, உச்சநீதி மன்றங்கள் கிளித்தட்டு விளையாட வழக்கு கோமறைக் கழகத்தில போய் பழம் பாஞ்சது எல்லோ. அதைக்கண்ட தோட அம்மா இனி அங்க ஒரு வரும் போகக் கூடாது எண்ட திட்டத்தோட குடியரசுப் பிரகடனத்தை செய்தா. அதோடயே நீதிச்சேவை ஆணைக்குழு பொதுச் சேவை ஆணைக்குழுவெண்டு கேள்வி கேக்க இருந்தவையையும் துலைச்சா அதோட போகாம அதியுயர் அதிகாரங்களைக் கொண்ட மக்கள்சபை- அதாவது மக்களால் தெரிவு செய்யப்படுற தேசிய அரசுப் பேரவை எண்ட பேரை பாராளுமன்றத்துக்குத் குடுத்து அதிகாரமும் அவைக்கே எண்டா- தமிழ்களை வறுத்துக்குத்தத் துவங்கினா ஏன் பொருளாதார ரீதியா- மக்களைப் பட்டினிபோட்டே திருத்தினா. நல்ல சிங்களச் சனமெல்லோ. எட்டுக் கிலோ தானியத்துக்கு ஜேயாருக்கு வோட்டுப் போட்டுதுகள். ஐயா வந்தார். அம்மாவை குடியுரிமையைப் பறிச்சு மூலைக்க குந்த வைச்சார். ஆனையப் பூனையாக்கி, குப்பைக் கோபுரமாக்கிறதெண்டார். புலியளயெல்லாம் பொடிப் பொடியாக்குவன் எண்டார். ஆனால் பாழ்பட்ட தேசியப் பேரவை இடையில கிடந்த பெரிய இடைஞ்சல். சீக், இந்த அரசியல் யாப்ப வைச்சுத் தமிழருக்கு என்னால ஒண்டுஞ்செய்யேலாமக் கிடக்கு. இந்த இனப்பிரச்சினையத் தீர்ப்பமெண்டா அரசியல் யாப்புக் கிடந்து கையக் கால நீட்டி மறிக்குது முதல் உதை மாத்தினாத்தான் ஏதும் செய்யலாம் எண்டார். அதியுயர் அதிகாரமில்லாம என்ன செய்யிற. எழுதினார் புது யாப்பு அமெரிக்காவில எடுத்து செனட்டைக் கத்தரிச்சு பிரெஞ்சில எடுத்து சர்வசனவாக்குரிமை மக்கள் இறைமையப் பொறுக்கி- இந்தியாவில கொஞ்சம் பிரித்தானியாவில சில துளி எண்டு எடுத்துச் சேர்த்த யாப்பு வந்தது இதில விசேசம் என்னண்டா மக்களால் மக்களுக்காக மக்கள் ஆளும் அரசாங்கம் எண்டமாரி சனாதிபதியால், சனாதி பதிக்காக செய்யப்பட்ட சனாதிபதி ஆட்சி முறை - பின்ன எப்பிடியிருக்கும். இனி என்னை ஆரும் அசைக்கேலாது 'இந்தா தீர்க்கிறன்பார். இனப்பிரச்சனைய' எண்டு வெளிக்கிட்டு ஏறக்குறைய பதினேழு வருசம் அவரும் அவற்ற கட்சிக்காரரும் புடுங்கித்தானே பாத்தினம். இஞ்சவிடு கதிரைய நான் தீர்க்கிறன் பிரச்சினைய எண்டு வந்த அம்மா இடையில ஒருக்காச் சொன்னா- பிரபாகரனோட கதைக்கவும் தயார். ஏன்? இனப்பிரச்சினையத் 'தீர்க்கத் தான் வேணுமெண்டா எந்தப் பிசாசோடயும் பேசத் தயார். ஹி.....ஹி.. அதுதான். இப்ப பிசாசுகளோட சேர்ந்து பிரச்சினையத் தீர்க்க வெளிக்கிட்டிருக்கிறா. இந்தப்பிரச்சினையத் தீர்க்கத்தானே,உந்த அரசியல் யாப்பே எழுதுப்பட்டது இப்ப இந்த பதவியில உள்ளவயாலயே முடியாதெண்டா உதென்ன கதையா? படமா..?

# விலகிச்செல்லும் இந்தியா? நெருங்கிவரும் ஐரோப்பா?

அண்மையில் பாண்டியன் சுவையூற்றில் நின்றிருந்தவேளை, ஒரு நண்பர் சில வெள்ளைக்காரர்களுடன் வந்தார். அவர்களை எனக்கு அறிமுகம் செய்துவைக்கும் போது சொன்னார்... "இவர்கள் ஜேர்மனியிலிருந்து வந்திருக்கிறார்கள் இங்கே எமது இளைஞர் யுவதிகளுக்கு கால்பந்துப் பயிற்சி தரப்போகிறார்கள்." என்று. அந்த ஜேர்மனியர்கள் எல்லோருமே வயதால் இளையவர்கள். வேகமும், விறுவிறுப்பும் மிக்கவர்களாய்க் காணப்பட்டார்கள்.

அவர்களோடு கதைத்துக் கொண்டிருந்தபோது ஒருவிசயம் மனதில் உதித்தது. கண்டம் கடந்து இந்த ஜேர்மனியர்கள் விரும்பி வன்னிக்கு வருகிறார்கள். ஆனால், அயலில் தமிழ் நாட்டிலிருந்து இப்படி வருபவர்களின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

கடந்த சுமார் இரண்டரை ஆண்டுகால சூழலில் ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் நடந்த உறவு ஊடாட்டங்களை விடவும் தமிழர்களுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் நடந்த உறவும் ஊடாட்டமும் ஒப்பீட்டளவில் மிகவும் அதிகம்.

யுத்தகாலமொன்றில் உடைந்த உறவை, அதாவது தமிழக- ஈழ உறவை, இப்பொழுது நிலவும் மிக நீண்ட யுத்தநிறுத்த காலத்திலும் ஒட்டவைக்க முடிய வில்லை என்பது மிகப்பெரிய துயரமே.

பாண்டியன் சுவையூற்றில் நிகழ்ந்த சந்திப்பின் பின் சில நாட்கள் கழித்து இந்தியாவிலிருந்துவந்த ஒரு படைப்பாளியைச் சந்திக்கக் கிடைத்தது. அவரிடம் கேட்டேன்... "கடந்த சுமார் இரண்டரை ஆண்டுகால யுத்தநிறுத்தச் சூழலில் இங்குவந்து போகும் இந்தியர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே காணப்படுகிறது... ஈழப்போர்பற்றிய மாறாத முற்கற்பிதங்களோடு காணப்படும் இந்திய மீடியாக்காரர்கள், படைப்பாளிகள் மற்றும் அறிஞர்கள் இத்தருணத்திலாவது இங்குவந்து நிலைமைகளைக் கண்டறிந்து எழுதலாம் தானே?... *கன்னத்தில முத்தமிட்டால், உயிரே* போன்ற படங்களை எடுப்பவர்கள் இங்கு வந்து நிலமைகளை நேரடியாகத் தரிசித்துவிட்டுப் போகலாம் தானே?..." என்று.

அதற்கு அவர் சொன்னார்... எல்லாருமே பொடாச்சட்டத்துக்கு அஞ்சுகிறார்கள் என்று. அவரும் அவரைப்போன்று இங்குவந்துபோகும் படைப்பாளிகளும் தமது பயணங்களை பிரசித்தம் பண்ணவிரும்புகிறார்கள் இல்லையே ஏன் என்று கேட்டேன்....

"பொடாவின் கீழ் பிடித்து உள்ளே தள்ளிவிடுவார்கள்... இதுவிசயத்தில் திருமாவளவன் போன்ற கட்சிப்பலம் மற்றும் வெகு சனத்தளம் உடைய தலைவர்களால்தான் எதையாவது துணிந்து செய்யமுடியும். ஏனெனில் அவர்களை உள்ளே தள்ளினால் தொண்டர்கள் தெருவிலிறங்கி ஆர்ப்பாட்டம் செய்வார்கள்..... அதிலும் கூட கட்சிப் பலமும் வெகுசனத்தளமும் உடைய வைக்கோ, நெடுமாறன் போன்ற தலைவர்களையே மாதக்கணக்கில் தடுத்துவைத்திருந்த ஒரு அரசு எங்களைப்போன்ற உதிரிகளை என்னசெய்யும்?... பிடித்து உள்ளே போட்டால் ஆண்டுக்கணக்கில் கிடக்கவேண்டியதுதான்..." என்றுமவர் சொன்னார்.

இதுகாரணமாகவே, கடந்த இரண்டரை ஆண்டுகால யுத்தநிறுத்தச் சூழலைப்பயன்படுத்தி தமிழ்ப் பகுதிகளுக்கு பகிரங்கமாக வந்து போன படைப்பாளிகள் அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக்கூடியதாகக் காணப்படுகிறது.

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு ஒப்பீட்டளவில் கூடுதலான இந்தியர்கள் வந்து போகிறார்கள் தான். ஆனால், அவர்களும் கூடபெருமளவுக்கு சோதிடர்கள் வியாபாரிகள், மீடியாக்காரர் என்றவகையினர்தான். மிகச் சிறிதளவே அறிஞர்கள், கலைஞர்கள், ஆர்வலர் போன்றவகையினர் வந்துபோகிறார்கள். அதாவது வந்து போகும் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் துறைசார் தேவைகளோடு தொழில் நிமித்தமாக வருபவர்கள்தான். கலாசாரத் தூதுவர்களாகவோ அறிவியல் தூதுவர்களாகவோ வந்துபோவோர் மிகச் சிலரே.

இதுதவிர புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிற்கு வந்து போகும் கலைஞர், படைப்பாளிகள்போன்றோர் மிகச்சிறிய அளவு அதுவும் ரகசியமாகவே வந்து போகிறார்கள்.

எப்படியிருக்கிறது நிலைமை? ஒருகாலம் தாய் - சேய் உறவு என்று வர்ணிக்கப்பட்ட ஓர் உறவு இன்று அதிகம் தொழில்சார் உறவாக மாறிவருகிறது.

> **இந்தியத் தூதுவர் நிருபம்சென் இலங்கைத்தீவிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளை கடுமையாகச் சாடியிருந்தார். இந்தப் பத்திரிகைகள் இந்தியாவைப்பற்றிய விரோதபாவத்துடன் நடந்துகொள்கின்றன என்று அவர் கருதியதன் விளைவே அது. உண்மைதான். தமிழ்ப்பத்திரிகைகள் இந்தியாவைப்பற்றி அப்படியெழுதக்காரணம் அவை ஏதேனும் வெளிநாட்டு உளவு நிறுவனங்களிடம் காசுவாங்குகின்றன என்பதனால் அல்ல. மாறாக அவை தமிழ்மக்களின் விருப்பு வெறுப்புக்களை அதிகம் பிரதிபலிக்கின்றன என்பதே மெய்நிலை. அதாவது பாக்கு நீரிணையின் இடைத்தூரம் அதிகரித்துச் செல்கின்றது என்று அர்த்தம்.**

இதில் பிரச்சினையாயிருப்பது, பொடாச்சட்டம் மற்றும் புலிகளின் மீதான தடைச்சட்டம், போன்ற சட்டத்தடைகள் மட்டுமல்ல. அதைவிடமுக்கியமானதும் கொடுமையானதும் என்னவெனில்... மனத்தடையொன்று வளர்ந்து வருகிறது என்பதே. உளவியல் வார்த்தைகளில் சொன்னால், பாக்கு நீரிணை வரவரப்பெரிதாகிக் கொண்டேபோகிறது.

அண்மையில் இந்தியாவிலிருந்து பேராசிரியர் அரசு வந்து போனார். கிளிநொச்சியில் அவர் படைப்பாளிகள், மீடியாக்காரர், ஆர்வலர்கள் என்று பலதரப் பட்டோரோடும் ஒரு சந்திப்பை மேற்கொண்டார். இதன்போது அவரிடம் பலவகைப்பட்டகேள்விகள் கேட்கப்பட்டன. குறிப்பாக ஈழத்தமிழர்களின் துன்பம் தொடர்பாக தமிழ்நாட்டு மக்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்ற தொனிப்படக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்சொன்ன பதில்களின் சாராம்சத்தில் விரக்தியும் இயலாத்தனமும் விரவிக்கிடந்தன. தமிழ்நாட்டில் இப்போதைக்கு நம்பிக்கைவைக்க எதுவுமேயில்லை. என்ற செய்தியைத்தான் அவரால் கிளிநொச்சியில்வைத்துத் தர முடிந்தது.

அரசுக்கு முன்னும் பின்னும் வந்துபோன கலைஞர்கள், படைப்பாளிகள், ஆர்வலர் போன்ற அநேகமாக எல்லா இந்தியர்களுமே இதுவிசயத்தில் கையைவிரிக்கும் நிலையைத்தான் காணமுடிகிறது. சில மிகத் துணிச்சலான புறநடைகளைத் தவிர மற்றெல்லாரும் ஏதோ ஒரு விகிதத்தில் பொடாச் சட்டத்தின் ஊமைகளாகவே காணப்பட்டார்கள்.

இத்தகைய ஒரு பகைப் புலத்தில்தான் ஒரு காலம் தாய்த் தமிழகம் என்று வாஞ்சையோடு அழைக்கப்பட்ட நிலத்துக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்க அதிகரிக்க அந்த வெற்றிடத்துள் ஐரோப்பாவும் ஐரோப்பியப் பண்பாட்டினடியாக வந்த நாடுகளும் மெல்ல மெல்ல உள் நுழையத்தொடங்கிவிட்டன. இது யுத்தநிறுத்த காலத்தில்தான் திடீரென்று பெரும்போக்காய் நிகழ்கிறது என்பதல்ல. மாறாக இலங்கை இந்திய ஒப்பந்தத்திலிருந்து தொடங்கிய ஒரு போக்கின் தொடர்விளைவே இதெல்லாம். இப்போது யுத்தநிறுத்தச் சூழலில் அதன் திரண்டவிளைவுகள் பெருமெடுப்பில் வெளித்தெரிகின்றன என்பதே சரி.

**நிலாந்தன்**

இந்தியா ஈழத் தமிழர்களுக்கு தனது கதவுகளை மூடமூட, தமிழர்கள் மேற்கைநோக்கிச் செல்லும் ஒருபோக்கும் கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக தீவிரமடைந்துவருகிறது. அதன் விளைவுகளில் ஒன்றே இப்பொழுது நிலவும் மேற்கின் அனுசரணையோடான சமாதானமும்.

இப்பொழுது ஈழத்தமிழர்களில், நாலில் ஒருவர் ஒஸ்ரேலியாவும் உட்பட மேற்கில் வசிக்கிறார்கள். அதாவது தமிழர்களின் சனத்தொகையில் நாலில் ஒரு பகுதிக்கும் மேல் புலம் பெயர்ந்துவிட்டது. இது மூன்றில் ஒரு பகுதி அதாவது 10.7 லட்சத்துக்கும் அதிகம் என்றொரு தகவலும் உண்டு.

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈழப்போரின் காசுகாய்க்கும் மரங்களாக மாறிவருகிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, இன்னொருபுறம் இப்பிராந்தியத்திலேயே இஸ்ரேல், ஹொங்ஹொங் போன்ற நாடுகளைப்போல பெருமெடுப்பில் மேற்குமயப்பட்டுவரும் ஒரு சனக் கூட்டமாகவும் மாறிவருகிறார்கள்.

இப்புதியபோக்கை புதுடில்லியிலிருக்கும் தலைவர்களும் ராஜதந்திரிகளும் கொள்கை வகுப்பாளர்களும் இந்தியா முழுவதிலுமுள்ள ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட மீடியாக்காரர்களும் சரியாக அடையாளம் காணவில்லை என்றே தோன்றுகிறது.

கடந்த சுமார் இருதசாப்த காலத்துள் படுவேகமாக நிகழ்ந்து வரும் இப்போக்கின் இறுதிவிளைவு எப்படியிருக்கும்?

கண்டம் கடந்து பிராந்தியம் கடந்து ஈழத்தமிழர்கள் மேற்கில் பதிவைக்கப்படும் இப்போக்கின் முடிவிடம் எது?

ஒருகாலம் இந்தியாவை தாய் என்றும் தம்மை சேய் என்றும் பெருமைப்பட்ட ஒரு சிறிய மக்கள் திரளுக்கு தனது கதவுகளை இறுக மூடியதன் மூலம் இந்தியா அவர்களை மேற்கிடம் மறைமுகமாகக் கையளித்துவிட்டது என்று எடுத்துக்கொள்ளலாமா?

ஒருகாலம் இரத்த உறவாக இருந்துவந்த உறவுகள் இன்று அதிகம் அரசியல் மயப்பட்டு அது ஒரு அரசியல் விவகாரமாகவோ அல்லது சட்டவிவகாரமாகவோ அல்லது புலனாய்வு விவகாரமாகவோ மாறியதற்கு யார்பொறுப்பு?

தூர்ந்துபோன உறவுகளை மீளப்புதுப்பிப்பதற்குக் கிடைத்த அருமையான ஒரு சந்தர்ப்பமே கடந்த சுமார் இரண்டரை ஆண்டுகால யுத்தநிறுத்தம். அதைக் கையாளத் தவறியதற்கு யார்பொறுப்பு?

சில மாதங்களுக்குமுன்பு முன்னாள் இந்தியத் தூதுவர் நிருபம்சென் இலங்கைத்தீவிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளை கடுமையாகச் சாடியிருந்தார். இந்தப்பத்திரிகைகள் இந்தியாவைப்பற்றிய விரோத பாவத்துடன் நடந்துகொள்கின்றன என்று அவர் கருதியதன் விளைவே அது. உண்மைதான். தமிழ்ப் பத்திரிகைகள் இந்தியாவைப்பற்றி அப்படியெழுதக்காரணம் அவை ஏதேனும் வெளிநாட்டு உளவு நிறுவனங்களிடம் காசுவாங்குகின்றன என்பதனால் அல்ல. மாறாக அவை தமிழ்மக்களின் விருப்பு வெறுப்புக்களை அதிகம் பிரதிபலிக்கின்றன என்பதே மெய்நிலை. அதாவது, பாக்கு நீரிணையின் இடைத்தூரம் அதிகரித்துச் செல்கின்றது என்று அர்த்தம்.

இதன் நேரடிவிளைவே மீனவர்களின் பிரச்சினையும். யுத்த காலங்களில் அதிகம் தீவிரமற்றிருந்த இந்தப்பிரச்சினை அண்மையாண்டுகளில் யுத்தநிறுத்தகாலத்தில் கட்டுப்படுத்தவியலாத ஒரு வளர்ச்சிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இருதரப்பு மீனவர்களுக்குமிடையிலான உறவுகள் உடைய உடைய இரு நாடடின் கடற்படைகளும் புலனாய்வு நிறுவனங்களும் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு உளவியல் மதில் கடலில் உருவாகத் தொடங்கிவிட்டது. இதெல்லாம் எங்கே கொண்டுபோய் விடும்?

பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு முன்புவரை சேது அணைபற்றிக் கதைத்திருந்தால் அதிகம் மகிழ்ச்சி அடைந்திருக்கக்கூடிய தரப்பாக தமிழர்களே இருந்திருப்பர். ஆனால் இப்பொழுது சேது அணைகுறித்து அதிகம் அச்சமடைவது தமிழர்களே. ஏனெனில் அது தமிழர்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களும் டில்லியிலுள்ள அரசியல்வாதிகளும் சேர்ந்து போடும் ஒருபாலம் என்றே தமிழர்கள் பார்க்கும் ஒரு நிலை. கடந்த சுமார் பதினேழு ஆண்டு. காலத்துள் எல்லாமும் தலைகீழாய் மாறிவிட்டது.

தமிழர்களின்பலம் என்று முன்பு சிங்களத்தலைவர்கள் அஞ்சியது தமிழ்நாட்டைக் கண்டுதான். அந்தப்பலத்தை உடைக்கும் நோக்கத்தோடு ஜெயவர்த்தன தொடக்கி வைத்த ராஜதந்திரப்பாரம்பரியம் ஒன்றை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல பின்புவந்த சிங்களத் தலைவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் துணைபுரியப்போகிறதா?

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பிய பிரதமர் மகிந்த ராஜபக்சவை ராஜ்பல் அபயநாயக *'சண்டே ரைமஸ்'*சுக்காக பேட்டி கண்டிருந்தார். அதில் ஈழவேந்தன் எம்.பி. திருப்பி அனுப்பப்பட்டது பற்றி பிரஸ்தாபித்த ராஜபக்ச, அந்த நாடுகடத்தல் மூலம் இந்தியா புலிகளின் மீது அழுத்தம் பிரயோகித்திருப்பதாகவும் இதில் புலிகளுக்குத் தெளிவான ஒரு சமிக்ஞை இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, ஜெயவர்த்தன தொடக்கிவைத்த தடத்தில் அவர்களுடைய ராஜதந்திரம் மிகவும் வெற்றிகரமாக முன்னேறிவருகிறது என்பதற்கான ஆகப்பிந்திய உதாரணமாக ஈழவேந்தன் நாடுகடத்தப்பட்டதை ராஜபக்ச சுட்டிக்காட்டமுயல்கிறார்.

ஆயின், ஈழத்தமிழர்களையும் இந்தியாவையும் நெருங்கவிடாது காய்நகர்த்தும் சிங்களத் தலைவர்களுக்கு இந்தியா தொடர்ந்தும் வெற்றிகளைக்கொடுக்கப் போகிறதா?

இது இப்படியே போனால் தமிழர்கள் மேலும் மேலும் மேற்கை நோக்கியே தள்ளப்படுவார்கள். இதனால் சமாதானமும் அதிகபட்சம் மேற்குமயப்பட்டதாகவே இருக்க முடியும். இது ஒருகட்டத்தில் இந்தியா ஈழத்தமிழர்களை ஒரேயடியாக இழந்துவிடுவதிலா வந்து முடியப்போகிறது?

# நறுக்கென...



அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய விசேட கடற்படைப்பிரிவின் கட்டளைத்தளபதியான லெப்.ஜெனரல் விலஸ்.சீ. கிறெக்ஸனின் குடாநாட்டுக்கான விஜயமும்- பாதுகாப்பு நிலவரம் குறித்த ஆராய்வும் தமிழ் மக்களை அச்சுறுத்தும் தன்மை கொண்டதாகவே அமைந்துள்ளது.

சமாதானச்சூழல் நிலவும் வேளையில், போர் நிறுத்தம் இரண்டரை ஆண்டுக்கும் அதிககாலம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையில், இந்த வகையிலான அயலக மற்றும் அந்நியப்படையதிகாரிகளின் குடாநாட்டுக்கான இராணுவ நோக்குடனான விஜயங்களும், இராணுவ

## ஒரு தட்டில் துப்பாக்கியும் இன்னொரு தட்டில் வெண்புறாவும்

நிலைகளில் அவர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளும், சிங்கள இராணுவ அதிகாரிகளுக்கு அவர்கள் வழங்கிவரும் அறிவுரை- ஆலோசனைகளும் நிச்சயமாக சமாதானத்தை எப்படி நிலை நிறுத்துவது என்பது சம்பந்தமாக இருக்கவே இருக்காது!

தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள இனவெறியரசு மேற்கொண்ட மனிதநேயமற்ற காட்டுமிராண்டித்தனமான- சனநாயகத்திற்கு எதிரான யுத்தத்திற்கு மிகப்பெருமளவில் அனுசரணை வழங்கிய ஆயுதங்களையும் ஏனைய இராணுவ உதவிகளையும் வழங்கிய, 'கிறீன்பரட' போன்ற அமெரிக்க விசேட படையினரை அனுப்பி இலங்கைப்படைகளுக்கு பயிற்சிகளையும் வழங்கி போரியல் நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்கிய அமெரிக்க சனநாயத்தின் பண்பினை தமிழ் மக்கள் மிகமிக நன்றாகவே அறிவார்கள்.

அரச பயங்கரவாதத்திற்கு சனநாயக தர்மமான முத்திரை குத்தி அங்கீகரித்து கௌரவிக்கும் அமெரிக்க மரபு உலகப்புகழ்பெற்ற ஒன்றேயாகும்.

விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதப்பட்டியலிட்டுவிட்டு மனித உரிமைகளை முற்றாகவே நிராகரித்து தமிழினத்தை பு,ண்டோடு அழிக்கக் கங்கணம் கட்டி இயங்கிய சிங்கள பேரினவாதிகளை தட்டிக் கொடுத்து அவர்களை சனநாயகவாதிகளாக இனங்காட்டி இந்து சமுத்திரப்பிராந்தியம் மீதான தனது ஆதிக்க நலனை பாதுகாக்கவும், விஸ்தரிக்கவும் இலங்கையை தளமாக்க திட்டமிட்டு இயங்கும் அமெரிக்க மேலாதிக்க சிந்தனை ஒன்றும் புதிரானதல்ல.

"ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கைக்கு கிடைத்த வரலாற்றுப்புகழ் மிக்க தோல்வியும், ஆனையிறவில் விழுந்த அடியும் சிறிலங்காவுக்கு கொடுத்த வலியையும் அவமானத்தையும் விட அமெரிக்காவுக்கே அதிகம் கொடுத்தது என்பது இராணுவ ஆய்வாளர்களின் கூற்று.

ஆனையிறவின் வீழ்ச்சி அமெரிக்க இராணுவப்பயிற்சியாளர்களால் சகிக்கவே முடியாத ஒன்று. அதனால்தான் போர் தொடர அவர்கள் அனுமதிக்கவில்லை. யுத்தத்தில் இலங்கையரசு தோல்வியடைவதை- தமிழீழ தனியரசு உருவாவதை தனது அரசியல் இராணுவ அபிலாசைகள் கருதி அமெரிக்கா விரும்பவில்லை.

அதனால்தான் அது சமாதானப்பாட்டை சகட்டுமேனிக்கு வலியுறுத்திப்பாடிக்கொண்டு இருக்கிறது. தனக்குப் பிடித்த சமாதானம் ஒன்றை இங்கு திணிக்க முயல்கிறது. இந்தியாவும் இம்மாதிரியான சுயநலம் கருதிய அணுகுமுறையையே அமெரிக்காவுக்கு எதிராக இரகசியமாகக் கையாண்டும் வருகிறது.

தனது இராணுவ அதிகாரிகளை அனுப்பி இராணுவ நலன்களுக்கு ஆலோசனை வழங்கும் அமெரிக்கா நோர்வேயு,டாக சமாதானத்தையும் ஓதிவருகிறது.

கோமாளித்தனமாக இல்லையா? இதனை உணராதவர்கள் மடையர்களில்லையா? அமைதித்தராசின் ஒருதட்டில் துப்பாக்கியையும் மறுதட்டில் வெண்புறாவையும் வைத்து சமாதான சமன்பாடு செய்யமுயல்வது தான் வேடிக்கை!

அமெரிக்க அதிகாரியின் விஜயத்திற்கு குடாநாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தது நல்ல சகுனமே!

---

# போதையில் உளறும் பேதையின் குரல்...?



கடைசியாக அந்தக்கோமாளி இளவரசர் தன்னை இரண்டாம் ஜெயவர்த்தனாவாக இனங்காட்ட முயன்றுள்ளார் என்றே கூறவேண்டும்.

அந்தக் காலஞ்சென்ற ஜெயவர்த்தனா தொலைநோக்குச் சிந்தனையற்ற அதிகார வெறியின் பாற்பட்ட அறிவீனத்தின் உச்சியில் நின்றுகொண்டு யுத்தமா? சமாதானமா? என்று நிராயுதபாணிகளாக நின்ற தமிழ்மக்களை நோக்கி கிட்டத்தட்ட மூன்று தசாப்தத்திற்கு முன் கேட்ட கேள்வியின் முட்டாள்தனத்தின் பின்விளைவையே இன்னமும் சிங்கள தேசம் அனுபவித்து வருகின்றதென தெரிந்து கொண்டு, அநுரா பண்டாரநாயக்கா அதே சவாலை மீண்டும் விடுத்திருக்கிறார்.

"சண்டையென்றாலும் சரி, சமாதானமென்றாலும் சரி'.... என்பதே இந்தப்போதையில் புலம்பும் பேதையின் குரலாக வெளிவந்துள்ளது.

அக்காவின்(சந்திரிகா) காலத்தில் மாமாவின் (ரத்வத்தை) நெறிப்படுத்தலில் நடந்த அந்த பெரும் தொடர்யுத்தத்தையும் அதற்கு கிடைத்த மரணஅடியையும் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்து கொண்டு கேலியாக விமர்சித்துக் குதூகலித்த இந்த குண்டுப்பாப்பா அநுரா இப்போது சவால் விடுகிறாரே..!

"என்னடா இந்த சிங்கள தேசத்திற்கு வந்த சோதனை?"

அடுத்த சனாதிபதிக்கனவில் மிதந்து கொண்டு பிரதமர் பதவியை குறிவைத்துக் காத்திருந்து அதைக்கோட்டை விட்டுவிட்டு, ஒரு சதாரண ஊர்சுற்றி அமைச்சுப் பொறுப்பில் ஒட்டிக்கொண்டு ஜே.வி.பி ஆணைக்கு இயங்கும் பொம்மலாட்டப்பொம்மையாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்த முன்னாள் சபாநாயகரின் கோமாளித்தனங்கள் பிரசித்தமானவையாகும். 'சண்டேலீடர்' ஆங்கில வார ஏட்டை படிப்பவர்கள் குலுங்கக்குலுங்கச்சிரிப்பு இந்தக்குலுங்கக் குலுங்க நடமாடும் அநுராவைப்பற்றித்தான்..!

சந்திரிகா பிழைவிட்டுவிட்டார். சண்டையென்றாலும் சரி, சமாதானமென்றாலும் சரி, எனச் சவால் விடும் வீரதீர பாராக்கிரம்மிக்க தன் அன்புக்குரிய தம்பியை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஆக்கியிருந்தால் கடைசி "லான்ஸ் கோப்ரல" பட்டமாவது அவரை அலங்கரிக்கக் கொடுத்திருக்கமுடியும்.

ரத்வத்தை மாமாவுக்கு ஜெனரல் பட்டம் கொடுத்து பெருமைப்படுத்திய அதிகாரச்சீமாட்டியல்லவா?

அதுசரி கருணா விவகாரத்தில்- அதுதான் சிங்கப்பு,ருக்கு அவரைக்கூட்டிச்சென்ற விவகாரத்தில் அவர் பெயர் வெளிவந்ததும் ஆடிப்போய் விழி பிதுங்கி மறுப்பறிக்கை விட்டு இதனால் தனது உயிருக்கு ஆபத்து என்று அலறிய அநுரா சண்டையா, சமாதானமா எனச் சவால் விடுகிறார் என்றால் அது சாமானியமான விடயமா? என்ன? போகிற போக்கைப்பார்த்தால் அநுரா அடுத்துவரும் வாரங்களில் இராணுவ பாதுகாப்பு முன்னரங்க நிலைகளுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைகளை ஆராய்ந்து இராணுவ தரப்புக்கு ஆலோசனையும் அறிவுறுத்தலும் கூட கொடுக்கக்கூடும் அபாயமும் இருக்கவே செய்கிறது...!

என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா?

கொஞ்சம் பகிடியாகவும் தான் பேசுவோமே..!

---



சந்திரிகா அம்மையார் தனக்கு கடந்த சில மாதங்களாக தலையிடியைத்தந்து கொண்டிருந்த ஒரு பொறுப்பிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக்கொண்டுள்ளார்.

அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி என்ற எந்த நேரத்திலும் உடைந்து விடக்கூடியநிலையில் உள்ள முரண்பாட்டு

# கந்தல் உடையில் கிழிசல் தொடரவே செய்யும்

மூட்டைகளின் ஒன்றிணைப்பான கூட்டணிக்கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து விலகிக் கொண்டதன் மூலம் அந்தப்பதவியில் தான் இருந்த போது அனுபவித்த அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், குழப்பங்கள் ஆகியவற்றில் இருந்து நிம்மதிப்பெருமூச்சுடன் சுதந்திரம் பெற்றுள்ளார் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், அமைச்சரவைப்பேச்சாளரோ- அதாவது மங்கள சமரவீரவோ அதனை சற்று நாகரிகமாக மெருகுபடுத்தி, நாட்டின் அபிவிருத்திப்பணிகளிலும் சமாதான நடவடிக்கைகளிலும் முழுமையாக நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்காகவே சனாதிபதிக்கூட்டணியின் தலைமைப்பதவியைத் துறந்துள்ளார் என அறிக்கை விட்டுள்ளார்.

பிரச்சினையை திரிபுபடுத்துவதும், சமாளித்து அறிக்கைவிடுவதும் ஆட்சியில் உள்ளோரின் இயல்புதான். ஆனால், சந்திரிகா அம்மையாரின் இயல்பு முற்றிலும் மாறுபட்டது. அரசியலில், கழுவிற மீனில் நழுவிற மீன் வகையைச் சேர்ந்தவர் அவர். தன்னைப்பாதுகாக்க தன் அதிகாரப்பதவியை இறுக்கமாக்கிக்கொள்ள எதனையும் செய்ய தயங்காதவர் அவர்.

தன்னையும் தனது தவறுகளையும் நியாயப்படுத்திக்கொண்டே அதற்கான காரணிகளை மற்றவர் மீது சுமத்துவதில் அவர் வல்லவர்.

சரி.. ஏன் கூட்டணித்தலைமையை அவர் திடீரெனத்துறந்தார் என்ற கேள்விக்கு என்னபதில்?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆயிரம் ஒட்டுப் போட்ட ஒரு கந்தல் புடவையாகும்... அதில் கிழிசல் தொடரும் சாத்தியமே உள்ளது. எனவே தலைவியென்ற வகையில் அதனை முற்றாக நைந்து போகாமல் காக்கும் திராணியும் நம்பிக்கையும் அவருக்குக் கிடையாது. ஒரு தையல் போட இன்னொரு பீத்தலை உருவாக்கும் ஜே.வி.பியின் கெடுபிடித்தனத்தை இனிமேலும் தாங்கிக்கொண்டு ஆட்சியைத் தக்கவைப்பதென்பது வருங்காலத்தில் தன்னால் முடியாது என்பதை அவர் உணர்ந்து கொண்டுள்ள நிலையில் தன்மீது பழிவிழாமல் தப்பிக்க கையாண்ட மூலோபாயமே அவரின் பதவி விலகல் அரங்கேற்றமாகும்.

பொருளாதார நெருக்கடி அதனை சமாளிக்க சமாதானத்தை முன்னெடுக்குமாறு கொடுக்கப்பட்டு வரும் அழுத்தம், மீண்டும் போரை ஆரம்பிக்கப்பயம் விடுதலைப்புலிகளுடன் பகிரங்கமாக முரண்படமுடியாத சூழல்..இவற்றை 'அரசு' என்ற வகையில் சுமுகமாக எதிர்கொள்ள அதற்குள் இருந்து வெளிப்படும் அச்சுறுத்தலுடன் கூடிய எதிர்ப்பு.

இவற்றை கட்சித்தலைவியாக இருந்து அவரால் சமாளிக்கவே முடியாது. கூட்டத்தோழர்கள் அனுசரணையாளர்களாகவன்றி, அதிகாரம் செய்பவர்களாக இருப்பதை அம்மணியால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

வேறுவழியின்றி விலகிவிட்டார் அவ்வளவுதான்.

இனி என்ன நடக்கும்..?

தான் சனாதிபதியாக இருந்தபடியே, ஐ.ம.சு முன்னணி அரசுள் வரும் முரண்பாடுகளுக்கு.. குறிப்பாக சமாதானம் தொடர்பான எதிர்ப்புகளுக்கு தான் பொறுப்பில்லை என்று நழுவப்போகிறார்...!

கழுவுற மீனில் நழுவுற மீன்தானே அவர்.

---

# சனநாயகத்தின் பெயரால் துரோகிகளின் கூட்டணி




ஏற்கனவே குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கும் சிறிலங்காவின் சனநாயகத்திற்கு மரண ஆபத்தொன்று வர இருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே ஈழமக்கள் சனநாயகக்கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை (வரதர்) முன்னணி, சனநாயக மக்கள் விடுதலைமுன்னணி, ஈழதேசிய சனநாயக விடுதலை முன்னணி என்றெல்லாம் தமிழ்த்தேசிய விடுதலைக்கு எதிராக பேரினவாதிகளுடன் இணைந்து அவர்களின் இராணுவத்திற்கு அடிவருடிகளாகி தமிழின அழிப்பிற்குத்துணை போனவர்களின் நீண்ட பட்டியல் ஒன்று இருக்கவே செய்கிறது.

கட்சிகளின் பெயர்களில் மட்டும் புரட்சி, சனநாயகம், விடுதலை, தேசியம் என்ற சொற்கள் இருந்தாலும் இவர்களுக்கும் இச் சொற்களுக்கும் எந்தவித சம்பந்தமும் எக்காலத்திலும் இருந்தது கிடையாது.

இவர்களுக்குத் தொடர்புடைய ஒரே சொல் 'துரோகத்' தனம், என்பது மட்டுமேயாகும்.

அண்மையில் நாட்டை விட்டு குடும்ப சமேதராக சிங்கப்பு,ருக்கு தப்பியோடியதாகக் கூறப்படுகின்றவ்ரும், கிழக்கின் இன்றைய குழப்பங்களுக்கு எல்லாம் காரணமானவரும் துரோகிகள் பட்டியலில் அண்மைக்காலத்தில் தன்னைப்பதிவு செய்து கொண்டவருமான கருணா என்பவர் சிலவாரங்களின் முன்னர் திடீரென்று தான் சனநாயக நீரோட்டத்தில் குதிக்கப்போவதாகவும், புதிய கட்சியொன்றினை ஆரம்பிக்கப்போவதாகவும் அறிக்கையொன்றை விடுத்து சனநாயத்திற்கு அதிர்ச்சி ஒன்றை ஏற்படுத்தினார்.

அவரது கட்சிக்கு தனது ஆதரவு இருக்கும் என கருணா மீது திடீர் கருணையைப் பொழியும் டக்ளஸ் தேவானந்தாவும் தெரிவித்திருந்தார்.

ஆனால், அறிக்கைவிட்டதோடு சரி, ஆள் தலைமறைவாகிவிட்டார்.

ஈ.பி.டி.பியை ஆரம்பித்து ஆசீர்வாதம் கொடுத்தவர் பிரேமதாஸ சனநாயக மக்கள் விடுதலைமுன்னணி என்ற டி.பி.எல்.எவ் வுக்கும் அவர்தான் ஆரம்பகர்த்தா.. வரதரணிக்கு ஆசிவழங்கி ஆதரவும் வழங்கியது அயலகமான இந்தியாவாகும். ஈ.என்.டி.எல்.எவ் ஒரு இந்தியக்கட்சியென்றே கூறவேண்டும். இப்போது கருணாவுக்கு சனநாயக வழியைக் காட்டமுயன்றது இலங்கை இராணுவத்தின் புலனாய்வுத்துறையும்... அரசுமேயாகும்.

இக்கட்சிகள் யாவும் சிங்கள மற்றும் அந்நிய அரசின் 'ஜால்ராக்'களாக இருந்து கொண்டும் கைக்கூலிகளாக இயங்கிக்கொண்டும் தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுக்க தாமும் போராடுவதாகவும் தாமும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தான் என்றும் கோஷமிட்டு வருவது தான் கோமாளித்தனத்தின் உச்சக்கட்டமாகும்.

சரி... இப்போது விடயத்திற்கு வருவோம். இவ்வளவு காலமும் தனித்தனியாக அரசியல் தில்லுமுல்லுச் செய்து பிழைப்பை நடத்தியவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணியொன்றை அமைத்து சனநாயகத்தை காப்பாற்றப்போகிறார்களாம்... கருணா குழுவும் இதில் இணைகிறதாம்.

கடைசியாக கருணா சேரவேண்டிய கரைக்குச்சேர்ந்துவிட்டார். சனநாயகம் தான் பாவம்...

அது சரி, கட்சிக்கு என்ன பெயர் என்று கேட்டீர்களா?

சனநாயக துரோகிகள் கூட்டணி என்று வைத்தால் பொருத்தமாக இருக்கும்.

**செங்குட்டுவன்**

# புலனாய்வு அமைப்பினது ஒத்துழைப்பாளர்களாக செயலாற்றும் எதிர்க்குழுக்கள்

*"தேசிய இனவிடுதலைப்போராட்டங்களுக்கு உதவி செய்கின்ற நன்நோக்கமுள்ள நாடுகளாக தம்மை இனம் காட்டும் வல்லரசுகள் தம் தேசிய நலன்கள் மீதே குறியாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாது ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தேசிய இனங்களை மீட்பது குறித்தும் அக்கறை செலுத்துவதில்லை. மாறாக அந்நாடுகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பக்கத் துணையாக இருந்து தம் வல்லாதிக்க நிலையை பலப்படுத்திக் கொள்கின்றன. அந்நோக்கத்தினை எட்டுவதற்காக தேவைப்படும் பட்சத்தில் தேசிய இனவிடுதலைப்போராட்ட இயக்கங்களை அடக்கி ஒடுக்க எதிர்க்குழுக்களை கையாள்கின்றன."*

உலகிலுள்ள தேசிய இன விடுதலைப்போராட்ட இயக்கங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தமது இனமக்களை விடுவிப்பதற்கான ஆயுதப்போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளன; வருகின்றன. அப்போராட்டங்கள் பலது வெற்றிபெற்றும் ஒரு சிலது தோல்வியில் முடிந்ததுமாக உலக வரலாற்றில் நடந்து முடிந்துள்ளன.

இவ்வுலக அரசியல் வரலாற்றை உற்றுநோக்கின் உலக வல்லரசு நாடுகளின் தலையீடுகள் பற்றியும், தமக்கு சார்புநிலை இல்லாத தேசிய இன விடுதலைப்போராட்ட இயக்கங்களை அழித்தொழிப்பதற்கான எதிர்க் குழுக்களை உருவாக்கும் புலனாய்வு தந்திரோபாயங்கள் பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.

அதாவது தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கு உதவி செய்கின்ற நன்நோக்கமுள்ள நாடுகளாக தம்மை இனம் காட்டும் வல்லரசுகள் தம் தேசிய நலன்கள் மீதே குறியாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாது ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தேசிய இனங்களை மீட்பது குறித்தும் அக்கறை செலுத்துவதில்லை. மாறாக அந்நாடுகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பக்கத்துணையாக இருந்து தம் வல்லாதிக்க நிலையை பலப்படுத்திக்கொள்கின்றன. அந்நோக்கத்தினை எட்டுவதற்காகத் தேவைப்படும் பட்சத்தில் தேசிய இன விடுதலைப்போராட்ட இயக்கங்களை அடக்கி ஒடுக்க எதிர்க்குழுக்களை கையாள்கின்றன.

இத்தகைய களயதார்த்த சூழலில் தேசிய இனவிடுதலைப் போராட்ட இயக்கங்கள் எதிர்கொண்ட ஒரு சில வல்லரசுகளின் புலனாய்வு தந்திரோபாய நடவடிக்கைகள் பற்றி இங்கு சற்று விரிவாக நோக்குவோம்.

அமெரிக்கா வியட்நாமை ஆக்கிரமித்திருந்த காலப் பகுதிகளில் வியட்நாம் மக்களின் தேசிய விடுதலைப்போராட்ட இயக்கத்தினை அழித்தொழிப்பதற்கு அமெரிக்க இராணுவ, புலனாய்வு மூலோபாயங்களை வகுத்து தந்திரோபாயங்களை மேற்கொண்டிருந்தபோதும் வியட்நாம் மக்களின் விடுதலைவேட்கை எழுச்சி பெற்றே இருந்தது.

இப்போராட்டத்தின் வியட்நாம் போராட்ட பலத்தை சீர் குலைத்து சிதைப்பதற்கு அமெரிக்கா மத்திய புலனாய்வு நிறுவனத்தினை (CENTRAL INTELLIGENCE AGENCY-CIA) களத்தில் இறக்கி இருந்தது. அப்புலனாய்வு நிறுவனம் வியட்நாம் மக்களிடையேயுள்ள முரண்பட்ட கருத்துடையோர்களைக் கொண்டு எதிர்க்குழுக்களை உருவாக்கி வியட்நாம் தேசிய விடுதலைப்போராட்ட இயக்கத்திற்கு எதிரான பணிகளில் ஈடுபடுத்தியது. எனினும் எதிர்க்குழுக்கள் மரபுரீதியிலான படையணியாக வளர்ச்சியடையாதவாறு பார்த்துக் கொள்வதிலும் "CIA" போதிய கவனம் செலுத்தியது.

இக்குழுக்கள் வியட்நாம்தேசிய விடுதலைப்போராட்ட இயக்கத்திற்கு எதிரான பிரசாரங்களை, கிளர்ச்சிகளை மேற்கொண்டும் புலனாய்வு மற்றும் வியட்நாம் தேச பக்தியுள்ளவர்களை கொலை, ஆட்கடத்தல் செய்தும் வந்தன. "CIA" க்கு தேவையான ஆளணி வளத்தையும் கொடுத்து உதவி வந்தன.

இவ்வகையான பாரிய அச்சுறுத்தல்கள், சவால்களை வியட்நாம் தேசிய விடுதலை இயக்கம் எதிர்கொண்ட போதிலும் அமெரிக்காவினால் அப்போராட்டத்தினை நசுக்க முடியவில்லை. மாறாக வியட்நாம் மக்களின் வீரத்தனமான போராட்டத்தினால் அமெரிக்கா தோற்கடிக்கப்பட்டு வியட்நாம் மண்ணை விட்டு அமெரிக்கா வெளியேறியது. அதன் போது எதிர்க்குழுக்கள் சிதைவடைந்து பரிதாபமான அவலங்களையே சந்திக்க நேரிட்டது.

*இரு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போரிட்டு தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தை பாதுகாக்க வேண்டிய நிலைக்கு புலிகள் இயக்கம் தள்ளப்பட்டது. இது இப்படியிருக்க ஈ.என். டி.எல்.எவ், ஈ.பி.ஆர்,எல்,எவ், ரெலோ ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய இராணுவம் (ரி.என்.ஏ) என்கிற எதிர்க்குழுவை "றோ" புலிகளை அழித் தொழிப்பதற்கு ஒழுங்குபடுத்தியது. இம்மும்முனை தாக்கங்கள் எல்லாவற்றையும் புலிகள் இயக்கமே தாங்கிக்கொள்ளவேண்டியிருந்தது. அன்றாட உணவிற்காக போர்புரியவேண்டியிருந்தது. எனினும் போர்புரிவதற்கு புலிகளின் தலைமைக்கும் புலிகளுக்கும் இருந்த மனோ பலத்தால் "றோ" வினது அனைத்து தந்திரோபாய நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்தது.*

இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவும் (RESEARCH AND ANALYSIS WING -RAW) தேசிய இனவிடுதலைப்போராட்டங்களை இந்தியாவின் தேசிய நலன்களுக்காக, இலாபங்களுக்காக பயன்படுத்தி வந்துள்ளது, வருகின்றது; இவ்வுண்மை வரலாற்று நிகழ்வுகளில் ஒன்றை இங்கு அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

**—— நீலன் ——**

இந்தியாவினது பிராந்திய பாதுகாப்பு நலன்களுக்கு பெரும் அச்சுறுத்தல்களாக சிறிலங்காவினது மேற்குலக சார்பு நிலைக் கொள்கை இருந்து வந்தது. இக்காலகட்டத்தில் தான் சிறிலங்காவில் 83 கலவரத்தினால் தமிழ் இளைஞர்கள் எழுச்சி பெற்று தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டார்கள். இவ்வாறாக இணைந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் பயிற்சிக்காக இந்தியா சென்றார்கள். இச்சந்தர்ப்பத்தை "றோ" தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கில் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது.

வங்களாதேஷ் முக்திபாசினி, சாந்திபாசினி இயக்கங்களுக்கு கெரில்லாப் போர்முறைப் பயிற்சியாளர்களாக இருந்த பழைய "றோ" அதிகாரிகளே பயிற்சிகளை வழங்கினார்கள்.

தமிழர்தேசிய விடுதலைப்போராட்ட இயக்கங்களுக்குள் தலைமைத்துவம், ஆயுத வளம், நிர்வாக அமைப்பு மற்றும் செயலாக்கம் போன்ற விடயங்களில் புலிகள் இயக்கம்தான் முதல் இடத்தில் இருந்தபோதிலும் செயலிழந்து போயிருந்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ஈறோஸ் போன்ற அமைப்புக்களுக்கு "றோ" முக்கியப்படுத்தி பயிற்சிகளை வழங்கியது. எனினும் தவிர்க்க முடியாத தமிழரின் சக்தியாகவும், தமிழரின் பிரதான பலமாகவும் புலிகள் இயக்கம் இருந்ததனால் பின்நாட்களில் புலிகள் இயக்கத்தினையும் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சித் திட்டத்தில் "றோ" இணைத்துக்கொண்டது.

*வியட்நாம் போராட்ட பலத்தை சீர் குலைத்து சிதைப்பதற்கு அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தினை (CENTRAL INTELLIGENCE AGENCY-CIA) களத்தில் இறக்கி இருந்தது. அப்புலனாய்வு நிறுவனம் வியட்நாம் மக்களிடையேயுள்ள முரண்பட்ட கருத்துடையோர்களைக்கொண்டு எதிர்க்குழுக்களை உருவாக்கி வியட்நாம் தேசிய விடுதலைப்போராட்ட இயக்கத்திற்கு எதிரான பணிகளில் ஈடுபடுத்தியது. எனினும் எதிர்க்குழுக்கள் மரபுரீதியிலான படையணியாக வளர்ச்சியடையாதவாறு பார்த்துக்கொள்வதிலும் "CIA" போதிய கவனம் செலுத்தியது.*

இருப்பினும் புலிகள் இயக்கத்திற்கும் ஏனைய அமைப்புகளுக்கும் இடையே முரண்பாடுகளை, கலகங்களை உண்டுபண்ண வேண்டிய சந்தர்ப்பம் வரும்வேளை பயன்படுத்தக்கூடியவாறு "றோ" தமக்கு விசுவாசமான எதிர்க்குழுக்களை ஓரளவு பலப்படுத்தி வைத்திருந்தது. மொத்தமாக தமிழ்த் தேசியம் பலம் பெற்றுவிடக்கூடாது என்பதிலும், தமிழ் இளைஞர் சக்தியை பலவீனமான நிலைக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதிலும் "றோ" போதிய கவனத்தை செலுத்தி வந்தது.

சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தமிழர் தாயகத்தை, தமிழ்மக்களை விடுவிப்பதற்கான போரில் புலிகள் இயக்கம் அர்ப்பணிப்புக்களுடன் வீரத்தனமாக ஈடுபட்டது. அத்தீவிரமான போராட்டம் சில ஆண்டுகளிற்குள் சிறிலங்கா அரசை ஆட்டங்காணச் செய்து இந்திய இலங்கை ஒப்பந்தமும் ஏற்பட்டு, தமிழர் தாயகம் இந்தியப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போரிட்டு தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தை பாதுகாக்கவேண்டிய நிலைக்கு புலிகள் இயக்கம் தள்ளப்பட்டது. இது இப்படியிருக்க ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஒன்றிணைந்து தமிழ்த்தேசிய இராணுவம் (TNA) என்கிற எதிர்க்குழுவை "றோ" புலிகளை அழித்தொழிப்பதற்கு ஒழுங்குபடுத்தியது. இம் மும்முனை தாக்கங்கள் எல்லாவற்றையும் புலிகள் இயக்கமே தாங்கிக் கொள்ளவேண்டியிருந்தது. அன்றாட உணவிற்காக போர்புரியவேண்டியிருந்தது. எனினும் போர்புரிவதற்கு புலிகளின் தலைமைக்கும் புலிகளுக்கும் இருந்த மனோபலத்தால் "றோ" வினது அனைத்து தந்திரோபாய நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்தது. இந்தியப்படை வெளியேறும்போது எதிர்க்குழுக்கள் தப்பியோடி இந்தியாவினுள் தஞ்சம் புகுந்தார்கள்.

புலிகள் இயக்கம் மரபுவழி இராணுவமாக வளர்ச்சிபெற்று தமிழ்த்தேசிய பலத்தை பாதுகாத்தது. இப்பலம் பொருந்திய புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தி அழித்தொழிப்பதற்கு சிங்கள அரசு முக்கிய வழிகளை பயன்படுத்தி வருகின்றது. அவையாவன.

(01) வெளிப்படையான யுத்தம்.

(02) இறைமைக்கு பங்கம் விளைவிப்பதாக குற்றம் சுமத்துவதன் மூலம் சர்வதேச ஆதரவுகளை கிடைக்காமல் செய்தல்.

(03) அழித்தொழிப்பதற்கு புலனாய்வு அமைப்பிற்கு வழி அமைத்துக்கொடுத்தல்.

போன்றவற்றில் அழித்தொழிப்பதற்கு புலனாய்வு அமைப்பிற்கு வழி அமைத்துக் கொடுத்தல் என்கின்ற வழிமுறையை மட்டும் அலசி ஆராய்ந்து பார்ப்போமானால் சிங்கள இராணுவப்புலனாய்வுப் பிரிவு கையாளும் எதிர்க்குழுக்கள் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்.

அதாவது ராசிக் குழு, புளொட்மோகன் குழு, வரதர் குழு, சித்தார்த்தன் குழு, டக்ளஸ்குழு, கருணா குழு போன்ற எதிர்க் குழுக்களை சிங்கள இராணுவப்புலனாய்வுப் பிரிவு கையாண்டு வந்துள்ளது, வருகின்றது.

இத்தமிழ் விரோதக்குழுக்களை வைத்தே இராணுவப்புலனாய்வுப் பிரிவு தம் நோக்கங்கள் சார்ந்த பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அப்பணிகளாக.

(01) தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை குழப்பவும் , பலவீனப்படுத்தவும் பிரசாரம் மேற்கொள்ளல்.

(02) நாசவேலை, அச்சுறுத்தல்களை செய்தல் ( தமிழ் தேசிய பக்தியுள்ளவர்களை கொலை செய்தல், ஆட்கடத்தல்)

(03) புலனாய்வு முகவர் நிலையங்களாக இயங்குதல்.

(04)) போர் நடைபெறும் போது சிங்களப் படையினரின் மேலதிக கடமைகளை கவனித்தல்.

(05)LRRP க்கு ஆட்களை வழங்குதல்.

*"எமது எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள். எமது எதிரியையும் அவனது நோக்கத்தையும் நாம் இனங்கண்டுகொள்வது சுலபம். ஆனால், எமது துரோகிகள் முகமூடி அணிந்தும் நடமாடுகிறார்கள். எதிரியின் கைப் பொம்மைகளாக செயற்படுகிறார்கள் தமது சுயநலத்திற்காகவும் வர்க்க அபிலாசைகளுக்காகவும் சொந்த இனத்தையே காட்டிக்கொடுக்கத் தயங்காத இந்த ஆபத்தான பிற்போக்கு சக்திகள் மீது எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்"*

**வே. பிரபாகரன்,**
**தமிழீழத் தேசியத்தலைவர்.**

போன்ற பல்வேறு வடிவங்களில் தமக்கு தேவையான பணிகளில் இக்குழுக்களை இராணுவப் புலனாய்வுப்பிரிவு பயன்படுத்தும் அதேசமயம் இக்குழுக்கள் பலம் பெறாதவாறு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் சிறுசிறு குழுக்களாகவே வைத்துக் கையாள்வதிலே கவனம் செலுத்தியும் வருகின்றது.

(22ஆம்பக்கம்பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 13 . 08 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# அகதிகளின் விவகாரம்...!

தென்னிந்தியாவில் சுமார் நூற்று இரண்டு அகதி முகாம்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழ் அகதிகள் வாழ்ந்துவருகிறார்கள்.

யுத்தம் தீவிரமடைய தமது வாழ்விடங்களிலிருந்து புலம் பெயர்ந்து தென்னிந்தியாவில் இந்த மக்கள் தஞ்சமடைந்தனர்.

அகதிகளாக பாக்கு நீரிணையைக்கடந்து சென்ற இந்தமக்கள் தமது பயணத்தின்போது பல அபாயங்களையும், ஆபத்துக்களையும் எதிர்கொண்டு பல உயிரிழப்புகளைச் சந்தித்தே தென்னிந்தியாவைச் சென்றடைந்தனர்.

அங்கு பல ஆண்டுகளாக அகதிகளாக வாழ்ந்து வரும் மக்கள் தற்போதுநிலவும் நிலைமையைப் பயன்படுத்தி தாயகத்துக்கு திரும்புவதற்கு விருப்பம் தெரிவிக்கின்ற போதும் இதற்கான ஏற்பாடுகளை இந்திய அரசோ அல்லது இலங்கை அரசோ மேற்கொள்வதாக இல்லை.

அகதிகளாக வாழ்ந்துவரும் இந்த மக்களின் தாயகம் திரும்புவதற்கான மனிதாபிமான வேண்டுகைகளை எவரும் செவிசாய்ப்பதாகவும் இல்லை.

இதனால் இந்த மக்கள் இந்தியமீனவர்களுக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தி ஆபத்துமிக்க கடற்பயணமூடாக மன்னார் வந்தடைகின்றனர்.

இவ்வாறு தாயகம் திரும்பும் மக்கள் சாதாரண மீனவப்படகுகளில் பயணம் செய்யும் இவர்களை ஏற்றிவரும் மீனவர்களும் கடலில் காணப்படும் மண்திட்டிகளில் அநாதரவாக இறங்கிவிட்டுச் செல்ல பெரும் உயிர் ஆபத்துகளை சந்தித்து மீள்கின்றனர்.

இந்த மக்களின் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனங்களும் அமைப்புக்களும் செயலாற்ற வேண்டிய தேவையெழுந்துள்ளது.

அகதிகளாக சென்ற மக்கள் இப்பொழுது அரசியல் பிரச்சினைகளில் சிக்குண்டு தாயகம் திரும்பமுடியாத நிலையிலிருக்கின்றனர்.

ஆகவே தான் இந்த மனிதாபிமான பிரச்சினை தொடர்பாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய இலங்கைப் பிரதிநிதிகளிடம் அகதிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு உதவி புரியுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பில் அகதிகளின் பயணத்திற்கு எந்தவொரு நிறுவனமும் பொறுப்பேற்காத நிலையில் அதிக கஸ்ரமான சூழ்நிலையின் கீழ் தென்னிந்திய முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் ஆபத்தான கடற்பயணங்களை மேற்கொள்கின்றனர். என சுட்டிக்காட்டியிருந்தார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்துவாழும் மக்களின் நலன்களில் கவனம் செலுத்துவது போன்று இந்த மக்களின் பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

அதிலும் அகதிகளின் நிலை தொடர்பாகவும், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாகவும் பாடுபடும் உலக நிறுவனங்கள் இந்த அகதிகளின் விடயத்தில் பாராமுகமாக இருந்து விடமுடியாது.

எந்தவொரு மனிதனுக்கும் தனது தாயகத்துக்கு திரும்புகின்ற உரிமையும், தான் விரும்புகின்ற அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ளவும் உரிமையுண்டு.

இதற்கான மனிதாபிமான உதவிகளை செய்ய வேண்டிய கடப்பாடுகள் அது சார்ந்த நாடுகளுக்கும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கும் உண்டு.

அந்த வகையில் தென்னிந்தியாவில் அகதிகளாக வாழ்ந்துவரும் தாயக மக்களின் நலன் சார்ந்து அவர்களின் பாதுகாப்பான பயணங்களுக்கு ஏற்பாடுகளை செய்யுமாறு புலிகள் இயக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளிடம் வேண்டியுள்ளனர்.

புலிகள் இயக்கம் இந்த அகதிகளின் மனிதாபிமான பிரச்சினை தொடர்பாக விடுத்திருக்கும் கோரிக்கையை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டியது அந்த நிறுவனங்களின் கடமையாகும்.

## தூரனின்பார்வை

# ஜே.வி.பியுடனான உறவு விரிசலடைகிறதா...?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் அதன் தலைமைப் பொறுப்பிலிருந்து சந்திரிகா விலகியது முதல் உள்ளக முரண்பாடுகள் கடுமையாகத் தலைதூக்கத் தொடங்கியுள்ளதுடன், சனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்குமிடையேயான புரிந்துணர்வில் விரிசல் அதிகமாகும் சூழல் நிரந்தரமானது போலாகிவிட்டது.

கடந்த சில வாரங்களாகவே சமாதானப் பேச்சுவார்தைகளை ஆரம்பிப்பது தொடர்பான விடயங்களில் ஆரம்பித்த இந்த முறுகல் நிலை இடைக்கிடை தணிவது போன்று தோற்றம் காட்டினாலும் உண்மையில் இருதரப்பினருக்கும் இடையேயான உள்ளக முரண்பாடுகள் மேலும் மேலும் இறுக்கமடைந்துகொண்டே வந்தது.

படுத்திக்கொண்ட ஜே.வி.பியினர் பின்னர் மாகாணசபைத்தேர்தல்களிலும் தமது ஆதிக்க இருப்பை வலுப்படுத்தி மேலும் பலம்பெற்றவர்களானதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் மேலாதிக்க சக்தியாகவும் தம்மை வெளிப்படுத்திக் கொண்டனர்.

இது சந்திரிகாவையும், அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் மெல்ல மெல்ல விலாசமிழக்கச் செய்யும் நடவடிக்கையாகவும் அமைந்துவிட்டதென்பது உண்மையே. இது சந்திரிகாவாலும், அவரது கட்சியின் சிரேஷ்ட தலைவர்களாலும் ஜீரணிக்கப்பட முடியாத ஒன்றேயாகும்.

அவரது கட்சிகளிலேயே அவர் ஜே.வி.பியின் அச்சுறுத்தல்களுக்கெல்லாம் அடங்கி, அவர்களின்

மிகவும் முக்கியமான, நாட்டின் பொருளாதாரப்பிரச்சினைக்கு சமாதானம் அவசியம் என்பது சகலதரப்பினராலும் உணரப்பட்டுள்ள நிலையில், நிதிவழங்கும் நாடுகள் அதற்கு சமாதானத்தையே நிபந்தனையாக விதித்திருக்கையில், அதனை முன்னெடுக்கும் பிரதான வழிகளில் ஜே.வி.பி முட்டுக்கட்டையாக நிற்பது,அரசை மக்களின் எதிர்பரப்புக்கேற்ப நிர்வகிப்பதற்கு தடையாக உள்ளது என்பது இன்று அரச தரப்பினர் பலராலும் நன்கு, உணரப்பட்டுள்ளது.

சமாதானம் என்பது விடுதலைப்புலிகளுடன் பேசுவதால் மட்டுமே சாத்தியமாகும் என்பதும், அதற்கு சர்வதேச சமூகத்தின் அனுசரணை முக்கியம் என்பதும் கூட நாடறிந்த உண்மையாக இருக்கையில், ஜே.வி.பி அதனை எதிர்ப்பதானது, அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் செயலேயாகும்.



புரிந்துணர்வுடன் கூடிய விட்டுக் கொடுத்தலை சூழ்நிலையின் நெருக்கடிகளுக்கேற்ப ஜே.வி.பியினரிடமிருந்து எதிர்பார்த்த சந்திரிகா அதில் மோசமான ஏமாற்றத்தை அடைந்ததுடன், அரசு மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் தன்னிச்சையாகவும், கட்டுப்பாடற்ற வகையிலும் சனாதிபதிக்கு சிக்கல்களை உண்டு பண்ணும் வகையில் அறிக்கைகளை விடுவதனால் ஆத்திரமும் அடைந்தார் என்றால் அது பொய்யில்லை.

ஜே.வி.பி உறுப்பினர்களின் ஆதார பலத்தில் தான் ஐ.ம.சு முன்னணி அரசு நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. என்பது தெரிந்த விடயமேயாகும். ஆட்சி அமைத்து நான்கு மாதங்களாகியும் இன்னும் அது தனது அறுதிப்பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கவில்லை என்பது இந்த நிலையில் ஜே.வி.பி மீது இறுக்கமான கட்டுப்பாடுகளை விரிப்பது அரசு ஆட்டம் காணமட்டுமல்ல, இல்லாமல் போய்விடவும் வழிவகுத்து விடும் என்ற அச்சம் சந்திரிகா அம்மையாருக்கு எப்போதும் உண்டு.

நிறைவேற்று அதிகாரபலம் கொண்டவராக சந்திரிகா இருந்தாலும் ஜே.வி.பியினரின் அச்சுறுத்தல் மற்றும் அதிகார மிரட்டல்களுக்கு முன்னே அடங்கிப்போகும் நிலையே புதிய அரசு பதவியேற்ற நாள்முதல் இன்றுவரை தொடர்ந்து வருகின்றதென்பதே அவருக்கு அவமானம் தரும் விடயமென்றாலும் அவராள் ஜே.வி.பிக்கு எதிராக தன் ஆளுமைச் சீற்றத்தை வெளியிடமுடியாத அவலமே தொடர்கிறது.

முதலில் நாடாளுமன்றத்தில் சந்திரிகாவின் அனுசரணையுடன் தனது பலத்தை நிலைப்

கோரிக்கைகளுக்கெல்லாம் இணங்கி அவர்களைத் தலைக்குமேல் ஏற வைத்து விட்டார் என்ற கடுமையான விமர்சனங்களை முன் வைக்கப்பட்டதுடன், காலப்போக்கில் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை மெல்ல ஜீரணித்துவிடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டது.

அண்மையில் விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் பேசத்தயார் என சனாதிபதி அறிவித்த போது அதனை தோழமைக்கட்சி என்ற முறையில் அனுகாது, அப்படிச் செய்தால் தாங்கள் அரசுக்குக் கொடுத்துவரும் ஆதரவை விலக்கிக் கொள்வோம் என மிரட்டும் தொனியில் பகிரங்கமாக அறிக்கை விட்டதன் மூலம் ஜே.வி.பியினர் சந்திரிகாவை அவமானப்படுத்திவிட்டனர் என்றே கூறவேண்டும்.

ஜே.வி.பினரின் இந்த மிரட்டல்,தான் சொன்னதையே சொல்லவில்லை என மறு அறிவிப்பு செய்ய வேண்டிய நிலைக்கு சந்திரிகாவை தள்ளிவிட்டது.

சந்திரிகாவின் இந்த மறுப்பறிவிப்பு அவரை சந்தர்ப்பத்திற்கேற்ப கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் கொள்கை உறுதியற்ற ஒருவராக அரசியல் ஆய்வாளர்களால் விமர்சனம் செய்யவும் வைத்தது.

புதிய அரசு அமைக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை ஜே.வி.பியினரது கோரிக்கைகள், விருப்பங்கள் அனைத்தையும், தனது கட்சியினரின் வெறுப்பையும் சம்பாதித்தபடி, நிறைவேற்றிய சந்திரிகாவுக்கு, அவருக்கு நெருக்கமான காலத்தில்- பிரச்சினையில் கூட அவர்கள் எதிர்த்து நிற்பது வெறுப்பூட்டும் விடயமாக மாறியதில் வியப்பில்லை.

-ஆனால் ஜே.வி.பி விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை - எனவே சந்திரிகா இனிமேல் ஜே.வி.பிக்கு அடிபணியும் நிலையை தவிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்றே தோன்றுகிறது.

அதன் எதிரொலியே ஜே.வி.பியினரை சந்திக்க சந்திரிகா மறுத்துவிட்ட நிகழ்வாகும்.

சனாதிபதியின் இந்த திடீர் நடவடிக்கை ஜே.வி.பியினருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது.

இதே வேளை ஏற்கெனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப்பதவியிலிருந்து விலகிக் கொண்ட சந்திரிகா கட்சி தொடர்பான விடயங்களில் ஜே.வி. பியினர் தன்னுடன் தொடர்பு கொள்வதை தவிர்துக் கொண்டார் என்றே கூற வேண்டும்.

புதிய தலைவர் ரட்ண சிறிவிக்ரமநாயக்காவிடம் ஜே.வி. பியின் மிரட்டல் பருப்பு அவியாது அவரை இவர்களால் அச்சுறுத்தவோ அடிபணிய வைக்கவோ சாத்தியமில்லை.

எனவே கட்சியின் தலைமையும் சனாதிபதியும் ஜே.வி.பியை விட்டு விலகத்தொடங்கி விட்டனர் என்றே எண்ணத்தோன்றுகிறது.

இதன் தாக்கம் அரசியலிலும் ஆட்சிபீடத்திலும் எத்தகைய தாக்கத்தை வரப்போகும் நாட்களில் ஏற்படுத்தும் என்பதை வைத்தே சந்திரிகாவின் புதிய சமாதான முயற்சிகள் எத்தகைய நகர்வை முன்னெடுக்கும் என்பதை கணிப்பிட முடியும்.

# புதிய முயற்சியா...? புதிய சூழ்ச்சியா...?

சனாதிபதி சந்திரிகாவின் புதிய நகர்வாக ஏற்கெனவே மூன்று முயற்சிகளின் தோல்விகளின் பின்னான நான்காவது முயற்சியாக நோர்வேயின் சமாதான முயற்சிக்கான இராஜதந்திர அழைப்பை விடுத்திருக்கிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகாவின் சமாதான முயற்சிக்கான நான்காவது முயற்சி இதுவென்பதைவிட சந்திரிகாவின் நான்காவது தடவையான சமாதான முயற்சிக்கான சூழ்ச்சி என்பதே பொருத்தப்பாடுடையதாக இருக்கும்.

ஏற்கெனவே துகிலுரியும் துச்சாதனர்களை மடியில் கட்டியதன் விளைவு மூன்று முயற்சிகள் அடுத்தடுத்துத்தோல்விகளை சந்திக்க வேண்டியதாயிற்று. இப்போது எடுக்கும் நான்காவது முயற்சிமட்டும் எப்படிவெற்றிக்கான வாய்ப்பைத் தந்துவிடப்போகிறது?

அடிப்படையில் சந்திரிகா அம்மையார் எடுக்கும் இந்த நான்காவது முயற்சிதோல்விகளை, அவருக்கு ஏற்படுத்தக்கூடிய பலவீனங்களைத்தான் அதிகம் கொண்டிருக்கிறது.

காரணம் - சமாதான முயற்சி தொடர்பான புலிகளின் நிலைப்பாடு,



சமாதான முயற்சி தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு, இறுதியாக சந்திரிகா அரசிற்கான நாடாளுமன்றில் நிரூபிக்க வேண்டிய அறுதிப்பெரும்பான்மையை நிரூபிக்க ஆதரவளிக்கப்போகும் கட்சியின் நிலைப்பாடு.

இவையாவும் சந்திரிகாவின் நான்காவது சூழ்ச்சியில் தாக்கத்தை செலுத்தவல்லதாகவே இருக்கும்.

சரி, சந்திரிகா அம்மையாரின் இந்த முயற்சியிலுள்ள பல வீனமாக இருக்கும் விடயங்களைப் பார்ப்போம்.

புலிகள் தமது நிலைப்பாடாக ஏற்கெனவே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைபை சமர்ப்பித்திருக்கும் நிலையில் அதுதொடர்பான எந்த நேரடி கருத்துப்பரிமாற்றங்களையும் செய்யாது அதற்கு மாறாக தனது ஆலோசகர்களைக்கொண்டு புதிய திட்டவரைபொன்றை தயாரித்து வருகிறார்.

இந்த முயற்சியானது புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபை சந்திரிகா அம்மையாரின் அரசு அடியோடு நிராகரிக்கும் ஒரு செயற்பாடாகவே நோக்கவேண்டியிருக்கிறது.

அவ்வாறில்லையாயின் புலிகளின் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை சந்திரிகா ஆரம்பித்து அதில் அரசின் ஆலோசனைகளை முன்வைத்து பேச்சுக்களை முன்நகர்த்தவேண்டும்.

பதிலாக புதிய திட்டவரைபை அரசு தயாரிக்கிறதென்றால் அது புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபை எந்த வேளையிலும் பேச்சுக்கான அடிப்படையாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்ற பேரினவாதிகளின் கூச்சலுக்குப் அவர் பணிந்துபோன போக்கையே காட்டுகிறது.

ஆகவே ஆறு சுற்றுப் பேச்சுக்களின் அனுபவங்களின் அடிப்படையிலும் ஐக்கியதேசிய முன்னணி அரசால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றுதிட்டவரைபின் பாடங்களின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கானதிட்டவ்வரைபு நிராகரிக்கப்படுகிறதென்றால் புலிகளின் நிலைப்பாட்டோடு அரசின் நிலைப்பாடு பொருந்தப்போவதில்லை என்பதையே காட்டுகிறது.


அத்தோடு, நீண்ட தமிழர் வரலாற்றின் பாடங்களின் அடிப்படையில் தமிழ் மக்களிற்கான அத்தியாவசியமான தேவைகளின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட திட்டவரைபை கவனத்தில் எடுக்க அரசு தயாராகவில்லை என்பதையே காட்டுகிறது.

ஆகவே சந்திரிகாவின் மூன்றாவது முன்நகர்வு சமாதானத்திற்கான முயற்சியா? சமாதானத்திற்கான சூழ்ச்சியா..?

இரண்டாவதாக அரசில பிரதான அங்கம்வகிக்கும் ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டை சந்திரிகா எவ்வாறு கையாளப்போகிறார்.

ஏற்கனவே ஜே.வி.பி. தான் அரசில் அங்கம்வகிக்கும் பிரதான கட்சிகளில் ஒன்று என்றவகையில் இருக்கவேண்டிய கூட்டுப் பொறுப்புகளையும் கடந்து தமது கட்சியின் நிலைப்பாட்டில் உடும்புப்பிடியாக இருக்கிறது. அந்தக் கட்சி புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைதொடர்பாக மட்டுமன்றி நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் மற்றும் பொருளாதாரகொள்கைகளில்கூட அது முரண்பட்டு நிற்கிறது.

இது யதார்த்தத்தை மதிப்பீடு செய்ய மறுக்கும் மனோபாவ நிலையிலான போக்கோடு ஜே.வி.பி.




செயற்படும் போக்கை காட்டினாலும் இலங்கையின் சமாதான முயற்சிகூட உலகில் பொருளாதாரக்கொள்கைக்கு இசைவாகக்கொண்டுசெல்ல'முற்படும் உலகின் போக்கை புறந்தள்ளுவதாகவும் இருக்கிறது.

ஆகவே ஜே.வி.பி.யின் நிலைப்பாடானது சமாதான முயற்சிகளின் பாத்திரங்களான அரசு, புலிகள், சர்வதேச சமூகம் என்பவற்றின் விருப்பை புறந்தள்ளுகிறபோது சந்திரிகா அம்மையாரின் முயற்சி எதை சாதித்துவிடும்.

அம்மையார் நினைப்பது போல ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை புறந்தள்ளுவதன் மூலமோ, ஜே.வி.பி.யுடனான சந்திப்புகளை இரத்துச் செய்வதன் மூலமாகவே ஜே.வி.பி.யை வழிக்குக் கொண்டுவரமுடியுமா? சந்திரிகா அம்மையாருக்கு

ஜே.வி.பி. இப்போது காலைச்சுற்றிய பாம்பாகிவிட்டது- இது தொடரும் வரை சந்திரிகா அம்மையாரின் சமாதானம் தொடர்பான நடவடிக்கைகள் முயற்சிக்கு பதிலாக சூழ்ச்சியாகவேயமையும்.

மூன்று, அம்மையார் எதிர்

**சிறி.இந்திரகுமார்**

கொள்ளும் பொருளாதார நெருக்கடியும் சமாதான முயற்சியை முன்நகர்த்துவதில் உள்ள சிக்கல்களையும்போல, அவரை சதா அச்சுறுத்திக்கொண்டிருப்பது நாடாளுமன்றில் அவர் நிரூபிக்க முடியாதிருக்கும் அறுதிப் பெரும்பான்மை.

இந்த அறுதிப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக அவர் ஹெல உறுமயவுடன் ஒரு உடன்பாட்டைசெய்ய உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதிசெய்யுமாப் போன்று அந்தக் கட்சியும் இந்த அரசை இழந்துவிடமுடியாது காப்பாற்றவேண்டியதேவையிருக்கிறது

என்ற தொனிப்பட கருத்துக்களை வெளிப் படுத்தியுள்ளது.

ஆகவே ஹெல உறுமயவை தனது அரசோடு இணைப்பாராயின் இந்தப்பிரச்சினையில் அந்தக்கட்சியின் நிலைப்பாட்டை அம்மையார் அனுசரித்தே போகவேண்டியிருக்கும்.

ஆனால், இந்த கட்சியின் ஆதரவின் பின்னணியில் ஒரு உண்மை ஆபத்து காத்திருக்கிறது.

ஹெல உறுமய கட்சி எந்தவொரு நிலையிலும் சமாதானத்துக்கு இசைவாக செயற்படக்கூடிய எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வருவதை விரும்பவில்லை, அவ்வாறு ஒரு கட்சிஆட்சிக்கு வருமாயின் அது பௌத்த இராச்சியத்துக்கு ஆபத்தை விளைவித்துவிடும் என கருதுகிறது.



ஆகவே சந்திரிகா அம்மையார் இவர்களை திருப்திப்படுத்தி எப்படி சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியும்? எனவே அவரால் சூழ்ச்சியைத்தான் முன்னெடுக்கலாம்.

ஆனால் அம்மையாருக்கு ஒரு வழி இருக்கிறது. ஐக்கியதேசிய கட்சி சமாதானமுயற்சிக்கு நிபந்தனைகள் எதுவுமற்ற வகையில் வழங்கத தயாராக இருக்கும் ஆதரவைப் பெற்றுக்கொள்வதுதான்.

இதற்காக அம்மையார் மீண்டும் கிடப்பிலிருக்கும் 1லியம் பொக்ஸ் உடன்படிக்கைக்கு புத்துயிர் அளிக்கவேண்டி யேற்படலாம்.

ஆனால், இந்த லியம் பொக்ஸ் உடன்படிக்கையையும் மீறி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்திய புரிந்துணர்வு உடன்படிக்கையைப் போன்று சமாதான விரோதிகளை அடக்கி முடிவுகளை எடுக்கும் துணிவு அவருக்கு வேண்டும். அதுவே சந்திரிகாவின் புதிய நகர்வு சமாதான முயற்சியாக அமைய வாய்ப்பை அளிக்கும். பதிலாக அவர் எடுக்கும் வேறுமார்க்கங்கள் யாவும் சமாதானத்திற்கான சூழ்ச்சியாக மாறவே வாய்ப்பு இருக்கிறது.

அதுவரை அம்மையாருக்கு நூற்றிஐந்தை நூற்றிப்பதின் மூன்றாக்குவதற்காக நூற்றிஐந்தோடு பத்தை இணைக்கலாமா? எட்டை இணைக்கலாமா? என போராடுவதோடு, இவற்றை இணைப்பதால் முப்பத்தொன்பதை இழந்துவிடுவேனா என்பதற்கு பரிகாரம் தேடவே நேரம்போதாது.

அதாவது சந்திரிகா அறுதிப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு ஜே.வி.பியோடு ஹெல உறுமயவைச் சேர்த்துக்கொள்வதா? அல்லது ஆறுமுகம் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்சை இணைத்துக்கொள்வதா? அல்லது இவர்களை இணைப்பதால் ஜே.வி.பியை இழக்கவேண்டிஏற்படுமோ என்பதற்கு தீர்வுகாணாதவரை அம்மையாரின் முயற்சி ஒரு சூழ்ச்சியாகவேயிருக்கும்.

## நாற்றிசை நடப்பு

# பூகோளமயமாதலை உலகிற்கு இசைவாக மீளாய்வு செய்ய முயலும் மேற்குலகம்

— ஐங்கரன் —

உலகப் பொருளாதார இயக்கத்தில் உலகமயப்படுத்தல் என்ற மேற்குலகின் சுரண்டல் தத்துவம் அடிப்படை மாதிரியில் சற்று தளர்ச்சி போக்கை கையாளத்தொடங்கியுள்ளது. இத்தளர்ச்சிப்போக்கு பொருளாதாரத் திட்டத்தை போரினால் சாத்தியப்படுத்தலாமென நியாயாதிக்கம் செய்த அமெரிக்க ஆளும் தரப்புக்கு ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாகும். உலக மயப்படுத்தலை வன்முறைக்குள்ளால் அமுல்படுத்த எடுத்த முயற்சியின் பிறழ்வானது உலக மயப்படுத்தலின் திணிப்பிலிருந்து உலகம் தப்பித்துவிட்டதென்றதல்ல அர்த்தம். மாறாக உலக மயப்படுத்தல் என்ற பொருளாதார பிரமாணத்தை உலகத்திற்கு ஏற்ற வகையில் இசைவாக்கம் செய்வதில் மேற்குலகவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

### ஜெனீவா மாநாடு

ஜெனீவாவில் உலக வர்த்தக மாநாடு ஒன்று அண்மையில் நடந்தது. வளர்ந்த (G-8) நாடுகளும், பின்தங்கிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். உலக மயப்படுத்தல் என்ற சுலோகத்தில் காணப்படும் பாதிப்புக்களைப் பற்றி அவ் உலக வர்த்தக மாநாட்டில் (WTO) அதிக விடயம் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக வறிய நாடுகளில் பிறேசில், சீனா, இந்தியா என்பன விவசாயப் பொருட்கள் தொடர்பாகவும், அதன் உள்ளீடுகள் பற்றியும் சந்தைவாய்ப்புக்கான நிபந்தனைகள் பற்றி வழக்கம் போன்று இங்கும் பிரஸ்தாபித்தனர். அதிகமாக இந்தியா அதிக சர்ச்சையை முன்வைத்து விவாதித்தது. உலகவர்த்தக அமைப்பின் பொருளாதாரக்கொள்கையில் பாரபட்சம் உண்டென்பதை சுட்டிக்காட்டி விவசாய உற்பத்தியில் கவனம் செலுத்தும் நாடுகளின் நிலை கவலைக்கிடமாக WTO ஆக்கி வருகிறதாகவும் தெரிவித்தது.

பொதுவாகவே உலக வர்த்தக அமைப்பானது விவசாய நாடுகளின் உற்பத்தியை பாதிக்கும் விதத்தில் பல திட்டங்களை வகுத்திருப்பதுடன், உலகவர்த்தக அமைப்பின் வரிமுறைக்கூடாகவே விவசாய நாடுகள் தமது உற்பத்தியை சந்தைப்படுத்தலாம் எனக் கூறிவருகின்றது. விவசாய உள்ளீடுகளுக்கான சலுகைகளை வளர்ந்த நாடுகளில் அதிகப்படுத்துவதால் வறிய விவசாய நாடுகள் விவசாய உற்பத்தியில் போட்டி போடமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் உற்பத்திக்கான விதையினங்களை கலப்புமுறைக்கூடாகவும், அதிக இரசாயன கலவைகளை பிரயோகித்து உருவாக்குவதுடன் அவற்றையே வறிய விவசாய நாடுகள் உற்பத்திக்காகப் பயன்படுத்த வேண்டுமெனவும் நிபந்தனை விதிக்கிறது. மேலும் கிருமிநாசினிகள் மற்றும் உரவகைக்கூடாக அதிகமான பாதிப்புக்களை நிலத்திலும், நிலக்கீழ் நீரிலும் ஏற்படும்படியாக வளர்ந்த நாடுகள் தயாரித்து வருகின்றன. இதனால் வறிய விவசாய நாடுகளின் விவசாய உற்பத்தி முற்றாக வலுவிழக்கும் நிலையை அடைந்து வருகிறது.


ஆனால் இந்தியாவும் சீனாவும், பிறேசிலும் ஜெனீவாவில் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு முழுமையான பதிலை வளர்ந்த நாடுகள் முன்வைக்காத போதும் தளர்வுப் போக்கை காட்டியுள்ளன. மானியத்தின் அளவை மட்டுப்படுத்துவது என்பதையும் சந்தைக்கான போட்டித்தன்மையை மாற்றுவதற்கு உதவுவதெனவும், சந்தைவாய்ப்பை பெருக்க உதவுவதெனவும் வளர்ந்த நாடுகள் கூறியுள்ளன. ஆனால் இதன் விளைவுகள் விவசாயப் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைந்த நாடுகளை ஓரளவு பாதுகாப்பதாகவே அமையுமேயன்றி முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை. சுரண்டல் என்பது உருவத்திலும், அளவிலும் மாற்றமே அன்றி சுரண்டல் சுரண்டலாகவே அமைவது தவிர்க்க முடியாதுள்ளது.



### மீண்டும் அல்கெய்தா பீதி

அமெரிக்காவில் மீண்டும் அல்கெய்தாவின் காற்று வீசத் தொடங்கிவிட்டதாக பிரசாரங்கள் நிகழ்ந்து வருகிறது. அமெரிக்க சனாதிபதி புஷ் புலனாய்வுத்துறைகளின் தகவல்களையும், பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்ட அல்கெய்தா இயக்க சந்தேகநபர் நயீம் நூர்கானையும் ஆதாரமாக கொண்டு அமெரிக்க தேசம் பாதுகாப்பு அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாக கூறிவருகின்ற புஷ் தேர்தல் பிரசாரமாக இதனை செய்ய முயலுகின்றாரா? அல்லது அச்சுறுத்தல் நியாயமானது தானா? என்பது புஷ்சுக்கும் அவரது புலனாய்வுத்துறைக்குமே வெளிச்சம். ஆனால் புஷ்ஷையும் அவரது புலனாய்வுத்துறையையும் உலகத்தில் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. ஈராக்கின் யுத்தத்திற்கு பின்பு என்ற வகையில் புஷ்ஷின் தேர்தல் 'ஸ்சண்டாகவே' அதைக் கொள்ளவேண்டியுள்ளது. மேலும் புஷ்ஷின் தேர்தல் பிரசாரத்தை நோக்கினால் ஒரு சூறாவளி பிரசாரமாகவே காணப்படுகிறது. அதாவது புஷ் தனிப்பட்ட ரீதியில் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பார் அல்கெய்தாவின் அச்சுறுத்தலுடன் பாதுகாப்பாக பிரசாரம் செய்யலாமென கருதினாரா என சொல்லத் தோன்றுகின்றது. எதுவாயினும் அல்கெய்தாவின் அச்சுறுத்தல் பற்றி அதீதப்படுத்தப்பட்ட பிரசாரமாகவே புஷ்ஷின் நடவடிக்கை அமைந்துள்ளது. வெளிப்படையாக இல்லாது விட்டாலும் மறைமுகமாகவேனும் அமெரிக்காவை அல்கெய்தா இலக்குவைத்துள்ளதென்பது தெரிந்த விடயம்.

புஷ்ஷின் முதலாவது சனாதிபதி பிரவேசமும் பலவீனமான சனநாயகத்தை பயன்படுத்தி அதன் வழியாக வெற்றியை அடைந்தவர் என்ற வகையில் மீண்டும் ஏதாவது தில்லுமுல்லு செய்ய அவர் முயலக்கூடும். அமெரிக்க அரசியல் அமைப்பு அதற்கு நன்றாகவே இசைந்து கொடுக்கக்கூடியது. எப்படியும் திருப்பலாம், மாற்றலாம் அதனை விபரணப் படுத்துவபரிலேயே தங்கியுள்ளதென்பது அதனை அவதானித்த விமர்சகர்களால் முன்வைக்கப்பட்ட விடயமாகவுள்ளது. அல்கெய்தா இயக்கத்தாலும் இஸ்லாமியத் தீவிரவாதத்தினாலும் அமெரிக்காவுக்கு எப்போதும் அச்சுறுத்தலாகவே காணப்படும். இஸ்லாமிய அரசியலைத் தவிர்த்தது அமெரிக்க அரசியலை பார்க்கும் ஒரு நிலை ஏற்படுவது கடினம்.




### மத நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள்

ஈராக் போர் தொடங்குகின்ற காலத்திலும் அதற்கு முன்னரும் பேசப்பட்ட ஒரு விடயமாகக் கலாசாரங்கள் மீதான தாக்குதல் அமைந்திருந்தது. அதனை மேற்குலகம் வெளிப்படையாக நிகழ்த்தாது விட்டாலும் சொல்லிக் கொள்ளக்கூடியதாக இல்லாது விட்டாலும் அதனையே மூலாதாரமான பகைமையைக் கொண்டிருந்தது. ஆனால் மேற்குலகம் போலல்லாது கிழக்குலகம் கலாசாரத்தின் தன்மையாலும் மகிமையாலுமே வளர்ந்து வந்த பிரதேசம், அதனால் கலாசாரங்கள் மீதான போராக மேற்குலகின் போரை வர்ணிப்பதில் கணிசமான பங்கை கீழைத்தேசமே செய்து வந்தது.

அமெரிக்கக் கூட்டுப்படைகள் இஸ்லாமிய பள்ளிவாசல்களை இலக்கு வைத்தே ஈராக்கில் தாக்குதல் போன்று இஸ்ரேலும் இதர இஸ்லாமிய எதிர்ப்பு நாடுகளும் நிகழ்த்தி வந்தன. இந்தியா மறுவளமாக கிறிஸ்த்தவ ஆலயங்களையும், பாதிரி மார்க்கங்களையும் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. இது அநேகமான நாடுகளின் மதவாதத்தின் வெளிப்பாடான போராக விளங்குகின்றன. மனிதனை ஒழுங்குபடுத்த உருவான மதங்களை மனிதன் ஒழுங்குபடுத்த ஆரம்பித்ததனால் ஏற்பட்ட விளைவுகளாகவே அவை காணப்படுகின்றன.

ஈராக்கில் மிகப் பிந்திய பாரிய தாக்குதலாக கிறிஸ்த்தவ ஆலயங்கள் மீதான தாக்குதல்கள் விளங்குகின்றன. ஒரேநேரத்தில் ஆறு கிறிஸ்த்தவ ஆலயங்கள் மீது தாக்குதல் ஒரே மாதிரி தற்கொலைத் தாக்குதல்களாக உள்ளது. இது ஈராக்கில் மட்டுமல்ல முழு உலகத்திலுமுள்ள மதவாதிகளை பாதிக்கும் விடயமாகவே அமைந்துள்ளது. ஏறக்குறைய 8இலட்சத்துக்கு மேற்பட்ட கிறிஸ்த்தவர்கள் வாழும் ஈராக்கில் தீவிரவாதிகளின் நடவடிக்கை அவர்களை நோக்கி திரும்புமாயின் ஈராக்கே படுமோசமான நிலைக்குத் தள்ளப்படும். ஷியா, சுனி முஸ்லிம்களின் தொகையோடு ஒப்பிடும் போது சிறுமதப் பிரிவினராகக் காணப்பட்டாலும் அதிக பரபரப்பை அடைவது தவிர்க்க முடியாத அம்சமாக அமையும். ஆனால் தீவிரவாதத்தின் இலக்கு படிப்படியாக திசை திருப்பப்படுவதையே அது காட்டுகிறது. இத் தகைய நடவடிக்கைகள் ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிரானதாக அமையாது என்பதை புரிந்து கொள்ளுதல் அவசியம்.



### சூடான் மீது தீர்மானம்

ஐக்கிய நாடுகள் சபை உலகில் இன்னொரு நாட்டின் அரசியல் பிரச்சினையில் அதிக ஈடுபாட்டை காட்டியிருப்பதே சூடான் மீதான தீர்மானம் காட்டுகிறது. சூடான் அரசுக்கு ஆதரவாக இயங்கும் ஆயுதம் தாங்கிய இயக்கங்களை ஒரு மாதத்திற்குள் கட்டுப்படுத்த வேண்டுமென ஐ.நா.சபை தீர்மானம் இயற்றியுள்ளது. இதன்படி சூடான் அரசு செயற்பட தவறுமாயின் சர்வதேச நடவடிக்கைக்கு சூடான் தயாராக வேண்டுமென எச்சரித்துள்ள ஒரு தீர்மானத்தை சூடான் நிராகரித்தாலும் இப்பிரச்சினைக்காக தீர்மானம் செல்லுபடியற்றதாகி விடவில்லை.

சூடானின் அரசியல் முரண்பாட்டுக்கு இணக்கப்பாடு எட்டப்பட்ட நிம்மதியை உலகம் அதிக காலம் அனுபவிக்க முன்னர் அடுத்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. சூடான் அரசுக்கு ஆயுதம் தாங்கிய இயக்கத்தின் அனுசரணையுடன் சர்வதேச மட்டத்தில் வலுமிக்க சக்தி ஒன்றின் பின்புலமும் காணப்படுகின்றது. இதன் பலத்துடனேயே ஐ.நா தீர்மானத்தை சூடான் நிராகரித்ததென்றும் தீர்மானத்தை அமுல்படுத்தி சூடான் அரசு வெற்றி பெற்றால் பிரதேச ஆதிக்கத்தை தக்க வைக்க முடியாதென விமர்சிக்கப்படுகின்றது. சூடான் விவகாரத்திலும் மதவாதமே மேலோங்கியிருப்பதாகவும் மதத்துக்குள் ஊடுருவியுள்ள அரசியல் சக்திகள் அதன் மாதிரியை முற்றாக தகர்க்க விரும்புவதாகவும் கூறப்படுகின்றது. எதுவாயினும் சூடான் அரசியலால் ஐ.நா. சபை மீண்டுமொரு அரசியல் பிரச்சினையை எதிர்கொள்ளத் தயாராகி விட்டதாகவே கூறலாம்.

### பணயக்கைதிகள் விவகாரம்

இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் அதிக நெருக்கடியான விடயமாக ஈராக்கிய கிளர்ச்சியாளரால் கடத்தப்பட்ட கைதிகள் விவகாரம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் பொதுவான போக்கை தீவிரவாதிகள் கொண்டிருந்தபோதும் தற்போது. இறுக்கமான கட்டத்தை நோக்கி நகர்ந்துவருகிறது. பல நாடுகளின் பிரஜைகளைக் கடத்தி சிரச்சேதம் செய்தாலும் அந்த நாடுகளுக்கு தெளிவான பதில் கிடைத்திருந்தது. ஆனால் இந்திய விவகாரம் பெரும் இழுபறியாகவும் அதிர்ச்சியை இந்தியத் தரப்புக்கு வழங்குவதாகவும் உள்ளது. இதனால் இந்திய- அமெரிக்க உறவு பாதிப்பது மட்டுமன்றி இந்திய-ஈராக் நட்பும் பாதிப்படையும் தறுவாயிலுள்ளது.

இந்திய இராஜதந்திரிகளைப் பொறுத்தவரை ஈராக்குடனும் அது சார்ந்த இஸ்லாமிய நாடுகளுடனும் அமெரிக்காவுடனும் நல்லுறவை பேண விரும்புகிறது. ஆனால் இரண்டு பக்கமும் நல்லுறவை பேண முயன்று இறுதியில் உறவுமின்றி தமது நாட்டுப் பிரஜைகளும் இழக்கப்படும் நிலை ஏற்படுவது ஆபத்தான அரசியலாக மாறிவிடும். இரண்டு தரப்பையும் திருப்திப்படுத்துவதை விட தமது பிரஜைகள் முக்கியமானவர்கள் என இந்திய ஆளும் வர்க்கம் கருதவில்லை. இதுவே இழுபறிக்கு பிரதான காரணமாகும். தீவிரவாதத்துடன் தீவிரமான இராஜதந்திரமே பிரயோகிக்க வேண்டும் அதன் வழியிலே சென்று அதனை முறியடிக்க தவறுவது ஆபத்தான விளைவுகளை தரவல்லதாக அமையும்.

ஈராக்கின் தீவிரவாதத்தின் அணுகுமுறைகள் யதார்த்தத்தில் பிசுபிசுக்கதொடங்கிவிட்டது போல் தெரிகிறது. ஆக்கிரமிப்புச் சக்திகளை எதிர்த்துப் போராடும்போது ஆக்கிரமிப்புச் சக்தியே பிரதான எதிரியென்ற இயல்பு ஆரம்பத்தில் காணப்பட்டதே அன்றி தற்போது இல்லாதுவிட்டது. இதனால் முழுமையான ஆபத்து அரசுகளுக்கு அல்ல தீவிரவாத அமைப்புக்களுக்கு என்றவகையில் கவனிக்கப்பட வேண்டியதாகும். ஈராக்கிய கிளர்ச்சியாளர்கள் கப்பம் கோருவதும், கொலை செய்வதும் பிணைக் கைதிகளை துன்புறுத்துவது யதார்த்தப் போக்கில் மாற்றத்தைக்கொண்டு வந்துவிடும் ஆக்கிரமிப்புச் சக்திகள் எவர் என்பதை அடையாளங்கண்ட பின்பும் இலக்குத் தவறுவது தீவிரவாதத்தின் அடிப்படை இருப்பையே தகர்த்துவிடும்.

# இனிமேல் இழக்கப்போவது எதை?

**சந்திரிகா அம்மையாரைச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஜே.வி.பி அனுமதிக்கும் என்பதோ: அல்லது மறுவளமாக சந்திரிகா அம்மையாரது சமாதான விடயத்திலான செயலின்மைக்கு அல்லது எதிரிடையான செயற்பாடுகளுக்கு ஜே.வி.பியின் எதிர்ப்புத்தான் காரணம் என்பதோ அல்ல; உருவாகிவிட்ட தற்போதைய அரசியற் சூழலை எதிர்கொள்ள அம்மையாரும் ஜே.வி.பியும் தத்தமது நலன்சார்ந்து எடுத்துள்ள உத்திகள் இவை அவ்வளவே;**

பு.சத்தியமூர்த்தி



'இரவற் புடவையில் இது நல்ல கொய்யகமென' ஆட்சியமைக் கப்புறப்பட்ட சந்திரிகா அம்மையார், ஒரு புடவை போதாதென இன்னொரு புடவையையும் சேர்த்துக்கொள்ள வுள்ளார். வெற்றிலையின் மீது சங்கு ஏறிக் குந்திக்கொள்ளப்போகிறது.

ஏற்கனவே உருவாக்கப் பட்ட சிவப்பு நீலக் கூட்டணியுள் செந்தோழர்களின் குறுக்கீடுகள் அதிகரித்துத் தமது கைகளைக் கட்டிப் போட முற்பட்டமையால் கூட்டமைப் பின் தலைமைப் பதவியை உதற வேண்டிய நிலை சந்திரிகா அம்மையாருக்கு ஏற்பட்டிருந்தது. இந்தச் சூழலில் செந்தோழர்களை விடவும் தீவிரமான அடிப்படைவாதிகளான பிட்சுக்களின் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடனும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடப் போவதாக சந்திரிகாவின் கட்சி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு நடவடிக் கைகளும் எந்தளவுக்கு ஒத்த திசையில் முன்னோக்கினை கொண்டிருக்கின்றன? ஜே.வி.பியின் குறுக்கீடுகளும் நெருக்குதல்களும் வெகுவாக அதிகரித்த சூழலில் சமாதானப் பேச்சுக்கள் என்பதே கானல் நீராகப் போய்விடும் அபாயம் எழுந்திருந்தது. இதற்குக் கட்டியங் கூறுமாப்போல நோர்வே சமாதான நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக மீண்டுமொரு முறை, சரியாகச் சொன்னால் இரண்டாவது முறையாக விலகியது. இந்தப் பின்னணியில் நடைபெற்ற ஐ.ம.சுதந்திரமுன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் அதன் தலைமைப்பதவியைச் சந்திரிகா துறந்து வெளிநடப்பும் செய்தார்.

இதற்கு மறுநாளே நோர்வேயை சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு சிறிலங்காவின் அரசுத் தலைவர் என்ற கோதாவில் எழுத்து மூலம் அழைப்பு விடுத்த சந்திரிகா அம்மையார், தனது அதிகாரத்தைப் பாவித்து சில முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதாகவும் அறிவித்தார்.

இந்தத் தடாலடி நடவடிக் கைகள் புதிய விதமான விமர்சனங்களையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தின. ஊடகங்கள் சந்திரிகா அம்மையார் கட்சிக்கு முதன்மை கொடுக்காது நாட்டுக்கு முதன்மை கொடுக்கப் போகிறார் என்பது போல எழுதித்தள்ளின. தனது நிறைவேற்றதிகாரபலத்தைப் பாவித்துப் பேச்சுக்களை அவர் முன்னெடுக்கப் போகிறார் என ஊகங்கள் முன் வைக்கப்பட்டன. காட்டூன்கள் வரையப்பட்டன. இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச்சுக்கள் நடாத்தப்படக் கூடும் என்பது போலவும் சில விமர்சனங்கள் வந்தும்விட்டன. இந்தத் தொனியில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நடாத்தினார். அதில் ஜே.வி. பியின் காணி அமைச்சரும் கலந்துகொண்டமை மற்றுமொரு சிறப்பம்சம். இதற்கு மேலதிகமாக இடைக்கால நிர்வாகத்தேவைக்காக அரசு புதியதொரு பொதியினைத் தயாரித்து வருவதாகவும் செய்திகள் வெளியிடப்பட்டன.

இவை அனைத்தும் சேர்ந்து புதியதொரு அரசியற் கட்சியை ஏற்படுத்த முனைந்தன. பாலைவனப் பசுஞ்சோலை ஒன்றை அரசியற் புலத்தில் அரசசார்பு ஊடகங்கள் காட்ட முனைந்தன.

ஆனால், அந்தோ பரிதாபம்! இந்தப் பசுஞ்சோலையின் மீது தீயை உமிழ்ந்தார் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச. மாத்தறையில் நடைபெற்ற 'தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின்' 5ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வில் உரையாற்றிய வீரவன்ச, இடைக்கால நிர்வாகமென்பது தனி நாட்டுக்கு வழிவகுக்குமென்பதால் தாம் அதை ஏற்கப்போவதில்லை எனவும், அரசாங்கம் இது குறித்துப் புலிகளுடன் பேசினால் அதை எதிர்க்கப்போவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த 'எதிர்ப்பு' விடயத்தில் ஜே.வி.பியின் சுருதி சற்றுக் குறைந்திருப்பது போன்றதொரு தோற்றம் வீரவன்சவின் வார்த்தைப் பிரயோகத்தினால் ஏற்பட்டிருக்கிறது. கேகாலையில் நடைபெற்ற இதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ச, "இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதை ஜே.வி.பி அனுமதிக்காது எனவும், மீறிப்பேசினால் அந்தக் கணமே அரசாங்கத்தின் ஆயுள் முடிந்துவிடும்'' எனவும் சிங்கநாதம் செய்திருந்ததை இங்கு பொருத்திப்பார்த்தால் அந்தத் தோற்றம் புலப்படும்.

இந்த உரையை அடுத்தே, விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் சம்பந்தமாகப் பேசினால், அரசாங்கத்துக்கு ஏற்படக் கூடிய ஆபத்திலிருந்து ஐ.தே.கட்சி ஆதரவளித்துக் காப்பாற்றும் என்ற பேராசிரியர் G.L. பீரீசின் அறிவிப்பு வெளியானது.

'உள்நோக்கம் கொண்டவர்களின் ஆதரவு எமது அரசாங்கத் துக்குத் தேவையில்லை' என ஐ.தே.க.வின் அறிக்கைக்கு ஜே.வி.பியின் அமைச்சர் லால்காந்த பதிலளிக் கவும்: இதே லால்காந்த 'எங்களுடையதே அரசாங்கம்; என்று மிக அண்மையில் கர்ச்சித்திருந்தவர் என்பதையும் நாம் நினைவிற்கொண்டால்: விமல்வீரவன்சவின் உரையிலே சுருதி சற்றுக் குறைந்துதான் இருக்கிறது என்று கொள்ளமுடியுமென்றே படுகிறது. இதுகூட சந்திரிகா அம்மையார் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து அதிரடியாக விலகியமை, மற்றும் தனது அதிகாரத்தைப் பாவித்து முடிவுகளை எடுக்கப்போதாக அறிவித்தமை ஆகியவற்றின் உடனடி எதிர் விளைவாக இருக்கக்கூடும். ஏனெனில் ஜே.வி.பிக்கு சவாரி செய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற வாகனம் இன்னும் சில காலத்துக்குத் தேவைப்படுகிறது. தற்போது வசமாகச் சிக்கிக்கொண்டிருக்கும் அந்த வாகனத்தை வீணே கைநழுவிவிட ஜே.வி.பி தயாராக இல்லாமலிருப்பதன் வெளிப்பாடாக வீரவன்சவின் 'எதிர்ப்போம்'என்ற வார்த்தையை எடுத்துக்கொள்ள முடியும்.

ஐ.ம.சு முன்னணியின் தலைமைப்பதவியிலிருந்து சந்திரிகா அம்மையார் விலகிய பின்னர் நடைபெற்றசிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் அம்மையார் ஜே.வி.பியையும் அதன் நடவடிக்கைகளையும் வறுத்தெடுத்து விட்டதாகவும்; ஜே.வி.பியினருக்கு நெருக்கமாகச் செயற்படும் தனது சகாக்களையும் ஒரு பிடி பிடித்ததாகவும் தெரிய வருகிறது.

இவற்றினது பின்னணியிலேயே விமல்வீரவன்சவின் அண்மைய உரை வந்திருக்கிறது. இதை ஜே.வி.பிசற்று அடக்கி வாசிக்கிறது என எடுத்துக்கொள்ளலாம். அதாவது ஜே.வி.பி கடும் முறுக்குத் தெறிக்கும்' என்பதை கவனத்திலெடுத்திருப்பதாகப் படுகிறது. அதீத நிர்ப்பந்தம் என்பதிலிருந்து சற்று இறங்கிவந்து, 'எதிர்ப்பு' என்ற கட்டத்தில் அரசாங்கத்துக்குள் தமது செயற்பாட்டை ஜே.வி.பி அண்மைய எதிர்காலத்தில் முன்னெடுக்கக்கூடும் இதன்மூலம் அரசாங்கத்திற்குள்ளும் ஐ.ம.சு முன்னணிக்குள்ளும் அதனூடாக அரசியற் களத்திலும் தமது முதன்மை ஸ்தானத்தை பேணிக் கொள்ள ஜே.வி.பி முற்படுகிறது.

இதன் அர்த்தம் சந்திரிகா அம்மையாரைச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஜே.வி.பி அனுமதிக்கும் என்பதோ; அல்லது மறுவளமாக சந்திரிகா அம்மையாரது சமாதான விடயத்திலான செயலின்மைக்கு அல்லது எதிரிடையான செயற்பாடுகளுக்கு ஜே.வி.பியின் எதிர்ப்புத்தான் காரணம் என்பதோ அல்ல. உருவாகிவிட்ட தற்போதைய அரசியற் சூழலை எதிர்கொள்ள அம்மையாரும் ஜே.வி.பியும் தத்தமது நலன்சார்ந்து எடுத்துள்ள உத்திகள் இவை அவ்வளவே!

ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிறிலங்காவின் 13ஆவது நாடாளுமன்றில் ஐ.ம.சு முன்னணியின் பெரும்பான்மையை நிரூபித்தாகவேண்டிய கட்டாயத் தேவை அம்மையாருக்கும் ஜே.வி.பிக்கும் உள்ளது. இதற்கு அவர்கள் என்னதான் சுழியோடியும் 4மாதங்களாக அவர்களது பருப்பு இன்னமும் அவியாத அவலத்தில் அவர்கள் எடுத்தமுடிவுதான் 'சங்கூதும்' தீர்மானமாகும்.

ஜாதிக ஹெல உறுமயவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு பௌத்த சாசன அமைச்சையும் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியையும் பிட்சுக்களுக்கு வழங்க கொள்கையளவில் உடன்பாடு காணப்பட்டுவிட்டது. இதன் மூலம் 105 ஆசனங்களாக ஐ.ம.சு முன்னணியின் நாடாளுமன்றப் பலத்தை அதிகரித்து முதலில் ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்ள அம்மையார் முற்படுகிறார். இதைத்தான் ஒரு புடவைபோதாதென இன்னொருபுடவையையும் அம்மையார் கொய்யகத்திற்கு தேடிப்பிடித்திருக்கிறார். எனத் தொடக்கத்திலே கூறப்பட்டது.



உண்மையில் சந்திரிகாவுக்கு இனிமேல்தான் 'அலுப்பே' காத்திருக்கிறது. ஒன்றுக்கொன்று ஒத்துக் கொள்ளாத நாயையும் பூனையையும் மடியிற் கட்டிக் கொண்டு நாட்களைக் கடத்துவதன் சுவையை அம்மையார் இனித்தான் அனுபவிக்கப்போகிறார்.

ஜே.வி.பியை அடக்க அல்லது தனிக்க ஐ.ம.சு முன்னணியின் தலைமைப்பதவியைத் துறக்க நேர்ந்தது அம்மையாருக்கு. அப்படியாயின் புதிய கூட்டாளிகளான 'பிடிச்சிராவி'ப்பிட்சுகளைக் கட்டுப்படுத்தச் சந்திரிகா அம்மையார் எதை துறக்க நேருமோ யாரறிவார்? ஏனெனில் ஆசைகளைத் துறந்த அரசுக்கட்டிலைத் துறந்து சித்தார்த்த முனிக்கு இவ்விடயம் அவ்வளவாக ஒத்து வராதல்லவா?

# நேர்நோக்கு

## ஆட்சியைத் தக்கவைக்க...


பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தில் எவ்வாறாயினும் பெரும்பான்மையை நிலை நாட்டிவிடவேண்டுமென்ற பெரும் துடிப்பிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அதற்காக எவருடனும் கூட்டுச் சேரத்தயாராக உள்ளது. இதில் மிகவும் சிரத்தையாகச் செயற்பட்டுவருபவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் ஆவர். இந்தக் கூட்டமைப்பில் ஜே.வி.பி அங்கம் வகித்தாலும் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக அல்லது ஆட்சியைத் தொடருவதற்காக தனது நலனை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்பதை வெளிப்படையாகக் காட்டிவருகின்றது.

முதலில் அது சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட ஆட்சியை நீடிக்கும் நோக்கத்துடனாவது ஒத்துழைக்கும் போக்கைக் கடைப்பிடிப்பதாக இல்லை.

இரண்டாவதாக ஐக்கிய தேசியக்கட்சியுடனோ அல்லது சிறுபான்மையினக் கட்சிகளுடனோ கூட்டுச்சேர அது விரும்பவில்லை. மூன்றாவதாக எஞ்சியுள்ள கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் தேர்தல் காலத்தில் ஏற்பட்ட மோதல் நிலையைத் தவிர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டவில்லை. அண்மையில் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் ஜே.வி.பிக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படப்போவதாக தகவல்கள் வெளிவந்தபோதும் அது நடைமுறைப்படுத்தப்பட்டுவிடவில்லை.

இவ்வாறான நிலையில் பெரும்பான்மையை நிரூபிக்கும் பொறுப்பு தலைமைப்பதவியை வைத்துக்கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடம் சென்றிருக்கிறது. எனவே இதற்காக அது எவர்காலிலும் விழத்தயாராக இருக்கின்றது.

ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை இணைத்துக்கொள்ள தனது அமைச்சுப்பதவியையும் துறக்கத் தயார் என ஒருவர் கூறினார். ஆட்சியின் ஆரம்ப காலத்தில் தொண்டமானுக்கு வழங்கிய பொலிஸ் பாதுகாப்பை அகற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர், இப்பொழுது அந்த நிலைக்கு வந்துள்ளனர். இப்போது மு.கா.சை சமாதானப்படுத்த முயலும் அவர்கள் முன்னர் முஸ்லிம் காங்கிரசைப் பிளவு படுத்தவும் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது பெண் தொடர்பு குறித்து பிரசாரம் செய்யவும் கூட தயங்கவில்லை.. இப்போது " போருக்கும் தயார் சமாதானத்துக்கும் தயார்." என மார்தட்டும் அநுராபண்டாரநாயக்க தமிழ்க்கூட்டமைப்பினர் ஆட்சிக்கு ஆதரவு தெரிவிப்பின் அதற்கு மகிழ்ச்சி கொண்டாடவும் தயாராக இருப்பார்.



இவ்வாறுதான் ஜாதிக ஹெல உறுமயவினரை நாடாளுமன்றத்தில் வைத்துத் தாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் இப்போது அவர்களின் ஆதரவுக்காக ஏங்கித் தவிக்கின்றனர். இப்பொழுதுள்ள நிலையில் ஜாதிக ஹெல உறுமய இணங்குமாயின் அமைச்சுப் பதவிகள் வேறுசலுகைகள் உட்பட பலவற்றை வழங்கத் தயாரான நிலையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தயார் நிலையிலேயே இருக்கின்றனர். அந்த நிலையில் இருப்ப தனாலேயே வரவு-செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களிக்கத் தயாராக இருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவினர் சொல்ல ஆட்சிக்கே ஆதரவாக இருப்பதாக அநுரா மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால் ஜாதிகஹெல உறுமயவினரின் நோக்கம் வெளிப்படையானது. அதாவது இனவாதத்தை முதலீடாக்கி அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்தைக் கொண்ட அக்கட்சி 9 ஆசனங்களை பெற்றுள்ளது. இன்றுள்ள நாடாளுமன்ற அதிகார இழுபறியில் 9 ஆசனங்கள் மிக முக்கியத்துவம் கொண்டவையாகும். அதனைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளுக்கு அழுத்தம் கொடுத்து தடுத்து நிறுத்தித் தமது சாதனையாகப் பதிவு செய்ய அது முயல்கிறது.

ஆனால் இந்த நாடாளுமன்றம் விரைவில் கலைந்து போய்விட்டால் தமது சாதனைப் பட்டியல் குறுகிவிடுமென்ற அச்சமும் அதற்கு உள்ளது 'எனவே நாடாளு மன்றத்தை கலையவிடாது வைத்திருக்கும் அதேவேளை அரசாங்கத்துக்கு இடைஞ்சல் கொடுப்பது அதன் நோக்கமாகும்.

இவ்வாறானதொரு நிலையில் எவ்வாறாயினும் முயற்சி செய்து ஹெல உறுமய பிக்குகளை ஆட்சியில் இணைத்துக்கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஆனால் அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால் ஆட்சி நீடிக்கக்கூடும். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மேலும் பல பின்னடைவுகளே ஏற்படும்.

இப்பொழுது ஜே.வி.பி யிடம் சந்திக்கும் நெருக்குவாரங்களைவிட மிக மோசமான நிலை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்படும் சமாதான முயற்சிகள் விடயத்தில் மட்டுமல்ல எல்லாவற்றிலும் அதற்கு நெருக்கடி ஏற்படும். ஆனால், அதையெல்லாம் கவனிக்கும் மனோநிலையில் சு.க. இல்லை. முக்கியமாக சந்திரிகாவுக்கு இல்லை. அவரது கவனமெல்லாம் தனது அரசியல் வாழ்வை நீடித்துக்கொள்வதைப் பற்றியதே. அதற்காக அவர் எதனையும் செய்வார்.

**வேலவன்**

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் படையினர் தமது பூர்வீக நிலங்களில் தம்மை மீளக்குடியேற அனுமதிக்க வேண்டுமெனக்கோரி பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பல போராட்டங்களை நடாத்திவிட்டார்கள், நடாத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

மக்கள் போராட்டம், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது பேச்சு மேசையில் காரசாரமான விவாதப் போராட்டம் என உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர் நிலத்திற்கான போராட்டம் தொடர்ந்தபடிதான் இருக்கிறது.

படையினர் ஆக்கிரமித்த இந்த நிலங்களை படையினரிடமிருந்து மீட்டெடுப்பதாயின் போராடி மீட்டெடுக்க வேண்டும். அல்லது பேசிப் பெற்றெடுக்கவேண்டும்.

இந்த இரண்டு மார்க்கங்கள்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுக்கான வாசலாகவுமுள்ளது.

போராடிப்பெற்ற அளவுக்கு படையினர் ஆக்கிரமித்த நிலங்களை பேசிப்பெற்றுக்கொள்ளவில்லை என்ற களயதார்த்தம் தமிழ்மக்களுக்குத் தெளிவாகப் புரியும்.

இடையறாது தொடர்ந்த யுத்த சன்னதங்களின்போது மீட்டெடுக்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட அளவுக்கு நான்கு வருட சமாதான காலத்தில் குறிப்பிடும்படியாக எந்தப்பயனையும் தமிழ்மக்கள் பெற்றுக்கொள்ளப்படாத நிலைமையே தொடர்கிறது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை தென்மராட்சி உசன்பிரதேச மக்கள் சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தியிருந்தனர்.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் முடக்கி வைக்கப்பட்டுள்ள தமது வாழ்விடங்கள் விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் எனக் கோரி தமது போராட்டத்தை நடாத்தியிருந்தனர்.



## அமைப்பு ரீதியாக ஒன்றுபட்டு நீதிமன்றில் முறையிடலாம்...?

வழமை போலவே இந்த போராட்டம் மக்களின் ஆவேசக்குரல் எழுப்புகை, பதாகைகளை தாங்கி தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்துதல், இறுதியில் மகஜர் கையளிப்பு என்ற சம்பிரதாய நிகழ்வுகளோடு நிறைவுற்றுவிட்டது.

நிகழ்வுகளை மதிப்பீடு செய்யவும் கண்காணிக்கவும் என தளத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும், கண்காணிப்புக் குழுவினரும் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இந்த மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உரியதீர்வோ அல்லது உறுதியான எந்த முன்முயற்சிகளுமோ மேற்கொள்ளப்படுகிறதா எனின் இல்லை.

இந்த நிலையில் இந்த மக்கள் உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் புதைந்து கிடக்கும் தமது வாழ்விடம், தமது பிள்ளைகளின் கல்விக்கூடங்கள், தலாவருமானம் ஈட்டும் கட்டுமானங்கள் என நீளும் துயரத்திற்கு எந்த முடிவை தேடுவதென்பது பெரும் பிரச்சினையாகவேயுள்ளது.

ஆனாலும் சட்டரீதியாக படையினரின் இந்த ஆக்கிரமிப்புக்கு படையினர் நியாயம் கற்பிக்கவோ அல்லது சட்டரீதியாக அதனை உறுதிப்படுத்திக் கொள்ளவோ முடியாத ஒரு பலவீனமான நிலை படைத்தரப்பினருக்கு உள்ளது.

அதாவது உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் தமது வாழ்விடங்களை இழந்திருக்கும் மக்கள் இந்த விவகாரத்தை நீதிமன்றுக்குக் கொண்டுசெல்வார்களாயின் படைத்தரப்புக்கு இது வொரு பெரும் பிரச்சினையாக உருவெடுக்கும்.

ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பாக இரண்டு வழக்குகள் உயர்நீதிமன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டு அதிலொன்று வழக்கின் மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் படைத்தரப்பு அதிக சிரமங்களை எதிர்கொண்டதும் இந்த விவகாரம் தொடர்பான வழக்குகள் மேலும் நீதி மன்றத்துக்கு வந்துவிடுமானால் அவை தமது உயர்பாதுகாப்பு வலய பிரச்சினைக்கு சிக்கல்களை தோற்றுவித்துவிடும் என அஞ்சுவதும் அந்த வழக்கின்முடிவில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே உயர்பாதுகாப்பு வலயங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் அமைப்பு ரீதியாக ஒன்றுபட்டு சட்டரீதியாக படைத்தரப்பை எதிர் கொள்ள நீதிமன்றுக்குச் செல்வார்களாயின் படைத்தரப்புக்கு பெரும் அதிர்ச்சியை மட்டுமல்ல உயர் பாதுகாப்புவலய விடயம் தொடர்பான தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்யவேண்டிய அளவுக்கு படையினரின் நிலைமை மாறும்.

படையினருக்கு எதிரான மறியல் போராட்டத்தோடு நீதிமன்றம் செல்லும்போது படையினரின் அநீதியை எவராலும் நியாயப்படுத்த முடியாத நிலை தோன்றும்.

உதிரிகளாக வழக்குகளைத் தொடர்வதிலும் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எதிர்கொள்ளும் இந்த பாரிய பிரச்சினையை ஒன்றுபட்ட சக்தியாகப் படையினரின் அநீதியை நீதிமன்றில் ஏற்றுவது அவசியமாகும்.

ஏனெனில் நீதிமன்றில் தீர்வு எட்டப்படாது விடினும் அநீதியை நீதிமன்றில் ஏற்று நெருக்கடியையாவது கொடுக்கலாம்.

**நக்கீரர்.**

**- தமிழ் மொழிமூலமான கல்விக்கு -**


# அரசு எழுபதுகளில் நேரடியாக ஏற்படுத்திய தடைகளை இப்பொழுது மறைமுகமாக மேற்கொள்கிறது

**- தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் -**

**நேர்காணல்**
**சு.பிரபா**

***தமிழர் விடுதலைப் போராட்டம் கூர்மையடைவதற்கு பிரதான காரணம் அரசின் கொடூர கரங்கள் தமிழர் கல்வியில் நேரடியாக பதிந்தது தான்.***

***இதன் பின்னணியில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்களை சந்தித்து அன்றும் இன்றும் வடிவங்கள் மாறினாலும் தமிழ் மாணவர்களுக்கான விளைவு ஒன்றே என்பதுபோல செயற்படும் அரசின் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பாக நாம் கேட்டபோது அவர் அளித்த விளக்கம் வருமாறு***



1970 தொடக்கத்தில் தமிழர் கல்வியில் சிங்கள அரசின் எதிர் நடவடிக்கைகள், தரப்படுத்தல் என்ற அடிப்படையில் பல்கலைக்கழக புகுமுகத்திற்கான ஒரு தடையாகத் தான் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மாணவர்களை மட்டுப்படுத்துவதற்குத்தான் திட்டமிட்டு இத்தரப்படுத்தல் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்டது.

இத்தரப்படுத்தலானது ஒரு பச்சை இனவாத்மாக அதாவது ஒரே தேர்வை தமிழிலும் சிங்கள மொழியிலும் நடாத்திக்கொண்டு வருகின்ற அதேவேளை சிங்களத்தில் தேர்விலே தோற்றியவர்கள் குறைந்த புள்ளிகளுடன் பல்கலைக் கழகம் செல்வதும் தமிழ் மாணவர்கள் கூடிய புள்ளிகளை எடுத்துத் தான் பல்கலைக்கழகம் போகவேண்டும் என்ற அரசின் செயற்பாடு உலகளாவிய ரீதியில் ஒரு பெரும் எதிர்ப்பினை ஏற்படுத்தியது. அதற்கு உள்நாட்டிலும் வெளியிலும் இருந்து எழுந்த கடும் எதிர்ப்புக்களினால் பின்னர் படிப்படியாக அத்திட்டத்தை மாற்றிக்கொண்ட போதிலும் சிங்கள அரசு தமிழர் கல்வியை எப்படியாவது நசுக்க வேண்டும் என்ற நோக்கில் மறைமுகமாகத் தனது செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ளத் தொடங்கியது. அந்த வகையில் தமிழர் கல்விக்குத் தேவையான ஆளணிகள், வளங்கள் என்பனவற்றை குறைக்கும் வகையில் செயற்படத் தொடங்கியது. தற்பொழுது போராட்டம் இடைநிறுத்தப்பட்டு போர் நிறுத்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அமைதி நிலை ஏற்படுத்தப்பட்ட சூழலில் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக அரசு பல இழுத்தடிப்புக்களைச் செய்து வருகின்றதோடு கல்வி மேம்பாட்டுக்கான எந்தவொரு முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாக எமது மாணவர்களின் கல்விக்கு தேவையான பௌதீக வளங்களை சில தொண்டர் நிறுவனங்களின் மூலம், உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி மூலமும் கட்டடங்கள் சிலவற்றை அமைத்து வந்தாலும் எமது பௌதீக வளத் தேவையில் மிகக்குறைந்த பங்குதான் நிறைவு செய்யப் பட்டுள்ளன. தேவைகளை பொறுத்தவரையில் மூன்று வகையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மிக நீண்ட காலமாக போர்ச் சூழலையும் பொருளாதாரத் தடையையும் காரணம் காட்டி எங்களின் பௌதீக வளங்கள் உரிய வகையில் வழங்கப் படாமல் புறக்கணிக்கப் பட்டமையால் ஏற்பட்ட தேவைகள்.

போர்ச்சூழலில் அரசபடைகளினால அழிக்கப்பட்டமையால் ஏற்பட்ட தேவைகள் அடுத்து எங்களுடைய வளங்களையும் சேர்த்து ஏனைய பகுதிகளுக்குக்கொடுத்து விட்டு இன்று வந்து கட்டடங்கள் கட்டுவதற்கோ தற்போதைய பொருளாதாரத் தடைநீக்கத்திற்குப் பின்பு பொருட்கள் வரக்கூடிய வாய்ப்பு இருந்தும் அவற்றுக்கான பண ஒதுக்கீடுகள் செய்யப்படாமை.

எங்களுக்கு பெருந்தொகையான தேவைகள் இருக்கின்றன. அதில் ஒரு பகுதியைக்கூட செய்யமுடியாது உள்ளது. உதாரணமாக 100 வீத தேவை என்றால் 10 வீதமான தேவைகளே நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆளணியாக இருந்தாலும் நிர்வாக ஆளணியாக இருந்தாலும் எதையும் நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன் மூலம் அரசின் உள்நோக்கம் தெரியவருகின்றது. என்னவென்றால் தமிழர் கல்வியைத் திட்டமிட்டு அழிப்பதையே கருத்தில் கொண்டுள்ளனர்.

கல்வி நிர்வாகத்தை மனித வள கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இதன்கீழ் பல்வேறு வகையான திணைக்களங்கள் செயற்பட்டு வருகின்றன.

மாகாணக்கல்வித்திணைக்களம், கல்வி வெளியீட்டுத்திணைக்களம், பரீட்சைத்திணைக்களம், மனித வள அபிவிருத்திச் சபை, தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம், தேசிய நூலக சேவைச்சபை , பிரிவேன கல்விச்சபை, இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச்சபை, கொழும்பில் உள்ள சர்வதேசப் பாடசாலைகள், கல்விக்கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள், யுனஸ்கோ தேசிய சபை, கலாசார அலுவல்கள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், தேசிய நூதனசாலை திணைக்களம், மத்தியகலாசார நிதியம், தேசிய ஆவண பாதுகாப்பு திணைக்களம் என்பவற்றுடன் சில பௌத்தம் தொடர்பான திணைக்களங்களும் உள்ளன. இவற்றிற்கான நிர்வாகத்தை மேற்கொள்ளக்கூடிய அளவில் 1200 இற்கு மேற்பட்ட அலுவலர்கள் இருந்த போதிலும் இதில் 1150 பேர் சிங்களவர்களாகவும் 20 பேர் (1.5%) தமிழர்களாகவும் 30(2.5%) பேர் முஸ்லிம்களாகவும் உள்ளனர். மேற்படி திணைக்களங்கள் சிலவற்றில் தமிழர்களே இல்லாத நிலை காணப்படுவதனால் தமிழினத்துக்கெதிரான சில இருட்டடிப்புக்கள் செய்யப்படுகின்றன.

இதில் முக்கியமாக, தொல்பொருள் திணைக்களம் தேசிய ஆவணக்காப்பகம் என்பவற்றில் தமிழர்கள் எவரும் நியமிக்கப்படாது சில தொன்மைக்கால உண்மை வரலாறுகளை இருட்டடிப்புச்செய்து வருகின்றது.

வடகிழக்கு பகுதியைப் பொறுத்தவரையில் எமது தமிழீழ தாயகத்தை பொறுத்தவரையில் ஆசிரியர் பற்றாக் குறை என்பது தொடக்கக் கல்விக்கு 30% இடைநிலைக் கல்விக்கு 20% என்றவகையில் உள்ளது. இலங்கை தீவுமட்டத்திலும் தொடக்கக்கல்வியைப் பொறுத்தவரையில் 30% ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இவ்வாறு அரசு உரிய ஆளணிகளை வழங்காமையினால் நிர்வாக செயற்பாடுகளிலும் கற்பித்தல் செயற்பாடுகளிலும் மந்தநிலை காணப்படுகின்றது. தமிழ்ப்பகுதிகள் ஏனைய பகுதிகளைவிட மிகமோசமான நிலைக்குத்தள்ளப்பட்டு உள்ளன.

ஒட்டு மொத்தமாக சிறிலங்காவைப் பொறுத்தவரையில் தேவையான ஆளணியைவிட கூடுதலான ஆளணி இருக்கிறது. சிங்களப் பகுதியில் 15000இற்கு மேற்பட்ட கூடுதலான ஆசிரிய ஆளணி இருப்பதனால் பெரும்பாலான பாடப்பகுதிகளுக்கு ஆளணி கூடுதலாக இருக்கின்றமையினால் அவர்களுக்கான ஆசிரிய பயிற்சி தேவைகள் மிகக் குறைவாக இருக்கின்றது. தமிழர் தாயகப் பகுதியில் 6000இற்கு மேற்பட்ட தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் பற்றாக்குறை நாடுமுழுவதிலும் உள்ள தமிழ் மொழிமூல, ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் 12000 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவிவருகின்றது.

இந்த நிலையில் அளவுக்கு அதிகமான ஆசிரியர்கள் சிங்களப் பகுதிகளில் இருப்பதனால் சிங்களப் பகுதிகளுக்கு ஆசிரியர்தேவையில்லாத நிலை இருக்கிறது. அதனால் சிங்களமொழிமூல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் தேவையற்றது என்ற அடிப்படையில் புதியமுறையில் தேசிய கல்வியற்கல்லூரி என்ற அமைப்பின்மூலம் தேவையான ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் தரமானதாக வழங்கப்படுகின்றன. இதன்மூலம் தேவையான ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தளவு ஆளணியினருக்குத்தான் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. அந்த அடிப்படையில் எமது பகுதிக்கு வேண்டிய ஆசிரிய ஆளணிகள் நியமிக்கப்பட்டால்; அவர்களுக்கு பயிற்சி வழங்கப்போதுமான வளங்கள் இல்லை. சிங்களமொழி மூல ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் தேவையில்லை என்ற காரணத்தினால் தான் இருக்கும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை மூடுகின்ற ஒரு முடிவை அரசு எடுத்துள்ள நிலையில் இயங்கும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் செயற்பாட்டை அரசு கவனிக்காது விட்டமையினாலும் இந்த ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் ஆசிரியர்களுக்கு வேண்டிய தரமான புதிய கல்வி சீதிட்[illegible]

தத்திற்கு அமைவான, கல்வித்திட்டத்திற்கு அமைவான பயிற்சிகளை வழங்குகின்ற நிறுவனமாக இல்லாது செயலிழந்துள்ளன. சிங்கள தேவைகளை மையமாகக் கொண்டே தேசிய கல்வியற்கல்லூரிகளும் செயற்பட்டுவருகின்றன. இலங்கையில் உள்ள 17 கல்லூரிகளில் 09 கல்லூரிகள் தனிச்சிங்களக்கல்லூரிகளாகவும், 03 கல்லூரிகள் பகுதி தமிழ் பகுதி சிங்களம் எனவும், தமிழ்மொழிமூலக் கல்லூரி என்று பார்த்தால் இரண்டு கல்லூரிகள் மட்டுந்தான் உள்ளது. ஏனைய இரண்டு கல்லூரிகளும் முஸ்லிம்களுக்கானது.

யாழ்.மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் ஏராளமான பாடசாலைகள் உள்ளன. அதனால் ஏராளமான பள்ளிகள் இயங்க முடியாதுள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இயங்க முடியாது உள்ளபள்ளிகள், வேறு இடங்களில் குறுகிய வளங்களுடன் இயங்கிவருகின்றன. இதைவிட சில பாடசாலைகளுக்கு அருகில் இராணுவமுகாம்கள் இருந்துவருவதனால் அந்தப் பாடசாலைகள் இராணுவ கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ளதுடன் பாடசாலை செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்ற தன்மை காணப்படுகின்றது.

இதைவிட அரசானது ஆசிரிய ஆளணிகளை நியமிக்காது பாடப்புத்தகங்களை, உரியகாலங்களில் வழங்காது தமிழ்ப்பகுதிப்பள்ளிகளுக்கு பாரபட்சம் காட்டி வேறுபாடு காட்டி சிங்களப்பகுதிகளுக்கு வசதி வாய்ப்புக்களை அள்ளி வழங்கிக் கொண்டு தமிழ்ப்பகுதிக்கும் சிங்களப் பகுதிக்கும் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் பொதுத்தேர்வுகளை நடத்தி அனைவருக்கும் சமமான கல்வியென்று கபட நாடகமாடுகின்றது.

இதைவிட யாழ்ப்பாணத்தில் சமூகச்சீரழிவுகளுக்கு முக்கிய காரணியாக படையினர் செயற்பட்டு வருகின்றமையும், யாழ்ப்பாணத்தில் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்ற சூழ்நிலை குறைந்துள்ளது.

இந்தநிலையில் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுகின்றனர் என கூறி மாணவர்களை மட்டுமல்ல அந்தப்பகுதியில் உள்ள ஆசிரியர்களையும் கல்வி அலுவலர்களையும் படையினர் மிரட்டிவருகின்றனர். உண்மையிலே 1970களில் அரசின் வெளிப்படையான தமிழ்க்கல்விக்கு எதிரான செயற்பாடுகள் மாணவர்களை கிளர்ந்து எழவைத்து. மிகப் பெரிய ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. அன்று வெளிப்படையாகச் செய்ததைச் சிங்கள ஆட்சியாளர் தற்போது மறைமுகமாகச் செய்துவருகின்றனர். தமக்கு இழைக்கப்படுகின்ற தீங்குகளை தங்களுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற புறக்கணிப்புகள் வேறுபாடுகளை கல்வி அழிப்புச் செயற்பாட்டை உணர்ந்துகொள்ள முடியாதநிலையில் பெரும்பாலான மாணவர்கள் இருக்கின்றனர்.

ஆங்கிலக்கல்வி பொது அறிவு என்பவற்றில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு இருக்கும் இடையூறுகள் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கு எமது மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெருந்தடையாக அமையப்போகின்றன.

மத்திய கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளை எடுத்துக்கொண்டால்.

இந்த தொல்பொருள் திணைக்களத்தில் தமிழர்கள் எவரும் நியமிக்கப்படாது முற்றாக தமிழர்கள் இல்லாத நிலையில் செயற்பட்டுவருகின்றது. அரசின் முக்கிய நோக்கம், இத்தீவில் தமிழர்கள் பழையகாலத்தில் வாழவில்லை என அவர்களுடைய வரலாறுகளை மறைப்பதில் மிக முனைப்பாக செயற்பட்டுவருகின்றது. அந்தவகையில் எடுத்துக்காட்டான ஒன்றை. எடுத்துக்கொண்டால் மாதோட்டம் என்ற இடத்தில் மீட்கப்பட்ட தொல்லியல் அகழ்வுகளின் போது 07லட்சத்துக்கும் அதிகமான தொல்பொருட்கள் இதுவரையும் கணினி மயப்படாதுள்ளன. இதனை இருட்டடிப்புச் செய்யமுனைந்துள்ள வேலையாகவே உள்ளது. இத்தொல்பொருட்கள் பெறப்பட்டு 30 வருடங்களுக்கு மேலாகியுள்ளது. இவ்வாறான ஈழத்தமிழர் வாழ்வியலை மறைக்கும்நோக்கில்தான் தொல்பொருட்திணைக்களத்தின் தமிழ் மொழிமூல அலுவலர்கள் எவரும் நியமிக்கப்படாதுள்ளனர்.

அதேவேளை தொல்பொருட்கள் என்ற அடிப்படையில் பௌத்தம் தொடர்பான வேலைகளையே முதன்மைப்படுத்தி செய்து வருகின்றனர். அரசானது தேசியம் என்ற வகையில் பௌத்தத்தையும் சிங்களத்தையும் ஏற்றுக்கொண்டு அவற்றையே முனைப்பாக செயற்படுத்தி வருகின்றது.

தொழிநுட்பப் பாடங்களை முன்னெடுத்துச் செல்வதில் சிங்கள அரசு செய்து வருகின்ற புறக்கணிப்புகளைப்பார்த்தால்.

(21ஆம் பக்கம் பார்கக)




# செல்பேசிகள் முதல் — சமையலறைவரை — நுண் அலை


நுண்ணலை உலகம் இன்றைக்கு செல்பேசிகள் முதல் - சமையல்வரை இருப்பது நுண் அலை உலகம். நுண்ணலை - Micro wave எனப்படுகின்றது. மின்காந்த அலைவரிசையில் ஒரு மட்டம் நுண்ணலையாகும்.

நுண்ணலை அதிக அதிர்வெண்கொண்டதால் அது மிகத்தொலைதூரத்துக்கு பயனளிக்க கூடியது. ஒரு நேர்கோட்டில் மட்டும் இதன் பயணம் அமைகிறது. இதனால் தொலைத் தொடர்பில் ஒருமுனையில் இருந்து புறப்படும் நுண்ணலை - அந்த நேர்கோட்டில் வரும் அலைவாங்கியால் கிரகிக்கப்பட்டு - அது காவி வரும் செய்தியை பிரித்து அறியும். செல்பேசிகளும் இப்படியே அதன் கோபுர அலை பரப்பிமுனைக்கு - நேராக செல்பேசியின் அலை வாங்கி இருக்கும்போதே அது தொடர்பில் இருக்கும் செய்கோள். தொலைபேசிகள் - செய்கோள் ஒலி - ஒளி பரப்புகள் எல்லாம் நுண்ணலைகள்தான். ஒரு நேர் கோட்டு பயணம் என்பதால் தொலைதூரத்திலிருந்து வரும் அலையை கிரகிக்க ஒரு கோள வடிவ அலைவாங்கி தேவை.



கோளப்பரப்பில் 'அந்த நுண்ணலை பட்டுத் தெறித்து ஒரு இடத்திற் குவியும். குவியும் இடத்திலேயே அலைவாங்கி இருக்கும். இப்படியாக நாம் பயன்படுத்தும் செல்பேசிமுதல் - கம்பியில்லா தொடர்புகளில் ஆதிக்கம் செலுத்துவது நுண்ணலைதான்.

இனையப்பயன்பாட்டில் ஒரு இடத்திலிருந்து கம்பி இல்லாமல் மறுமுனை ஒன்றில் - இணைவதை பயன்படுத்த நுண்ணலை முக்கியபங்கை வகிக்கின்றது. இணைய நுண்ணலைகளின் ஒருமுனையிலிருந்து இன்னொரு முனைக்கு நுண்ணலை காவிச் செல்கின்றது. இங்கு எதிலும் வானொலி அலைகளைப் போல நுண்ணலை காவிச் செல்லும் பணியையே செய்கிறது. எந்த அலையையும் நுண்ணலையில் ஏற்றிக் கம்பியில்லா இடங்களை இணைக்கலாம். இன்றுள்ள உலகில் தொடர்பு இணைப்புகளை செய்வது நுண்ண லைகளே ஆகும். ஒரேயொரு நிபந்தனை ஒரு நேர் கோட்டில் மட்டும் நுண்ணலை பயணிப்பதால் இரு முனைகளும் நேர் கோட்டில் சரியாக இருக்கவேண்டும். ஒருசிறுவிலகல் இருந்தாலும் இணைப்புத் துண்டிக்கப்பட்டுவிடும்.




இன்று வானலைகளை செய்கோள்களிலிருந்தும் தரை வழி தொலைத்தொடர்புகளிலும் - தொலைபேசித் தொடர்புகளிலும், செல்பேசிகளிலும் நிறைத்து நிற்கும் நுண்ணலைகளால் மனிதமூளைகளுக்கு ஆபத்து இருப்பதான எச்சரிக்கையும் உள்ளது. குறிப்பாக நுண்ணலை பிறப்பு நடக்கும் செல்பேசிகளாலேயே அதிக ஆபத்து இருப்பதாக எச்சரிக்கப்படுகின்றது.

இந்த நுண்ணலை சமையலிலும் பயன்படுகின்றது. சமையலில் நுண்ணலை அடுப்புகள் உள்ளன. இவற்றில் நீருள்ள எந்த உணவுப் பதார்த்தத்திலும் நீர் மூலக்கூறின் பிணைப்புகளை சுருட்டி அதனை ஆவியாக்கும் செயலைஅடுப்பில் நுண்ணலை செய்கின்றது. இதனால் உணவுப் பொருட்கள் அவிகின்றன. நுண்ணலை அடுப்பில் சமைக்கவைக்கப்படும் உணவுப்பொருள் மட்டுமே சூடாகும். அது வைக்கப்படும் பாத்திரம் சூடாகாது. அதாவது நீர் மூலக்கூறில் மட்டும் சுருட்டலை புரிவதால் அங்கு பாத்திரத்துக்கு எதுவித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இப்படி இன்று உலகினை நுண்ணலை உணவு அளவில் ஆக்கிரமித்து வருகின்றது.

Broadcast asia-2004 காட்சியில் தொடர்வுலகில் நுணணலை பயன்பாட்டின் சாதனங்கள் வைக்கப்பட்டிருந்தன. செய்கோள் தொடர்புகளை - தரைத் தொடர்புகளை நுண்ணலைகள் எப்படி ஆள்கின்றன என்பதை அலை வரிசைப்படுத்தின.

'அல்கோன்' என்ற நிறுவனத்தின் தரைவ ழி நுண்ணலை சாதன வலையமைப்பை படம் காட்டுகின்றது.

**த.அருவி**




# சிறுநீரகக் கல்

மனிதர்களில் 10 பேருக்கு ஒருவர் என்ற சதவிகிதத்தில் "சிறுநீரகக்கல்" (Kidney Stone) உண்டாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. "சிறுநீரகக் கல்" எக்காரணங்களால் உண்டாகிறது? தண்ணீர் மற்றும் மிகக் குறைவாக திரவ பதார்த்தங்களை மிகக் குறைவாக அருந்துதல் ஒரு காரணம். ஓமோன் சுரப்பிகளில் ஏற்படக்கூடிய கோளாறுகள், சிறுநீரகக்குழாயில் ஏற்படக் கூடிய அடைப்புகள், அடிக்கடி ஏற்படக்கூடிய சிலவகை தொற்றுநோய்கள் ஆகியவற்றுடன் சிலருக்குப் பிறவியிலே அவர்களின் சிறுநீரகங்களில் சிறுநீரகக்கல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

80சதவீத சிறுநீரகக்கல் கல்சியம் எனப்படும் தாது உப்புகளால் உண்டாகின்றன. 10 சதவீதம் யூரிக் அமிலம் (Uric acid) எனப்படும் அமிலக் கோளாறால் உண்டாகிறது. இன்னொரு 10 சதவீதப் பேருக்கு அவர்களின் சிறுநீரில் வாழும் நுண்ணுயிர்கள் (Bacteria) சிறுநீரில் அமோனியாவின் (Ammonia)அளவை அதிகரித்து அதன் காரணமாக ஸ்ட்ருவைட்கல் (Struvite Stones) எனப்படும் சிறுநீரகக் கற்களை உண்டு பண்ணுகின்றது.

சிறுநீரக கற்களை அறுவை சிகிச்சை மூலமும், அறுவைசிகிச்சை இல்லாமலும் நவீன லேசர் சிகிச்சை மூலமும் அகற்றலாம்.

## களைப்புத் தீர...

வீட்டில் சமையல் மற்றும் வேலை செய்யும் பெண்களுக்கு உடலுழைப்பின் பொழுது தசைகளால் இயக்கத்துக்கு மிகவும் அவசியமான பொட்டாசியம் என்னும் தாதுப் பொருள் நிறைய செலவழிந்துவிடும். அதனால் அவர்கள் களைத்து சோர்ந்து போவார்கள். இந்த பொட்டாசிய சத்து ஒரேஞ்சுச் சாற்றில் நிறைய உள்ளது. அவர்கள் நிறைய ஒரேஞ்சு சாறுபருகினால் இழந்த சக்தியை மீண்டும் பெறுவார்கள். ஒரேஞ்சு சாற்றில் உள்ள விட்டமின்'சி' செல்களின் வளர்ச்சிக்கு உதவும். ∴போலாசின்(Folacin) என்ற ஒருபொருளும் இருப்பதால் உடல் நலம் பெறுகிறது. ஒரேஞ்சு சாற்றில் கொழுப்போ, உப்போ, மற்றும் கொலஸ்ரோலோ எதுவும் கிடையாது.

## குழந்தைகளின் வளர்ச்சி

குழந்தை பிறக்கும்போது 20 அங்குல நீளமிருக்கும். ஓராண்டு முடிகிறபோது 30 அங்கல நீளமாகும். இரண்டாம் ஆண்டு முடிகிறபோது 35 அங்குல நீளமிருக்கும். அதன்பிறகு ஆண்டுக்கு 2 அங்குல வளர்ச்சி என்ற கணக்கில் 12 வயதுவரை வளர்ச்சியடையும். 12வயது முடியும்பொழுது 60 அங்குலம் அதாவது 5அடி உயரமாக வளர்ந்துவிடும்.

# புகைத்தலை நிறுத்தினால்...



*இருபது நிமிடங்களில்: இரத்த அழுத்தமும் நாடித் துடிப்பும் சீராகிறது. கை, கால், பகுதிகளில் உஷ்ண நிலை சரியான அளவுக்கு வந்து விடுகிறது.*

*எட்டுமணி நேரத்தில்: இரத்தத்தில் காரியமிலவாயு குறைகிறது. இரத்த ஓட்டத்தில் மேலும் பிராணவாயு கூடுதலாகப்போகிறது.*

*இருபத்து நான்கு மணி நேரத்தில்: இருதயம் மேலும் சீராக வேலை செய்கிறது. சுவாசம் சீராக அமைகிறது.*


*நாற்பத்து எட்டுமணி நேரத்தில்: நரம்புத்தளர்ச்சி குறைகிறது. உணவில் ருசி அதிகமாகிறது. நடக்கும்போது கால்கள் மேலும் வலுவுடன் நடக்கின்றன.*

*இரண்டு வாரம் முதல் மூன்று மாதங்களில்: இரத்தஓட்டம் சீர்படுகிறது. மூச்சு சாதாரண நிலையை அடைகிறது. இருமல் வருவது குறைந்து சீரடைகிறது.*

*நான்கு முதல் ஒன்பது மாதங்களில்: சோர்வு, நரம்புத்தளர்ச்சி, சளி, இருமல் ஆகியவை நீங்கிவிடுகின்றன. செமிபாடு சுறுசுறுப்பாகிறது. தொற்றுநோய் வாய்ப்பு குறைகிறது.*

*ஓராண்டு காலத்தில்: இருதயநோய், கசநோய், புற்றுநோய் ஆகியவை ஏற்படும் வாய்ப்பு பாதியளவாகக் குறைந்து விடுகின்றது. நல்ல பசி, நல்ல தூக்கம், ஆகியவற்றால் சுறுசுறுப்பாகவே செய்யமுடிகிறது.*

## நீ வாராய்.....



**பஸ் வானொலியில்:–** வாராய் நீ வாராய் போகுமிடம் வெகு தூரமில்லை நீ வாராய்.

**குடும்பஸ்த்தர்:–** இறங்கப்பா பிள்ளையளயுங்கொண்டு வேற பஸ்ஸில போவம். பாட்டுச்சரியில்லை.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 09

அனலைதீவு எழுவைதீவுகளுக்கு இருந்த ஊர்காவற்துறை தொடர்பு இழக்கப்பட்டதால் - அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் நெருக்கடி. கடலில் படகுகளை இறக்கமுடியாது. கடற்படைப்படகுகளின் நடமாட்டம். இது பெரும் பஞ்சம் - பட்டினி நிலையை சில நாட்களிலேயே ஏற்படுத்திவிட்டது.

இதேபோல குறிகாட்டுவானுடனான தொடர்பு இல்லாததால் நெடுந்தீவு - நயினாதீவு மக்களும் நெருக்கடிகளுக்கு உள்ளாகினர்.

ஆற்றாக்கொடுமையால் அனலைதீவு - நெடுந்தீவுமக்கள் கிராமசேவையாளருடன் சிறிய படகுகளில் வெள்ளைக்கொடிகளை பறக்கவிட்டவாறு நயினாதீவு சிறிலங்கா கடற்படையினரிடம் சென்றனர். தம்மை யாழ்ப்பாணம் செல்ல போக்குவரவுக்கு அனுமதிக்கக்கோரினர் ஆனால், கடற்படை அதனை தடுத்தது. மக்களின் இடர்நிலையை அரசியலாக பயன்படுத்தத் தானே அரிசி - பருப்பு - சீனி மூட்டைகளை வழங்கியது. ஆரம்பகட்ட பிரச்சினை மக்களுக்கு ஓரளவு தணிந்தது.



தொடர்ந்தும் இப்படி இருக்க முடியாத நிலை.

மீளவும் கடற்படையுடன் மக்கள் வாதாடினர். கடைசியில் எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு மக்கள் படகுகளில் நயினாதீவுக்கு வந்து கடற்படைச் சோதனைக்குட்பட்டு குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து வேலணை - அராலியூடாக மக்கள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தது. நயினாதீவு மக்கள் கடற்படைச்சோதனையுடன் குறிகாட்டுவான் செல்லலாம். ஒருநாளைக்கு ஒரு படகுச்சேவைக்குமட்டும் கடற்படை அனுமதித்தது.

மக்கள் இவ்வாறு பகலில் நயினாதீவு கடற்படைத்தளம் சென்று சோதனைக்குட்பட்டு குறிகாட்டுவான் சென்று வேலணையில் தரித்து நின்று - இரவில் அராலி வழியாக யாழ்ப்பாணம் சென்று வந்தனர்.

இந்த நாட்களில் நயினாதீவில் போக்குவரவில் ஈடுபடும் இளவயதினர்கள் மீது கடுமையான கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டன.

எழுவைதீவில் இருந்து சென்ற ஒரு இளைஞரின் அடையாள அட்டை கடற்படையினரால் பறிக்கப்பட்டது. இன்னொரு இளைஞர் கடற்படையினரால் பிடிக்கப்பட்டார். காணாமல் போனவர் கடைசிவரை திரும்பவேயில்லை. இந்தநிலையில் நயினாதீவு கடற்படை சோதனைக்குட்பட்டுச் செல்ல மக்கள் அச்சப்பட்டனர். இதற்கு மாற்று வழிதேட மக்கள் ஆலோசித்தனர்.

கடற்படையினரின் நடமாட்டம் சுற்றுக்காவல் நேர ஒழுங்குகளை அவதானித்தனர். இதனைக் கணித்து நேரடியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சுருவில் ஐயனார் கோவிலடித்துறை வழியாக யாழ்ப்பாணப் பயணத்துக்கு மக்கள் திட்டமிட்டனர். யாழ்ப்பாணத்தீவுகளின் கரையோரங்கள் ஆழங்குறைந்தவை. பயணிகள் ஏற்றும் பெரிய படகுகள் எல்லா இடங்களிலும் கரையொதுங்க முடியாது. இதற்காகவே இறங்குதுறைகள் அமைக்கப்பட்டன.

ஊர்காவற்துறைக்கு மேற்காக சுருவில் ஐயனார் கோவிலடியில் உள்ள சிறியதொரு குடாப்பகுதி ஆழம் கூடியதாக இருந்தது. நயினாதீவு திருவிழாக் காலங்களில் இப்பகுதி மக்கள் நயினாதீவுக்கு செல்ல - இந்த ஐயனார் கோயிலடியில் ஒரு பாதையை போட்டு ஒரு இறங்குதுறையை முன்பு அமைத்தனர் 1960களில் குறிகாட்டுவான் இறங்குதுறை அமைக்கப்பட - ஐயனார் கோவிலடி துறை கைவிடப்பட்டது.

1990இல் சிங்கள அரசின் போர் இதனை மீளப்பயன்படுத்த வேண்டிய தேவையை உண்டாக்கியது. அனலைதீவு - எழுவைதீவு மக்கள் தமது இழுவைப்படகு ஒன்றை கடற்படை சுற்றுக்காவல் நேரத்தை அவதானித்து இரவு வேளையில் ஐயனார் கோவிலடித் துறையை போக்குவரவுக்கு பயன்படுத்த ஆரம்பித்தனர். சம வேளையில் நெடுந்தீவு - நயினாதீவு மக்கள் இப்படிப் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். இதனால் அவர்கள் சிறிலங்கா கடற்படை நடமாட்டங்களை அவதானித்து தமிழகத்திற்கு அகதிகளாகச் செல்ல ஆரம்பித்தார்கள். இவர்களுடன் அனலைதீவு - எழுவைதீவு மக்களும் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடம்பெயரஆரம்பித்தனர். ஆனாலும் முழுமையாக மக்கள் வெளியேறவில்லை.

இந்த தப்பித்தலின் போதும் பெரும் அவலச்சாவுகள் நிகழ்ந்தேறின.

**துருவன்**



## தொல்லியல்

# அக்கராயனில் கண்டெடுக்கப்பட்ட மீன்வடிவ இலச்சினை







நாகதடம். இந்த சொல்லைத் தரும் தொல்கால எழுத்து இலச்சினை கிளிநொச்சி அக்கராயனில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் அக்கராயன் குளத்துக்கு நீரைக்கொண்டு வரும் நிலை ஆற்றின் கரையோரத்தில் பெரும் தொல்லியல் மையம் உறங்கிக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றுப்படுகையின் ஆரம்பப் பகுதிகளில் 1இலட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித மூதாதயர்களின் பயன்பாட்டுக் கல்லாயுதங்கள் -1980களில் சிறிலங்கா தொல்லியல் திணைக்கள முன்னாள் ஆணையாளர் கலாநிதி சிரான் A. தெரனியகல தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. கிரவல் கற்களில் அந்த கல்லாயுதங்கள் செய்யப்பட்டன.

இந்த நிலைகளின் கீழ்ப் பகுதிகளில் 3000 வரையான ஆண்டுகள் தொன்மையான தொல்லியல் மையம் காணப்படுகிறது. கற்குகை என்ற வகையிலான ஈமச்சின்னங்கள் அப்பகுதியில் அண்மை ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டன அத்துடன் இரும்பு உருக்கு உலைகள் பெருமளவிலான மட்பாண்டங்கள் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. இவ்வாறு எடுக்கப்பட்டவற்றுள்- சுமார் 2 சென்றிமீற்றர் நீள உலோக - மீன்வடிவ இலச்சினை ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

தொல்லியல் தேடலாளர் நா.குணரட்னம் தன் தேடலின் போது இதனைக் கண்டெடுத்தார். வெண்மையான நிறமுடைய இந்த உலோக இலச்சினை மீன்வடிவமானது. இதில் இரு வரிகளில் எழுத்துகள் அமைந்துள்ளன.

இதனை வாசிக்கும் முயற்சி வரலாற்றாய்வாளர் செ. கிருஸ்ணராசாவினால் மேற்கொள்ளப்பட்டது. தமிழின் ஒரு காலகட்ட வரிவடிவமான 'பிரேமி'யில் இந்த எழுத்து வடிவம் காணப்படுகின்றது. இந்த வரிவடிவம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

இதன் முதல் வரி செ.கிருஸ்ணராசாவினால் வாசிக்கப்பட்டது. அந்த வரி 'நாக' என்ற சொல்லைக் காட்டியது. இதன் பின்னர் தொல்வரிவடிவங்களின் ஒப்பீட்டு வாசிப்பில் ஈடுபட்ட போது அதில் உள்ள சொல் நாகதடம் என அறியப்பட்டது.

இந்தியாவின் முதன்மையான தொல்வரி வடிவ எழுத்து வாசிப்பாளர்களில் ஒருவர் ஐராவதம் மகாதேவன் சிந்துவெளி எழுத்துக்களை வாசிக்கும் முயற்சிகளில் இவர் ஈடுபட்டவர். இவரிடம் இந்த அக்கராயன் எழுத்து வரிவடிவ இலச்சினை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் இது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்து வரிவடிவம் என்பதை உறுதி செய்தார். இதில் 'நாகதடம்' என்ற சொல் அடங்கியிருப்பதையும் அவர் உறுதி செய்தார்.

யாழ்ப்பாணத்தின் ஆனைக்கோட்டை மனிதன் எழுத்து இலச்சினைக்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்த இலச்சினை உள்ளது.

இருந்தும் நிறுவனமயப்பட்ட தமிழ் வரலாற்றாய்வாளர்கள் இதனை முதன்மைப்படுத்தவில்லை. காரணம் நிறுவனமயப்படாத ஒருவர் இதனை கண்டெடுத்ததால் ஆகும்.

தொல்லியல் என்பது ஒரு கணிதமோ- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டிய அறிவியல் மதிநுட்பம்' பெற்றதாக அல்லாமல் இது ஏற்கனவே உள்ளனவற்றை கண்டறிந்து அதற்கு வெளிச்சம் போடுவதாகும்.

இதற்கு நிறுவனமயப்பட்ட முனைவர் தளம் தேவை என்பது கட்டாயமல்ல. உலகில் அதிகம் தொல்லியலாளர்கள் ஆரம்பத்தில் தம் சுய ஆர்வதேடல் - வாசிப்பு அறிதல் மூலமே தொல்லியல் ஆய்வுகளை செய்து வந்தனர். இவர்கள் திறன் கண்டே அவர்கள் நிறுவனமயமாக்கப்படுகின்றனர்.

சிங்கள தேசத்தில் வரலாற்றாய்வாளர்களில் முதன்மையாகப் பேசப்படும் கலாநிதி சேனரத் பரணவிதான நிறுவனமயப்படாத ஒருவராகவே ஆய்வுகளை செய்துவந்தார். ஆனால் பின்னரே அவரின் திறமையை பயன்படுத்துவதற்காக நிறுவனமயமாக்கப்பட்டு பட்டமளிக்கப்பட்டார்.

இதுபோல் அநேகம் வரலாற்றாசிரியர்கள் இப்படியாகவே சிங்கள தேசத்தில் உருவாக்கப்பட்டனர்.

ஆனால் ஈழத்தமிழ் மக்களிடம் நிறுவனமயமாக்கப்பட்ட புலமையாளர்கள் வெளியிலுள்ள திறன் படைத்தோரை புறக்கணிப்பு, இருட்டடிப்பு செய்கின்றமை காணப்படுகிறது. புலமையாளர்கள் தங்களை முதன்மைப் படுத்துவதில் அக்கறை கொள்வதாலேயே ஈழத்தமிழர்களின் தொல் வரலாறு முழுமையடையாது சீராக்கப்படாது உள்ளது.

**குரலோன்**






# அவன் குருதியே மண்ணின் மைந்தர்களைக் காத்தது

அடர்ந்த காடுகளுக்குமேலாக பேரிரைச்சலுடன் எதிரியின் உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிடத்தொடங்கிவிட்டது. தரவையை அண்மித்த அந்த அழகான, அமைதியான பதி மருந்து காட்டின் நிசப்தத்தை எதிரியின் உலங்குவானூர்தி கலைத்துவிட்டது. தரவையையும் அதனை சுற்றிலுமுள்ள காடுகளுக்கு மேலாக எதிரியின் பெல்ரக உலங்கு வானூர்தி வட்டமிடத்தொடங்கியபோதே, எமது முகாம் உசாரடைந்துவிட்டது. நாலர்பக்கங்களிலும் உயரமான மரத்தில் உருமறைப்புடன் ஏற்றப்பட்டிருந்த முன் அவதானிப்பாளர்கள், தங்களது பார்வையை கூர்மையாக்குகிறார்கள், காலை விடிந்தும் விடியாத ஒரு நேரமது. எனவே பார்வை துலக்கமின்றி உள்ளது. என்றாலும், எதிரி அண்மித்துவிட்டதற்கான மறை பொருள் சமிக்ஞைகளை, போரியல் அனுபவத்துடன் அனைவராலும் இனங்காண முடிந்தது.

கதிரவன் காலை வானிலே எட்டிப்பார்க்கிறான், கதிரவனின் ஒளிக்கீற்றுக்கள் அடர்ந்த அந்தக்காட்டின் மரங்களில் பட்டு இடைவெளி உள்ள இடங்களுக்கூடாக நிலத்திலே பட்ட அதேநேரத்தில்தான், எதிரியின் உலங்குவானூர்தியும் தாக்கத் தொடங்கியது. எதிரி வானில் இருந்தபடியே பரவலாகத் தாக்குதல் தொடுக்கத்தொடங்கினான். முகாமிலுள்ள அனைவரும் உசாரடைந்துவிட்டோம். நான்கு பக்கங்களிலும் விடப்பட்டிருந்த முன் அவதானிப்பாளர்களுடன் அடிக்கடி தொடர்புகொள்ளவென, நான்கு பக்கங்களுக்கும் நான்கு பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். காரணம் அந்தக்காலப்பகுதியில், கரந்தடிப் படையாகச் செயற்பட்ட எமது இயக்கத்தின் தேவைக்கேற்ற தொலைத் தொடர்பு இல்லாது இருந்தது. இது போன்ற ஒரு காரணத்திற்காகவே தகவல் பரிமாற்றம் போராளிகளினூடாகவே நடந்தது.

ஒவ்வொரு பக்கமாகவும் தகவல் எடுக்கச்சென்றவர்கள் ஓடோடி வந்து தங்களது பக்கத்தின் அவதானிப்பு நிலையங்களில் பிரச் சினை இல்லை என்று சொல்லி விட்டனர்.

மியாங்குளம் பக்கமாக இருந்த வெளியை நோக்கி அவதானித்துக் கொண்டிருந்த, அணிகளின் தகவல் இதுவரையும் கிடைக்கவில்லை. சில நிமிடங்கள் தாமதித்தபின் வேகமாக கரிகரன் ஓடோடிவந்தான். வந்தவன் அவசரம் அவசரமாகப் பொறுப்பாளரிடம் சொன்னான். தனுகரன் உங்களை ஓடிவரட்டாம் என்றதும் பொறுப்பாளருடன் தாக்குதலுக்கு தயாராக நின்ற எமது அணி மியாங்குளம் பக்கமாக ஓடிச் சென்றோம்.

முன்னணி அவதானிப்பிலே மரத்தில் நவதரன் அவதானித்துக் கொண்டிருக்க, தனுகரன் எதிரியின் நடமாட்டத்தை சரியாகச் சுட்டிக் காட்டிவிட்டான். எதிரி மியாங்குள ஆற்றின் கரையோடு இரண்டு பக்கமாக முன்னேறிவந்துகொண்டிருந்தான்.

கிருஸ்ரி அண்ணை அடிக்கவா...!

கிருஸ்ரி அண்ணை அடிக்கவா...! என்று தனுசன் கேட்டுக் கொண்டே இருக்க.

சும்மா இருடா... இடத்தை காட்டிக்கொடுத்துவிடக்கூடாது. கிட்டவந்தால் அடிப்போம் என்று மறுக்கவே,

இதுபோல சந்தர்ப்பம் இனி கிடைக்காது என்றான். திரும்பவும் பொறுப்பாளர் தடுக்கிறார். டேய்... தனு முகாமில நிறையப் பொருட்கள் கிடக்குது. அறிக்கை, ஆவணங்கள் என எக்கச்சக்கமாய்க் கிடக்குது, எனச் சொல்லி பொறுப்பாளர் மறுப்பு தெரிவிக்க, தனுகரனின் முகம் வாடியதை அவதானித்துவிட்டார். வேக வேகமாக கட்டளை பிறப்பித்த அவர், முகாமிலுள்ள பொருட்களை அப்புறப் படுத்துவதற்கான, ஆயத்தங்களை செய்தார்.

அந்தக் காலப்பகுதியில் பெரும்பாலும், முகாம்களை மாற்றுவதிலேயே நேரம் போக, எஞ்சியவர்களே சண்டையைச்செய்வது வழக்கம். அதற்கு அமைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முன் சென்று எதிரியின் நகர்வை அவதானிக்கும் பொறுப்பை கப்டன் சுதாகரனிடம் ஒப்படைத்து அதில் தனுகரனையும் இணைத்து விட்டார். ஏனையவர்கள் முகாமை கைப்பற்றும் நோக்கில் வரும் எதிரியை தாக்குவதற்காக காத்திருந்தனர்.

மியாங்குள ஆற்றங்கரையோடு முன்னேற்றத்தை மேற்கொண்ட எதிரி எமது முகாமின் பின் பக்கமாக வந்து தாக்கத்திட்டமிட்டுள்ளான் என்பதை கண்டுகொண்டோம். தனுகரன் பட்டியடித்திடலை நோக்கி முன்னேறுகிறான்.

நிச்சயமாக இன்றைக்கு ஒன்றோ, இரண்டோ எதிரிகள் வீழ்த்தப்படுவார்கள் என்பது திண்ணமே.

கப்டன் சுதாகரனோடு சென்றவர்கள், எதிரியை தாக்குவதற்கான அறிகுறியாக வெடிச்சத்தம் கேட்டது. கந்தடி தாக்குதல் என்பதனால் சில நிமிடங்களே கேட்டது. ஏதோ நடந்துவிட்டதாக உணர்ந்து நாமும் உசார் நிலையில் இருக்க, அவதானிப்பாளர்களிடமிருந்து எமக்குத் தகவல் வந்தது. எமது அணி தாக்கியதை தொடர்ந்து எதிரி தனது பாதையை மாற்றி வேறுபக்கமாகக் கலைந்து செல்கிறான் என்று. சுமார் 45 நிமிடங்களின் பின், சுதாகரனின் அணி வந்தது. அதில் தனுகரன் தனது எஸ்.எல்.ஆர். துப்பாக்கியால் மூன்று பேரை சுட்டுக்கொன்றதை சொல்லி ஆரவாரப்பட்டனர்.

லெப்.தனுகரன் மேற்குறிப்பிட்ட சண்டையில் மாத்திரம் 03

**— க. மிரேசு —**

எதிரியை கொன்றுவிடவில்லை. அவன் இலட்சிய உறுதியோடு தாயகவிடுதலையில் என்று இணைந்தானோ! அன்றிலிருந்து அவனது இறுதி நாள்வரை எத்தனையோ எதிரியை கொன்றும். காயப்படுத்தியும் சாதனைகள் செய்திருக்கிறான். தனது ஊரான காரைதீவில், எதிரி செய்த கொடூரத்தை உணர்ந்த சின்ன வனான தனுகரன் தனது சிறுபிராயத்திலேயே போராட்டத்தில் இணைந்துகொண்டான்.

இயக்கத்தில் இணைந்த நாளிலிருந்து லெப். தனுகரனின் செயற்பாடுகள் ஆச்சரியப்படுவதாக இருந்தது. விடுதலைப்போராட்டத்தில் அவனது ஒழுக்கமும், முன்மாதிரியான செயற்பாடுகளும் எத்தினையோ போராளிகளின் முன்னேற்றத்திற்கு வழி காட்டியாக இருந்திருக்கிறது. காட்டுப்போர் முறையில் காலை 4.00 மணிக்கு கட்டாயமாக எல்லோரும் எழும்பவேண்டும். இரவு சரியாக 10.00 மணிக்கே படுக்கவேண்டும். இதற்கிடையில், இரவு, காலை, மதியம் பின்நேரம், மாலை என காவற்கடமையும், எமக்காக காத்திருக்கும். தரப்படுகின்ற வேலைகளை சிறிய தவறும் இன்றி அப்படியே செய்து முடிப்பான் தனுகரன். காலை நடக்கும் சூட்டுப் பயிற்சியில் கட்டாயம் தனுகரன் வந்திருப்பான். அன்று அவனுக்கு சமையல் சுற்றாக இருந்தாலும் நிச்சயமாக அவன், சூட்டுப்பயிற்சிக்கு வந்திருப்பான். குறிபார்த்துச் சுடுவதில் மிகவும் கெட்டிக்காரன் என்ற காரணத்தினால்தான் சில தாக்குதல்களில் பல எதிரிகளை சுட்டு வீழ்த்தினான். லெப். தனுகரனுக்கு கைத்துப்பாக்கியால் சுடுவது என்றால் மிகவும் விருப்பமான ஒன்று. கைத்துப்பாக்கியுடன் யார்வந்தாலும் உடனே சென்று அண்ணை ஒரு ரவை அடிக்கவா என்று கேட்டு வாங்கி அடித்தேவிடுவான். அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டால். அண்ணை... அண்ணை... தாங்களன் என்று வற்புறுத்தி வாங்கி அடித்தே விடுவான்.

சில வேளைகளில் யாரிமாவது கைத்துப்பாக்கியை கெஞ்சி வாங்கினானோ அவரையே "கையை உயத்து" சரணடை என்று கேட்பான். அவர்கள் செய்யாவிட்டால் ரவைகள் எல்லா வற்றையும் அடித்துமுடிப்பேன் என்பான், அதுவும் இல்லாவிட்டால் என்னை அண்ணா என்று கூப்பிடு என்று மிரட்டுவான். பின் அவர்களும் என்ன செய்வது என்று தெரியாமல் கெஞ்சி, மண்டாடி கையை உயர்த்தி, அண்ணா போட்டு வாங்கிவிடுவார்கள்.

இப்படியாக அந்த போராளியின் வரலாறு எத்தினையோ விசித்திரங்களால் விரிந்துகிடக கிறது. உயரத்தில் மிகவும் கட்டையான தனுகரன் தன்னளவான எஸ்.எல்.ஆர். துப்பாக்கியுடன் நடக்கும் காட்சியை எந்த நகைச் சுவைக் காட்சிகளிலும் பார்க்க முடியாது. துப்பாக்கியின் பாரத்துடன் துன்பப்பட்டு அதன்பின் ஏதாவது ஒரு உதவிப்பொருளைக்கொண்டு அணைத்தே சுடுவான். அவனது சூடு எப்போதும் இலக்குத் தவறியது இல்லை என்பது அவனது உயிருக்கு உயிரான எஸ். எல். ஆர்., எஸ் 84 ரக துப்பாக்கிகளுக்கே அதிகம் தெரியும்.

தனது உயரமே உள்ள எஸ்.எல்.ஆர். துப்பாக்கியுடன் எந்த வேலையையும் திறம்படச் செய்து முடிக்கும் இளையவீரன் தனுகரனுக்கு, எஸ்.84 துப்பாக்கி கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டுவிட்டது. என்றாலும் அவனை அதிர்ச்சியில் ஆழ்த்தி ஒரு காரியம் செய்ய நினைத்த மாவீரன் லெப்.கேணல் உருத்திரன் ஆசிரியர் தனுகரனை கூப்பிட்டு....


டேய் குழப்படி... நீ அந்தா இருக்கிற மீன் பேணிக்கு 02 ரவையில ஓட்டை போட்டால் (150 மீற்றர்) உனக்கு ஒரு எஸ். 84 தரலாம் என்றார்.

இப்போது தனுகரன் கதைக் கிறான்..... 200 மீற்றரில அதை வையுங்கள்... நான் இரண்டு ரவையிலையும் படும்படியா அடிச்சா எனக்கு பொறுப்பாளரின்ர (மாவீரன் கப்டன் சோமு) எஸ் 84 தருவியளோ என்று கேட்டான். காரணம் தனுவுக்குக் கொடுக்க இருந்தது மர அடிச்சட்டத்தைக் கொண்டது. கப்டன் சோமுவிடம் இருந்ததோ ரவை அடி மடிக்கக் கூடியதாகும். அதைவிடவும் இன்னுமொரு நிபந்தனை. நான் அடிச்சால் எங்கள் பிரிவின் சார்பாக எனக்கு 3.8 ரக கைத்துப்பாக்கியால் 10 ரவை அடிக்கத்தரவேண்டும் என்றான. அவன் அடிக்கமாட்டான் என்ற நம்பிக்கையில் நிபந்தனை ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் லெப்.தனுகரன் குறிதவறாமல் சுட்டு வெற்றிகண்டுவிட்டான். அவனது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

இப்படியாகவே அவனது போராட்டவாழ்வு நகர்ந்து சென்றது. லெப். தனுகரன் வயதில்தான் சிறியவன் சண்டையில் அவன் பெரியவன் மட்டு மல்ல, வேகமான வீரன் எதையுமே எளிதில் எதிர்கொண்டு செயல்படுத்தி, வீறுடன் வெற்றிகொள்ளும் அபார ஆற்றல் அவனிடம் இருந்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க)






# அவனின் கேள்விகள்

**சி.மாதுளா**

'கபிலன்' பார்த்தோரை சுண்டி இழுக்கும் துறு துறு விழிகள் - யானைச் செவி. கொவ்வம் பழத்தைத் தோற்கடிக்கும் இதழ்கள். வனத்தால் வரியப்பட்ட 'பெரிய மடு' எனும் பழங்குடி கிராமத்தின் எழில் வண்ணம் அவன்.

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள். மழலைச்சொல் கேளாதவர்."

குழந்தை பெற்றிருந்தால் திருவள்ளுவர் குரலை மாற்றி குறளை மாற்றி இருப்பார் என்பதே அவ்வூர் பெரும்பான்மையான மக்களின் மாற்ற முடியாத கருத்து. உள்ளதை உள்ளபடியே சொன்னால் குழந்தைகளின் நச்சரிப்பிலிருந்து தொல்லையிலிருந்து சிலமணி நேரம் விடுபடவே பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பினர். கபிலனின் அம்மாவும் அதற்கு விதிவிலக்கானவரல்ல.

"எல்லோரும் நாளைக்கு கட் அடிக்காம பள்ளிக்கு வரவேணும். ஊசி போட எண்டோ, போலியோ மருந்து தர எண்டோ நினைச்சிடாதீங்கோ உங்களுக்கு நாங்கள் படம் காட்டப் போறம்" "ரீச்சர் பொய் சொல்லுறா" என்ற சிறுவர்களின் குசுகுசுத்தலுக்கிடையே "என்ன படம் ரீச்சர்?" கபிலனின் கீச்சுக்குரலை "கேள்விகளை மட்டும் கேட்பீர் படிக்க மாட்டீர்" என்ற ஆசிரியரின் வீச்சுக்குரல் தடுத்தது. "கேள்விகள்தானே கல்வி" இந்த விடயத்தில் ஆசிரியருக்கும் ஐந்து வயதுதான்.

இரவில் தங்கள் இருப்பிடமாக மாடுகள் போக்குவரவுப் பாதையை மாற்றியிருந்தமையால் - ஈரம் பிடித்து புழுதி மண் அடங்கியிருந்தது. சட்டி கவுத்தாற்போல் சாணம் பாதையை அழகுபடுத்தியது. மாடுகளின் 'மூத்திர நெடி' அவ்வூரின் தனி வாசனை.

அப்பாதை வழியே 'நாளை அவ்வூரை ஆளும் மன்னனின் மிடுக்குடன் என்றுமில்லா 'புளுகுடன்' கபிலன் முன் பள்ளியை நோக்கி ஓடினான்.' பிஞ்சுப்பாதங்களில் வலியின்றி. உடலில் களைப்பின்றி முன் பள்ளிக்குள் துள்ளிச் சென்றான்.

"பாரன் காலில சாணத்தை அப்பிக்கொண்டு உள்ள வாறாய் ஓடிப்போய் கழுவிற்று வா" "சாணத்தில காலை வைக்காம பார்த்து வரவேண்டியது தானே" சக ஆசிரியரின் பக்க வாத்தியம் எல்லாமே அவன் அகத்தில் 'மனித சாணத்தை' அப்பியது.

"இன்றைக்கு தொலைக் காட்சியில 'சிறுவர் நிகழ்வுகள்' காட்டப்போறம் எல்லோரும் நிரை நிரையாய் இருங்கோ" ஆசிரியர் கூறியதும் 'கீயோ மாயோ' கூச்சலுடன் சிறுவர் குழாம் தொலைக்காட்சிப்பெட்டியின் முன் ஒன்று கூடியது. இதுவரை தொலைக்காட்சிப்பெட்டியையே பார்த்திராத பத்து வயதுகளும் சில வந்திருந்தன. அதில் ஒன்று ஆசிரியரின் மூத்தது. பெயரில் மட்டுமே அறிவை வைத்திருக்கும் அறிவு. "முன் வரிசையில் அமர்ந்து 'பூடாரம்' பார்ப்பது போல் தொலைக்காட்சியைப் பார்த்தது. 'ரீச்சர் அறிவு ரி.வி யை மறைக்கிறான்.' அதுக்குள் 'யாரோ ஒண்டுக்கு' பட்டணத்துக்கு போய் வந்த அறிவில் ரி.வி என்ற ஆங்கில சுருக்கம் தெரிந்திருந்தது. "ரீச்சர் தொலைக்காட்சிப்பெட்டி எண்டா என்ன? ரி.வி எண்டா என்ன?" தொலைக் காட்சிப் பெட்டிக்குக் கீழே இருந்த கபிலனின் கேள்விக்கு "உனக்கு நான் சொல்லுறனான்..." ஆசிரியரின் 'ரெடிமெற்' பதில் விரைவாய் வந்தது.

தொலைக்காட்சி இயங்கத் தொடங்கியது. தொலைக்காட்சிப்பெட்டியின் கீழ் அமர்ந்திருந்த கபிலன் திரையில் முன் பகுதி தெரியக்கூடிய இடத்திற்கோடிவந்தான். தொலைக்காட்சியில் 'புள்ளிகள் வருவதனைக் கண்ட பத்து வயசில் 'ஒண்டு' டேய் படம் வந்திட்டடா? தனக்கு மட்டும்தான் கண் இருப்பதுபோல் கத்தினான்.' "ஆராவது சத்தம் போட்டா படத்தை நிப்பாட்டிப் போடுவன்" ஆசிரியர் அதட்டினார். எழுந்தும் எழாமல் தொலைக்காட்சியில் படத்தை ஆழமாய் பார்த்தான் கபிலன்.

பென்னாம் பெரிய இராட்டினங்களில் சிறுவர்கள் வலம் வந்தார்கள். நீண்ட சரிவில் 'சர்' என சறுக்கினர். அழகான வண்ண வண்ண ஊஞ்சல்களில் உல்லாசமாய் ஆடினர். நீண்ட சுற்றில் அந்தரத்தில் மிதந்தனர். நளினமாய் ஆடினர். நீண்ட விளையாட்டுத்திடலில் பூக்களின் நடுவே ஓடினர் பாடினர் -கூடினர். 'ஒரு குழந்தையை வையாதே பாப்பா' ஆசிரியர் அழகாகப் பாடினார்.- குழந்தைகள்தான் அங்கு ஆசிரியர்கள். ஆசிரியர்கள் தான் குழந்தைகள். 'பிரம்பு' இல்லை. 'வரம்பு' இல்லை - கபிலன் ஆசிரியரைப் பார்த்தான். "ஏன் ரீச்சர் எங்களிட்ட அப்படி பள்ளிக் கூடமோ விளையாட்டுச் 'சாமான்'களோ இல்லை." "உனக்கு பிரம்புதான் பதில் சொல்லும் மற்றப்பிள்ளைகளைப் போல பேசாமலிருந்து பார்." தொலைக்காட்சி நோக்கிய தலையை அசைக்காது ஆசிரியர் அதட்ட 'பார்த்தியளே...! எவ்வளவு நல்ல பிள்ளைகளாய் குழப்படி இல்லாமல் நல்லாப்பாட்டுப் படிக்கினம். விளையாட்டுத்தனம் நீங்களும் இருக்கிறியளே நாங்கள் எடுத்துச் சொன்னால் கேக்கிறியளே பிரம்புக்குத்தான் அடங்கிறியள்" சக ஆசிரியர் குழந்தைகளை விட அதிகமாய் சத்தமிட்டார்.'

பல வருடங்களின் முன் முறிந்து இன்னும் இத்துப்போகாதிருக்கும் 'பாலை' மர அடிக்கட்டையில் ஒக்காந்தபடியே "ஏன் பிரம்பு ஏன் வரம்பு" தனக்குள் கேள்வி கேட்டு கபிலன் சிரித்தான்.

"ஏன்ரா 'கொச்சிக்காய்' உனக்குள்ளேயே சிரிக்கிறாய்?" தெருவோர 'பழக்கடை' காரன் வாசு உசுப்பிய போதே கபிலன் தன்நினைவுக்கு வந்தான்.

இந்த நாட்டின் 'பிரசை' யாகிய போது அவனது பெயர் 'கபிலன்' அது 'நிராசை' ஆன அவனது பெயர் கொச்சிக்காய்.

'கொச்சிக்காய்' அவனது காற்சட்டையின் பின் பகுதியில் ஏற்பட்டிருந்த ஓட்டைகளில் தபால் என கற்களினைப் போட்ட தெருவோர 'பட்டதாரிகள்' அவனது காற்சட்டையின் முன்பகுதி சிப் அறுந்திருந்த வேளை அதற்குள் தங்களிடம் இல்லாத ஏதோஒன்றைக்கண்டதில் வந்த காரணப் பெயரே கொச்சிக்காய்.

பதின்நான்கு வயதில் அவனுக்கு கொச்சிக்காயின் காரணம் புரிந்தது. அப்படி யாராவது அவனைக் கூவி அழைத்தால் கையில் எது கிடைக்கிறதோ அதனால் எறிந்து விடுவான். இதற்கு விலக்கு பழக்கடைக்காரன் வாசு மட்டுமே. அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. கபிலனுக்கு கிடைக்கிற ஒரு நேர உணவுக்கும் தேனீருக்கும் ஒட்டுத்துணிக்கும் வாசுதான் சொந்தக்காரன்.

பதின்நான்கு வருட மனித வாழ்வில் மனித உணர்வுகள் கபிலனுக்கு மரத்துப் போயின. அன்பு, பாசம், அரவணைப்பு ஈறான ஈர ஊற்றுக்கள் வற்றிப் போயின. 'அழகுணர்ச்சி.' அடியோடு அற்றுப்போயிற்று. கள்ளச்சாராய குடியில் தகப்பனை இழந்தான். கள்ளக்காதலனின் வேட்கையில் தாயை பறிகொடுத்தான். உறவுகளின் உரசலில் நிர்க்கதியானான். இன்று அவனுக்குத் தெரிந்ததெல்லாம்.

"வயிறு பசிக்கும் அதற்கு ஏதாவது போடவேண்டும்." 'முகங்கழுவுவதற்கு எந்தத் தேவையுமில்லை - ஆனால் - மலம் போவதனால் 'அதைக் கழுவ வேண்டும்.' 'கொச்சிக்காய்' மறைய ஒட்டுத்துணி சுற்ற வேண்டும். களவெடுத்தால் பொலிஸ் பிடிக்கும் 'இரந்து' எவ்வளவு தேடினாலும் அவை பிடிக்காயினம்.. 'மனிதர்களுக்கு பொதுவான கொள்கைகளெண்டு ஏதுமில்லை' - 'கேள்விகள் கேட்பது மகா தவறு' 'வரம்பு இல்லை' 'ஆனால்' 'பிரம்பு' தேவையா? இல்லையா என்பதில் இன்னும் ஓர் உடன்பாடில்லை.

கபிலனிடம் அழகுணர் வெண்டு பார்த்தால் , 'நிலவு' மலை மேல் ஏறி மல்லிகைப்பூ எடுத்துவர, விரிந்து கிடக்கும் 'நீலக்கடல்' மீன் பிடிப்பதற்காக, புரிய முடியாத உணர்வுடன் அம்மிக் கிடக்கும் 'குளம்' 'குண்டி' கழுவுவதற்கு, பச்சைப் பசேலென்ற 'வயல்வெளி' சோற்று அரிசி விளைவதற்கு, இருண்டு கிடக்கும் 'காடு' மருண்டு வாழும் மிருகங்களின் வீடு, பஞ்சுப் பொதியென மலைமுட்டி ஓடும் 'மேகம்', மழை பெய்வதற்கு 'நீலமயில்' முருகனின் வாகனம் 'காகம்' ஆச்சியின் வடை பறிக்க, 'நரி' ஏய்த்துப் பிழைக்க 'புளியமரம்' பேய்களின் வீடு 'அரசமரம்' கடவுளர் இருப்பிடம், பூசகரின் வியாபார நிலையம்,பெண்கள் தன்னைப் போன்றோருடன் கதைப்பதே 'பாவம்' என ஒதுங்கி நடப்பவர். 'ஆண்கள்' நாளுக்கொரு 'பட்டப்பெயர்' சூட்டி இச்சையுடன் இம்சைப் படுத்துவர். 'மனிதர்கள்' தம்பசிக்காக பிறர் வயிறுகளை வெறுமையாக்குவோர். இதற்கப்பால் துளிர்பவை என்று அவனிடம் எதுவுமில்லை.

ஏன் போனான்? எதுக்குப் போனான்? எதுவுமே அவனுக்குத் தெரியாது சிந்தை மேலோங்க ஒரு நாள் தமிழீழப் போராட்டப் பாதையில் இயக்கத்தில் இணைந்து விட்டான்.

"தம்பி உங்களுக்கு வயது போதாது திரும்பவும் வீட்டுக்கே அனுப்பப் போறம் நல்லாய்ப் படிச்சுப் போட்டு விரும்பினால் பதினெட்டு வயசுக்குப் பிறகு இணையலாம்" பொறுப்பாளர் பொறுப்பாய் கூறினார்.

'தம்பி' எவ்வளவு கனிவானதோர் அழைப்பு, ஆறுதல் வார்த்தைகள் எதிர்காலம் சிறக்க பொழிந்த மழையாய் கபிலனுக்கு உள்ளூர ஓர் குளிர்மை.

'உலகப் பொதுமன்று' எனப்படும் சபையின் 'சிறுவர்களுக்குப் பொறுப்பான அமைப்புக்கு' அவனை அப்பொழுதுதான் தெரிந்தாற் போல் விரைந்து வந்து பொறுப்பெடுத்து முதன் முதலாய் 'சொகுசு' வாகனத்தில் ஏறினான். இனி... தன் வாழ்வும் இப்படியே அமையுமென எண்ணினான்.

நீண்ட 'படிவம்' ஒன்றுடன் ஒருவன் வந்து கேள்விகள் கேட்டான். "கேள்விகள்" அவனுக்குள் உள்ளூர சிரிப்பு- இருப்பினும் பதில் சொன்னான்.

உன் பெயர் - 'கொச்சி...இல்லை,

வயது -?...

பாடசாலையிலிருந்து விலகிய காரணம் - அறிவுப் பசியை வயிற்றுப் பசி விஞ்சியமை...




"உனக்குரிய நலன்களை எங்கட அமைப்பு தொடர்ந்து கவனிக்கும் நீங்க உங்கட 'மாமாவின்ர' வீட்டில இருந்து பள்ளிக்கு போறிங்க. நாங்கள் எல்லாம் கதைச்சாச்சு."

'எட்டு'ப் பயிற்சிக் கொப்பிகளுடன் மாமாவின் வீட்டில் இறக்கப்பட்டான் கபிலன்.

அழகான வீடு, சூழல், மனிதர்கள், புதிதாய் உணர்வுகள் அவனுள் துளிர்ந்தன.

கன்னம் வழி வாரி தலைசீவி, பள்ளிச் சீருடையுடன் மிடுக்காய் கண்ணாடி முன்நின்றான்.

"அடேங்கப்பா என்னைப் பார் என் அழகைப்பார். நிமிர்வைப் பார் என்னிடம் குறை என்பதே குறையில்லாதிருப்பதுதானே- என் உரிமைகள் ஏன் இல்லையென்றாகின" சடப்பொருளான கண்ணாடி அவனை அவனாக காட்டியது துள்ளிச்சென்றான் பள்ளிக்கு.

"சின்ன வயசிலேயே ஒழுங்காப் படிச்சிருந்தால் நான் சொல்லுறது மண்டைக்க புகாமல் இருக்குமே.... சருகுக்க இருக்கிறதுகள தூக்கி வைச்சா இப்படித்தான். அரசாங்கம் தாற சம்பளத்துக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்"

(22ஆம் பக்கம் பார்க்க..)

## எமதர்மராசா




**வைத்தியர்:-**
A 9 ரோட்டில உங்கள் மீது வாகனத்தை மோதியவரின் பெயர் ஞாபகமிருக்கா?

**விபத்துக்குள்ளானவர்:-**
எ.ம.தர்மராசா டொக்டர்



# இளைய நாதம்




## எங்கள் நரி

சீச்சி-இந்துப்பழம் புளிக்கும் - என்று சொன்ன நரியின் கதை உங்களுக்குத் தெரியும்.

ஆச்சி சுட்ட வடையை வைத்திருந்த காகத்திடமிருந்து அதை எடுக்க பாட்டுப்பாடச் சொன்ன நரியையும் உங்களுக்குத் தெரியும்.

ஏராளமான நரிக்கதையளை நீங்கள் கேட்டிருப்பியள். அந்த நரிக்கு குள்ளநரி என்ற பெயரும் கதைகளில நீங்கள் அறிந்திருப்பியள். இந்த நரியப் பற்றித்தான் பார்க்கப்போறம். இது கதையல்ல எங்கடைகாட்டுக்குள்ள இருக்கிற உண்மையான நரியைப்பற்றின கதை. கற்பனை இல்லை உண்மை.

• எமது வன்னி - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை காடுகளில நல்ல கட்டையான - நாய்கள் பலர் வீடுகளில வளர்க்கிற வெள்ளை பொமேரியன் நாய்க்குட்டிமாதிரி கூரான மூஞ்சியோட பழுப்பு வண்ணத்தில நரியளை நாங்கள் பார்க்கலாம். காட்டுப்பகுதி வீதியோர புதர்களுக்குள்ளால இவை எட்டிப் பார்க்க நாங்கள் காணலாம். எங்களிட்ட இருக்கிறது இந்த கட்டை நரிதான். இதை 'குள்ளநரி' என்று கூறுவார்கள். ஆங்கிலத்தில் - 'Jackcal' என்பார்கள்.

நரி கத்திறதை - ஊளை யிடுவது என்று அறிவீகள். ஆனால், நமது குள்ள நரியர் ஊளையிடுகிறதில்லை. ஒரு நடுக்கமான 'குரைப்பே' குள்ளநரி எழுப்பும் ஒலி - பகலில் இடம் கடக்கும் போது இவற்றை நாம் நம்காடுகளில் வீதிக்கண்மையாக பார்க்கலாம். ஆனால், இந்தக்குள்ள நரிகளின் நடமாட்டம் அதிகம் இரவில தான் இருக்கும். நல்ல நீட்டான சடைவால் கொண்ட கட்டைநாய் மாதிரி இருக்கும். குள்ளநரியின் நிறை ஆகக் கூடினது 3 அல்லது 4 கிலோவாகத்தான் இருக்கும். கொஞ்சம் தந்திர புத்தி இருக்குத்தான் - ஆனால் கதைகளில இருக்கிற மாதிரி தந்திர புத்தி உண்மையில குள்ள நரிக்கு இல்லை. குள்ளநரியளின்ர சாப்பாடு-எலி, வண்டு, பூச்சிகள் மாதிரி சின்னச் சின்னப் பிராணிகள் தான். காட்டு எல்லை வீடுகளில் கோழிகளை பிடிக்கவும் இந்த குள்ளநரிகள் வரும் கவனம்.



இந்த குள்ள நரிகள் எங்களுடைய வெப்பம் கூடின வரண்ட காடுகளில வெளிகள் - சின்னப்புதர்கள் இருக்கிற இடங்களில தான் இருக்கும். இது தரையிலை வளை தோண்டி அதற்குள்தான் தங்கும் இந்த வளை நல்ல ஆழமாக இருக்கும். வலு வேகமாக ஓடுவது வேகமாக சுழன்று திரும்புவது குள்ள நரியின் அதி கூடின திறமை.

நரிக்கொம்பு என்று கேள்விப் பட்டிருப்பியள், அது ஏமாத்து. நரிக்கு கொம்பு கிடையாது.

நரி ஒரு நாய்வகை மிருகம். குள்ள நரியின் உயிரியல் பெயர் - கனிஸ் ஓரியஸ் லங்கா குள்ளநரிகள் அநேகம் இரண்டிரண்டாகவும் சிலவேளைகளில் மட்டும் அதிகமாகவும் கூட்டாகத் திரியும்.

## சொற்சிலம்பம் - 48

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ா | ச | கா | ச | த் | வ | பெ |
| யி | க் | ப | கு | றை | கே | பூ |
| ளி | ன் | து | ர | த | ரு | ங் |
| ங் | ள | யா | மா | உ | டி | ல் |
| மு | ம | ர் | ம் | ந் | தா | ன் |
| து | ல | ரி | தா | ம் | தி | கி |
| க | வா | மு | ளி | சி | பி | கே |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -46 இன் விடைகள்

01. போர்த்துக்கேயர்.
02. பிரித்தானியர்.

01. வௌவால்.
02. பெங்குவின்.

### சொற்சிலம்பம் - 46 இன் பரிசுக்குரியவர்

S.கிசோபிகா,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் - 46 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தி.அனுஜன், 8 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
02. அருள்நேசன், பூந்தோட்டம், வவுனியா.
03. புஸ்பலதா, கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம்.
04. ரிசாலினி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
05. ச.சதீஸ், செல்வபுரம், வவுனிக்குளம்.
06. சு.ஆதித்தா, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

01. இலங்கையில் பழைமைவாய்ந்த சுவரோவியம் அமைந்துள்ள இடம் எது?

01) ....................................

*சொற்சிலம்பம்-48*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. தமிழர் தாயகப்பகுதியில் சிமெந்து தொழிற் சாலை அமைந்துள்ள இடம் எது?

01) ....................................

பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

### கனவு



மனைவி:- "கெட்ட, கெட்ட கனவா வருகுதுங்க...."
கணவன்:- "அப்படி என்ன கனவு"
மனைவி:- "நானே சமைக்கிற மாதிறி நானே உடுப்புக்கள் தோய்க்கிற மாதிரி.

### நீரும் நிறமும்

ஆற்றுவெள்ளம் மண்ணிறம்
அருவியில் நீர வெண்ணிறம்

குளத்து வெள்ளம் புல்நிறம்
குட்டையில் நீர கருநிறம்

கத்துங் கடல் வான்நிறம்
கரையில் வெள்ளம் பொன்னிறம்

கையில் அள்ளிப் பார்க்கிலோ
காணும் நிறம் இல்லையாம்!

### கைவண்ணம்



செ.செல்வரதி,
பாரதி இல்லம்,
வள்ளிபுனம்.

## எலியாரின் தொப்பி

பகுதி-02



கவிதைகள்

## உள்ளன்பு உறவுக்காய்...

வெப்பம் காற்றின்
இதயத்தில் புகுந்து
வெறுமையின் உடல் தடவி
குளிர் ஆடை களைந்தது

ஊர்வலம்வந்த போது
வெப்பத்தின் கால்கள்
தாளமிட்டுக் கொண்டது
ஊர் எல்லைவரை

எங்கோ... கண் நோட்டம்
விட்ட இடம் எல்லாம்
பசுமையின் நிறம் மாறி
வெப்பத்தின் ஆட்சி அரங்கேறியது.

குடிநீர் குவளையும்
தாகத்தால் தவித்தது.
அதன் கண்ணீரும்
வெப்பத்தின் நாவுக்கு சுவையானது.

நிலமகளும் தவித்திருந்தாள்.
நாளை...நாளைஎன தவித்திருந்தாள்.
மழைநாயகனை எதிர்பார்த்து
உள்ளன்பு உறவுக்காய்...

ரமணன்

## வேண்டப்படாதவன்

காலவிரிப்பின் ஓட்டத்தில் - கழிந்தது
புலர்காலைப் பொழுது
நேற்றைய விடியலின் மாற்றத்தில்
ஏக்கத்தின் எதிரொலிப்பு

இன்றய நாளின் விரிப்பிலும்
நேற்றய காட்சியே
மனதைக் குடைந்த மனவலியுடன்
என் ஊர் நோக்கி

கலகல என சனத்திரளின் ஒலி
அத்திசை நோக்கி என்பார்வை
வானுயர நிலைகுத்திப்போன அவன் பார்வை


உடைஇல்லாத வெற்றுடலோடு
அவன் கிடந்தான்
குருதியின்படர்வில் அவன்முகத்தில்
இலையான்களின் அனுதாப அலைகள்
வேண்டப்படாதவனாய்.

வீதியோரத்தில் தனித்துக் கிடந்தான்
யார்செய்தார்? எவர்செய்தார்?
எனக்கேட்டோம்.

துரோகத்தின் செயலுக்குகிடைத்த
தர்மத்தின் தீர்ப்பு...

கிளிவெட்டியூர் - பரணி





இலக்கியப்பகிர்வு

# பதச்சோறா? துளிநஞ்சா?

## விமர்சனத்திற்கு - ஒரு விசனம்

பட்டிக்காட்டான் பட்டணம் பார்த்த மாதிரி வாயைப்பிளக்கும் விமர்சனங்கள் எழுதப்படுவதால் எவருக்குமே நன்மைகிடையாது. பட்டிக் காட்டானுக்கோ, பட்டணத்திற்கோ அல்லது பத்திரிகையை நம்பிப் படிக்கும் வாசகர்களுக்கோ தானும்.எழுதுபவர்களுக்கு வாசகர்களைப் பொறுத்து 'பொறுப்பு' ஒன்று உண்டு. முக்கியமாக அதிகம் அந்தப் பொறுப்புடன் பார்க்கும் போது விமர்சனத்தை எழுதுபவருக்கும் நூலாசிரியருக்குமிடையிலுள்ள உறவு பின்நிற்க வேண்டும்.

இவ்வளவையும் ஏன் எழுத வேண்டி வந்ததென்றால், கடந்த மாதம் 23-29 திகதியில் வெள்ளிநாதத்தில் பிரசுரமான மகிழ் என்பவர் எழுதிய 'பதிவுகள்' என்ற நூலின் 'மதிப்புரை' (?) யைப் படித்துவிட்டுப் பிரமித்துப்போனேன். பிறகு அந்தப்புத்தகத்தை எப்படியோ தேடிப்படித்ததால் எனக்கு உண்டான உணர்வுகள் இதனை எழுதத் தூண்டியது.

இந்த நூலைப்படித்ததும் என்னை முக்கியமாகப் பாதித்த விஷயங்கள் மூன்று. 1) காலஞ்சென்ற 'சமர்' பத்திரிகை ஆசிரியர் டானியல் அன்ரனி பற்றி வருகிற குறிப்பு. (பக்.99) 2) மாற்கு பற்றிய 11ம், 14ம் பதிவுகள். 3) பின் மட்டை அறிமுகக்குறிப்பு. ஒவ்வொன்றாய் நோக்குவோம். அ.யேசுராசா பக்கம் 99ல், ஒரு கூட்டம் பற்றி குறிப்பிட்டுவிட்டு, பின்னர் "சபையோர் கருத்துரை நிகழ்த்தி ஒரு மணி நேரமாக சுவாரஸ்யமாக நடைபெற்றது" என்கிறார். அப்படி என்ன சுவாரஸ்யம்? பாருங்கள்;

"....ஆயினும் டானியல் அன்ரனி கருத்துரைக்கையில் நான் அறிந்தவரையில் மாவ்கோஸ்கி தற்கொலை செய்யவில்லை மாவ்கோஸ் இயற்கையாகவே மரணமடைந்தார் என்றார். அவருக்கும் பதிலளித்த "சோழன்" இவ்வாறு சொன்னார்; "நான் சோவியத் ரஷ்யாவில் ஆறு வருடங்கள் இருந்தவன்". மாவ்கோஸ்கி தற்கொலை செய்யவில்லையென டானியல் அன்ரனி சொன்னார். சிலவேளை அவர் சொன்னது போல மாவ்கோஸ்கி என்று ஒருவர் இருந்து அவ்வாறு தற்கொலை செய்யாதிருக்கலாம்; ஆனால் மாவ்கோஸ்கி தற்கொலைதான் செய்தார் ஏன் அவர் கொலைசெய்யப்பட்டார் என்ற கருத்துக்கூட அங்குநிலவுகிறது.

எப்படியிருக்கிறது சுவாரஸ்யம்? மாயா கோவ்ஸ்க்கி என்ற பெயரை டானியல் அன்ரனி மாவ்கோஸ்கி என்றதும் அதற்கு சோவியத் ரஷ்யாவில் ஆறுவருடங்கள் இருந்த சோழன் என்பவர் அடித்த நக்கலுந்தான் சுவாரஸ்யம்! எப்படியிருக்கிறது சுவாரஸ்யம்? எப்படியிருக்கிறது "பதிவு"செய்தவரின் பண்பாட்டு, ரசனை மட்டம்? (டானியல் அன்ரனி என்ற இந்த நேர்மையான இலக்கியவாதி தமது நடுவயதுக்காலத்தில் நோய் வாய்ப்பட்டு ஏறக்குறையப் பத்து வருடங்களுக்கு முன் காலமாகிவிட்ட ஒருவர் என்பதையும் இங்கே (மகிழ் குறிப்பிடுகின்ற) ஒரு புதிய வாசகனுக்குச் சொல்லிவைக்கவேண்டும்.)

"சோவியத் ரஷ்யாவில் ஆறுவருடங்கள்" இருந்ததால் ரஷ்ய இலக்கிய விவகாரங்கள் முழுதும் சோழனுக்கு அத்துப்படி ஆகிவிடுமா? அப்படியென்றால் இருபது, இருபத்தைந்து வருடங்களாக பிரான்சிலும் ஜேர்மனியிலும் இருக்கிற எங்கள் மக்கள் எல்லாரும் பிரஞ், ஜேமன் இலக்கியங்களைக் கரைகண்டிருக்க வேண்டுமே!

இதுதான் போகட்டும் பதிவுகள் புத்தகத்தின் 51ம் பக்கத்திற்கு வருவோம். சிங்கிஸ் ஐஸ் மத்தோவ் றோல்ஸ்ரோய் என்பவர்களைப்பற்றியெல்லாம் அ.ஜேசுராசா குறிப்பிடுகிறார்! யார் இவர்கள்? "ஐஸ்மத்தோங்" என்ன ஐஸ் தொழிற்சாலையில் வேலை பார்ப்பவரா? "குல்சாரி" போன்ற நவீனங்களை எழுதிய அவரின் பெயர் ஐத்மாத்தவ் என்றுதான் குறிப்பிடப்படுகிறது."றோல்ஸ் ரோய்" என்றால் என்ன, "றோல்ஸ் ரோய்ஸ் என்கிற காரா? இவர் குறிப்பிடுகிற இந்த மாபெரும் ரஷ்ய எழுத்தாளரின் பெயர் "லேவ் தல்ஸ்தோய்" அதாவது, "தல்ஸ்தோய்" என்றுதான் ரஷ்யாக்காரர்களே மொழிபெயர்த்து தமிழில் பதிப்பித்த நூல்களில் இருக்கிறது. அப்படியென்றால் யார் "றோல்ஸ் ரோய்"?



அ.யேசுராசா

இவற்றிற்காகவெல்லாம் யாராவது நக்கல் அடிக்கப் புறப்பட்டால் அதிலும் "சுவாரஸ்யம்" இருக்காதா, என்ன?

பதிவுகள் புத்தகத்தில் வருகிற இந்தக் குறிப்பை, அந்தப் புத்தகத்திற்கான "பதச்சோறு" எனக் கொள்ளலாமா அல்லது அந்த ஒரு குடம் பாலில் இது ஒரு துளி நஞ்சா?

இனி அடுத்த விடயத்திற்கு வரலாம். ஓவியர் மாற்கு பற்றி, 11ஆம் 14ஆம் பதிவுகளில் விபரமாகக் கூறப்படுகிறது. ஆனால், எனக்கு என்னவோ, "சாளரம்" என்ற சஞ்சிகையில் ஜனவரி 1995இல் வெளியான ஓவியர் ராசரத்தினம் அவர்களின் நேர்காணலில் கூறப்பட்ட கருத்துக்கள்தான் நினைவு வருகின்றன! இந்த நேர்காணலில் இதே அ.யேசுராசா போன்றவர்களால் வெளியிடப்பட்ட தேடலும் படைப்புலகமும் புத்தகத்தில் "பிரசுரிக்கப்பட்டிருப்பனவற்றில் மாற்குவின் பல ஓவியங்கள் ஏற்கெனவே பலர் வரைந்த ஓவியங்களின் மறுபிரதியே"என்று குறிப்பிடுகிற ராசரத்தினம் அவற்றிற்கான ஆதாரங்களையும் தெளிவாகக் கொடுத்திருந்தார். ஆனால் ராசரத்தினத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு இதுவரையில் யாரும் மறுப்பு எழுதியதாகத் தெரியவில்லை. பூனை கண்களை மூடினால் பூலோகம் இருண்டு போகுமா? பதிவுகள் 1இல், அ.யேசுராசா குறிப்பிடுகிற "சத்தியமே அதனுடைய தளம்" என்பது இதுதானோ? இவையெல்லாம் ஒரு "புதிய வாசகனுக்கு" மூடி மறைக்கப்படவேண்டும் என "மகிழ்" விரும்புகிறாரோ?

கடைசியாக நிலாந்தன் என்பவர் எழுதிய (பதிவுகள் புத்தகத்தின்) பின் மட்டைக் குறிப்பு "மகிழ்" 'மதிப்புரை எழுதிய அதே பரவசத்துடன்தான் நிலாந்தனும் இந்தக் குறிப்பை எழுதியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.


அக்குறிப்பில், யேசுராசாவுக்குத் 'தெரியாத' விசயங்ளைக் கூறுகையில்; "உடனடியாகப் பொய் சொல்லத்தெரியாது" என்கிறார். இதன் கருத்து "ஆற அமர யோசித்துப் பொய் சொல்லத் தெரியும்"என்பதா?

'தனியன்' 'தனியன்' என்கிறார் நிலாந்தன். ஆனால் அ.யேசுராசாவை அறிந்தவர்களுக்கு அவர் ஒருபோதுமே 'தன்மை-ஒருமை'யில் கதைப்பதில்லை என்பதும் எதற்கும் 'நாங்கள்' என்றே சொல்வதும் தெரியும்! அப்படியானால் தனியன் என்பது? நிலாந்தனுக்கு 'அலியன்களும் தனியன்கள்' தான் என்பது தெரிந்திருக்கவேண்டுமே! ஈழப்போரின் இலக்கியப்பரப்பில் அதிகம் சாதித்த ஒரு தனியன் அவர் என்கிறார் நிலாந்தன். இதற்கு என்ன ஆதாரம் நிலாந்தன்?இருந்தால் காட்டுங்களேன்.

எஸ். அன்ரன்

# வீடு

பெண் அடிமை பெண் அடிமை என்று சொல்கிறோமே; இங்கு பெண்கள் அடிமை என்று யார் சொன்னது. ஆண்கள் தான் அவளை அடிமை செய்கிறார்கள், கொடுமை செய்கிறார்கள் என்று நேர்முகமாகவே ஆண்களை தாக்குகிறார்கள். உண்மை அதுவல்ல. ஆண்களை விட பெண்கள் உயர்ந்தவர்களுமல்ல, இருவருமே இரு தூண்கள். இந்தத் தூண்கள் சரிசமமாக இல்லாவிட்டால் குடும்பம் என்ற கோபுரம் எழும்புவது எப்படி, பெண்களை சீதனம் கேட்டு ஆண்கள் கொடுமை செய்கிறார்கள். இதனால் எத்தனையோ கன்னிப் பெண்கள் திருமணவாழ்வின்றி தனிமையில் தவிக்கிறார்கள், என்று நாம் மிகவும் கவலைப்படுகிறோம். ஒரு குடும்பத்தில் ஆண் மட்டும் இருப்பதில்லை. இங்கு அம்மாவாக, அக்காவாக, தங்கையாக பெண் இருக்கிறாள். இவர்களின் உந்துதலால் தான் அதிகமான ஆண்கள் இந்த வரதட்சனையை வாங்குகிறார்கள். அந்த ஆணால் தன் குடும்பத்தை பிரிந்து அவர்களின் கருத்துக்களுக்கு மாறாய் முடிவை எடுக்கமுடியாது. ஒரு பெண்ணின் விடுதலைக்கு ஆண்களை விட பெண்கள் தான் அதிகமாய் முட்டுக்கட்டையாக உள்ளார்கள். பெண்களைப் பற்றித் தூற்றுவதும், விமர்சனம் செய்வதும் அதிகம் பெண்கள் தான். ஒரு குடும்பத்தில் தாயின் பங்குதான் அதி



## பெண் அடிமையில்லை

முக்கியமானது. அவள்தான் தன் குடும்பத்தை செவ்வனே செய்கிறாள். அங்குதான் பெண்ணின் வளர்ச்சியும், முயற்சியும் பிரச்சினைக்கு உள்ளாகிறது. தன் பெண் தானாகவே எதையாவது செய்யமுயன்றால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் என்ன சொல்வார்களோ, என்ற அச்சத்தில் அந்தப் பெண்ணை முடக்கநினைக்கிறாள்.

பெண்கள் வீட்டுக்குள்ளே இருக்கவேண்டியவர்கள். சமையல் செய்து குடும்பத்தை பராமரிப்பதே அவர்களின் கடமை என்று போதிப்பது இந்தத் தாய் என்ற பெண்தான்.

பெண்கள் தான் பெண்களுக்கு முதல் எதிரி. ஆண்கள் தான் பெண்களை அடிமை செய்கின்றார்கள் என்று இல்லை, மாமியார் மருமகள் சண்டை, மாமியார் மருமகளை கொடுமை செய்கிறார்! என்றெல்லாம் நாம் அறிகிறோம். அப்படியிருக்க ஆண்களை மட்டும் குறை சொல்லலாமா? போராளிகள் சீதனமின்றி திருமணம் செய்கிறார்கள் என்பது உண்மைதான், அவர்கள் தம் வீட்டில் வந்து வீட்டாரின் விருப்பத்தோடு சீதனம் இன்றி திருமணம் செய்வார்களா, முடியாது. ஏனெனில் இங்கு பெண் இருக்கிறாள் ஆண் கூரியவாள் என்றாள், பெண் அதை போட்டு வைக்கும் உறை. இருவரும் மனமொத்துவர வேண்டும். பெண்ணின் வளர்ச்சிக்கு பெண்தான் உறுதுணையாக இருக்கவேண்டும். அவளின் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்ளாது ஒவ்வொரு பெண்ணின் விடுதலைக்கும் ஒவ்வொரு பெண் உதவவேண்டும். அப்போதுதான் இந்த பெண்ணடிமை என்ற சொல் அகராதியில் இருந்தே அழிக்கப்படும். ஆகவே, பெண்ணடிமை, பெண்ணடிமை என்று பேசிக்கொண்டிருப்பதைவிட அவர்களின் வளர்ச்சிக்கு என்ன செய்வது என்று நாமெல்லாம் கொஞ்சம் சிந்திப்போம்.

**எம்.சந்திரகலா**

# கீரை வடை




*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| கடலைப்பருப்பு:- | 1 1/2 பேணி |
| உளுந்து:- | 1/2 பேணி |
| சிறு கீரை:- | 2 கட்டு |
| பெரிய வெங்காயம்:- | 2 |
| பச்சை மிளகாய்:- | 4 |
| சீரகம்:- | 1 தேக்கரண்டி |
| உப்பு:- | தேவையான அளவு |
| எண்ணெய்:- | தேவையான அளவு |



*செய்முறை:-*

பருப்பு வகைகளை ஊற வைத்து நீரை வடித்து விட்டு கரகரப்பாக அரைத்தெடுங்கள். வெங்காயம் பச்சை மிளகாய், கீரை ஆகியவற்றை சுத்தம் செய்து பொடியாக நறுக்குங்கள். இவற்றை மாவுடன் கலந்து உப்பு, சீரகம் சேர்த்து பிசையுங்கள். சூடான எண்ணெயில் வடைகளாக பொரித்தெடுங்கள்.

# அவதானமாக கையாளுங்கள்

மருந்துகள் மற்றொரு அபாயம், அவசர தேவைகளுக்காக வீட்டில் வாங்கி வைத்திருக்கும் மருந்துகளையும் மாத்திரைகளையும் துறு துறுவென்றுள்ள பிள்ளைகள் சும்மா விடமாட்டார்கள்; எதையும் துருவி ஆராயும் குணம் இயற்கையின் வரப்பிரசாதம்; பெரியவர்கள் செய்வதைப் பார்த்து அப்படியே செய்யும் குணமும் சிறுவர்களுக்கு உண்டு.

எனவே மருந்துகளையும் மாத்திரைகளையும் அவர்களுக்கு எட்டாத உயரங்களில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் வையுங்கள். அவர்களாக அவற்றைச் சாப்பிடவும் அனுமதிக்காதீர்கள். சில 'அஸ்பிறின்' மாத்திரைகள் அளவுக்கு மீறினால் அபாயகரமானவை.

பழைய மருந்துப் போத்தில்களை உடனுக்குடன் தூக்கி எறியுங்கள், காலியான போத்தில்களில் வேறு மருந்துகளை மாற்றி வைக்காதீர்கள்; மாற்றினால் மறக்காமல் மருந்தின் பெயர்களை எழுதி வையுங்கள்; எல்லா மருந்துகளுக்குமே போத்தில்களின் மீது பெயர் எழுதி வைப்பது நல்லது; ஒரு தடவைக்கு இரு தடவைகள் சரியாகப் பார்த்து உபயோகிக்கவும் வேண்டும். இல்லையெனில் தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

எலி, ஈ, மூட்டைப் பூச்சி, கரப்பான் மருந்துகள், தோட்டத்திற்கான இரசாயன உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள் ஆகிய வைகளும் குழந்தைகளுக்கு எளிதில் எட்டக்கூடாது. ஆட்கள் நட மாட்டமில்லாத அறை, தோட்ட வேலைக் கருவிகள் அறை போன் றவைதான் வைக்கக் கூடிய இடங்கள்; வீட்டில் வைக்க வேண்டாம்! இவற்றின் காலி போத்தில்களையும், உறைகளையும் குழி தோண்டிப் புதையுங்கள். இவற்றையும் சிறுவர்களைக் கையாள விடக்கூடாது.

நீங்கள் இவற்றை தோட்டங்களில் உபயோகிக்கும் போது மூக்குக்கு துணி கட்டிக்கொள்ளுங்கள்; இந்த வேலை முடிந்ததும் குளிக்க வேண்டும். இல்லை யெனில் குறைந்த பட்சமாகக் கை-கால்கள், முகம் முழுவதையும் கிருமி நாசினி சோப்புப் போட்டுக் கழுவிக்கொள்ள வேண்டும்! இவற்றை நீங்கள் கையாளும் போது சிறுவர்கள் அருகில் வேண்டாமே!.

இவைகளால் பாதிக்கப் பட்டால் உடனடியாக செய்ய வேண்டிய மாற்று மருந்துகளும், முதலுதவி சிகிச்சைகளும் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவை அந்த மருந்து போத்தில்களின் மீதும், சிறிய பேணிகளின் மீதும் எழுதியிருக்கும். எல்லா மருந்துகளையும் பெயர்கள் எழுதி ஒட்டுங்கள். நீங்கள் இல்லாத போதும் யாரும் இவற் றை கையாள முடியும் அல்லவா? இவற்றால் ஏற்படும் அபாயங் களுக்கு உடனடியாக மருத்து வரை அணுக வேண்டும்!.

* * *

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர் பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*

*வீடு,*
*வெள்ளிநாதம்,*
*ஈழநாதம்,*
*யாழ்சாலை,*
*கிளிநொச்சி.*

# இப்படிச் செய்யலாம்...

துணிகளின் மீது உள்ள கறைகளைப் போக்க, கறைபட்ட இடத்தை தண்ணீரில் நனைக்க வேண்டும். நனைத்து, அந்தப் பகுதியை பிளாட்டிங் காகிதத்தின் மீது வைக்க வேண்டும். வைத்து அதன் மீது சூடான இஸ்திரிப் பெட்டியால் இஸ்திரி போடவேண்டும்.

* * *

மூக்குக் கண்ணாடி, புகை படிந்து மங்கலாகி விடலாம். அதைச் சவர்க்கார நீரால் கழுவி விட்டு, ஒரு மெல்லிய துணியால் துடையுங்கள். கண்ணாடி பளிச்சென்று ஆகிவிடும்.


* * *

கீரை ருசியாக இருக்க வேண்டுமா? சிறிது சக்கரையை கலந்து நீரில் ஊறவையுங்கள். பிறகு சமையல் செய்யுங்கள். சாப்பிடுங்கள் ருசியாக இருக்கும்.

* * *

வீட்டில் எவ்வளவு தான் நன்றாகச்சமைக்கக் கூடிய சமையல்காரர் இருந்தாலும், சமையல்காரரை முழுக்க முழுக்க நம்பியிருக்கக் கூடாது. சமையல் காரருக்கு உடம்பு சரி இல்லா விட்டாலும், சமையல்காரர் திடீரென்று நின்று விட்டாலும் பெண்கள் உடனே சமைக்கத் தொடங்கிவிட வேண்டும்.

* * *

குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்–09

பெயர்:........................................................

முகவரி:........................................................

........................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# பயிற்சிகளுக்கு வழிகாட்டப்படவேண்டும்

வடக்குகிழக்கு மாகாண மட்டத்தில் முதன் முறையாக நடத்தப்பட்ட மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை என நான்கு மாவட்டங்களின் அணிகள் கலந்து கொண்டன. இதில் கிளிநொச்சி அணி சம்பியனாகவும், மன்னார் அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. உதைபந்து போன்ற கடின ஆட்டங்களிலும் பெண்கள் தமது திறமையை வெளிப்படுத்தியமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக பலரும் குறிப்பிட்டனர்.

எண்பதுகளுக்கு முன்பு தமிழர் தாயக அணிகளே உதைபந்தாட்டத்தில் முதன்மை நிலையில்இருந்தன. இப்போது நாம் அதனை மீட்டெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். யுத்தமும் இனரீதியான புறமொதுக்கலும் எமது உதைபந்தாட்ட வீழ்ச்சிக்கு காரணியாய் அமைந்தது. இப்போது நாம் இலங்கைத் தீவுக்குள் சிறந்த அணிகளாக மாறுவதைக் கடந்து ஆசிய மட்டத்தில் முன்னணியில் உள்ள ஜப்பான், சீனா, கொரியா, சவுதிஅரோபியா, ஈரான் போன்ற அணிகளுக்கு இணையாக ஆண்களும், பெண்களுமாக அணிகள் வளர்ச்சியடைய வேண்டியது அவசியமாகிறது.

இந்த வளர்ச்சிக்கு அவர்கள் 12 வயதிற்கு முன்பிருந்தே தயார் படுத்தப்பட்டு, நுட்பங்களில் தேர்ச்சி பெற வழிவகுக்கும் பயிற்சிகளோடு, வேகமும் ,வலிமையும் மிகுந்த உடற் திறனையும் பெறும் பயிற்சிகளுக்கு வழிகாட்டப்படுவதோடு, போட்டிகளுக்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகளுக்கு நிதி என்பது பிரதானமான அடிப்படையாகிறது.

அண்மையில் லண்டனில் இருந்து 'யூனியன் பழைய மாணவர்' அணியின் 17 வயதுப் பிரிவினரை அழைத்து வந்த அவர்களின் பயிற்றுனர் திரு.சத்தியநாதன் கருத்துத் தெரிவிக்கும் போது ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதைபந்தாட்டம் தொழில் முறையாக வளர்ந்ததே காரணம் எனத் தெரிவித்தார். உதைபந்தாட்டம் ஆடுவதற்கு ஊதியம் கிடைக்கும் என்றால் மட்டுமே அதனை நோக்கி திறமையுள்ளவர்கள் வருவார்கள். ஐரோப்பாவில் உதைபந்தாட்டம் தொழிலாக மாறியமைக்குக் காரணம் நல்ல ஊதியம் கிடைப்பதுதான். அங்குள்ள பிரபலமான கழகங்களை தரவரிசைப் படுத்தியுள்ளார். லண்டனைப் பொறுத்தவரை ஒரு உதைபந்தாட்டத்தை நேரடியாகப் பார்க்க வேண்டுமாயின் ஆகக் குறைந்த கட்டணம் 20 பவுண்களாகவும் பிரபல கழகங்களுக்கான ஆட்டங்களுக்குரிய நுழைவுச் சீட்டுக்கள் ஆறுமாதங்களுக்கு முன்பே விற்று முடித்துவிடும். தொலைக்காட்சி நிறுவனங்களும் நேரடி ஒளிபரப்பலுக்கான உரிமத்துக்கு பெருமளவு பணத்தைக் கொடுப்பர். அதிக பணமீட்டும் ஒரு ஊடகமாக உதைபந்தாட்டம் இருக்கிறது என திரு.சத்தியநாதன் தெரிவித்தார்.



எம்மைப் பொறுத்தவரை உதைபந்தாட்ட நுழைவுச்சீட்டு முறைகள் இல்லாது போய்விட்டன. ஊடகங்களும் இப்போது 'இன்ரநெற்' உதவியுடன் சர்வதேசப் போட்டிகளுக்குள் மட்டுமே தம்மை மட்டுப்படுத்திக் கொண்டன. பிராந்திய போட்டிகளுக்கான முக்கியத்துவம் இப்போது குறைவடைந்துவிட்டது.

எழுபதுகளில் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில், ஆயிரக்கணக்கானவர்கள் நுழைவுச் சீட்டுப்பெற்று உதைபந்தாட்டத்தை ஆதரித்தமை பற்றி கடந்த வருடம் யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் வலைப் பந்தாட்டப் போட்டி இறுதி நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக வந்த முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு.பஞ்சலிங்கம் நினைவு கூர்ந்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் தாயகத்திலும் தரமான விளையாட்டு வீரர்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் ஆசிய நாடுகளிடையே குறிப்பாக மத்திய கிழக்கு, தாய்லாந்து போன்ற நாடுகளிடையே தொழில்முறை உதைபந்தாட்டக்காரர்களாக செல்வார்களாயின் அவர்களின் வருமானத்தின் ஒருபகுதியைப் பெற்று எங்கள் தாயகத்தின் உதைபந்தாட்டத்தை மேம்பாடடைய வைக்க முடியும். தரமான உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்கும் பணியில் விரைவில் உருவாக உள்ள தமிழர் தாயகவிளையாட்டு அக்கடமி தன்னுடைய கவனத்தை செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அ.அன்ரன் அன்பழகன்




ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (AFC) 15 வயதுப்பிரிவினருக்கிடையேயான போட்டியில் சிறந்த கோல்காப்பாளருக்கான விருது பெற்ற சம்பத் எனும் இளைஞர் கம்பகா விக்கிரமபாகு தேசிய பாடசாலை மாணவராவார். இவருடைய அனுபவங்களைப் பொறுத்தவரை ஐந்து வயது தொடக்கமே இவருக்கு உதைபந்தாட்டத்தை ரசிக்கும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இவருடைய பாடசாலையில் காலை முதலாம் பாடவேளையில் உதைபந்தாட்டத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ள எல்லா மைதானங்களும் பயிற்சி பெறுபவர்களால் நிரம்பிவழியும். மாதமிருமுறை கம்பளை சசிரா உட்பட பல அயல்பாடசாலைகளில் "உதைபந்தாட்ட கார்ணிவெல்" நடைபெறும். பிரபல கழகங்கள் பந்து, ஜேசி என்பவற்றை தருவார்கள் இதன்மூலம் எமது பிரதேசத்தின் உதைபந்தாட்டத்தரம் உயர்ந்துள்ளது. பத்தாம் வகுப்பில் படிக்கும் இவரின் சாதனையோடு கல்வியிலும் அதிக கவனத்தை ஏற்படுத்தி கற்பிக்கும் ஆசிரியர்கள் தனக்குக் கிடைத்திருப்பதாக சம்பத் தெரிவிக்கிறார்.




# வெற்றி அத்தப்பத்துக்கு அல்ல!

காலி டெஸ்ட் போட்டியை சமன் செய்த தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி ஒரு அனுபவமான பலமான அணி என்பதை நிரூபித்துள்ளது.




சிறிலங்கா அணியால் வெற்றிக்காக நிர்ணயிக்கப்பட்ட 325 ஓட்ட எண்ணிக்கையை எதிர்கொண்ட தென்னாபிரிக்கா வெற்றி பெறுவதற்கான முயற்சியை கைவிட்டு போட்டியை சமன் செய்வதில் குறியாக இருந்தமை அவ்வணியின் அனுபவத்தின் ரகசியத்தை உணரவைத்தது.

காலி மைதானத்தில் இவ் வெற்றி இலக்கு அடையப்படமுடியாதது என்பதை முன்னரே உணர்ந்த அணித்தலைவர் ஸ்சிமித் வெற்றிபெறும் முயற்சியை கைவிட்டு சமநிலைக்கு அணியை நகர்த்திச்சென்றவிதம் அற்புதமானது. அதற்கு பலனும் கிடைத்தது.

ஒருவேளை இவ் ஓட்ட எண்ணிக்கை அவுஸ்திரேலிய அணிக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அவர்கள் வெற்றிக்காகவே போராடியிருப்பார்கள், வெற்றியும் பெற்றிருப்பார்கள் அது அவர்களின் பாணி.

ஆனாலும், தென்னாபிரிக்க வீரர்கள் தரத்தில் குறைந்தவர்கள் அல்லர்.

காலி ஆடுகளத்தின் தன்மை சுழற்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக மாறியதே இம் முடிவை தென்னாபிரிக்கா எடுத்தது, என்ற முடிவுக்கு வருவதே பொருத்தமானது.

ஏனெனில், தென்னாபிரிக்க சுழற்பந்துவீச்சாளர் நிக்கிபோயே இரண்டாவது இனிங்சில் 05 விக்கெட்டுக்களை கைப்பற்றியமை உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனை கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கு வெற்றிவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து விடும் என்ற நிலையை தென்னாபிரிக்கர் மத்தியில் ஏற்படுத்திவிட்டது.

இதுவே தென்னாபிரிக்காவை விரும்பியோ விரும்பாமலோ தடுப்பாட்டத்துக்கு நிர்ப்பந்தித்தது. இதனால் காலி மைதானத்தில் நான்கு தடவைகள் வெற்றி பெற்ற சிறிலங்கா அணியின், ஐந்தாவது வெற்றிக்கனவு பொய்யாகிப் போனது.



முரளிதரனின் பந்துவீச்சு பலத்துடன் சவால் மிகு வெற்றி இலக்கை தென்னாபிரிக்காவுக்கு நிர்ணயித்தார் சிறிலங்கா அணித்தலைவர் அத்தப்பத்து. துணிச்சல் மிக்க தலைவர் என்பதை நிருபித்தபோதும் வெற்றிக்கான இலக்கை 250 ஓட்டங்கள் அளவில் நிர்ணயித்திருந்தால் தென்னாபிரிக்க அணியை அடித்தாடத்தூண்டி விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றிவாய்ப்பை பிரகாசமாக்கியிருக்கலாம் என்பது ஒருசில கிரிக்கெட் ஆய்வாளர்களின் கருத்து.

எது எவ்வாறு இருப்பினும் தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்சிமித்தின் சாதுரியமான முடிவு அவ் அணியை எளிதில் எந்த அணியும் வெற்றி கொண்டு விட முடியாது என்பதையும் தனது தலைமைத்துவத்தின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

கண்ணன்



பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

எங்கள் வளங்களில் சிறப்பு மிக்கது உப்பு வளம் ஆகும். உப்பு என்றதும் ஆனையிறவு என்பது ஞாபகம் வருவது தவிர்க்கவியலாது.

ஆனையிறவு உப்பளம் இயற்கையாக அமைந்த உப்பளங்களில் முதன்மையானது. ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் பருத்தித்துறை துறைமுகத்தின் ஊடாக ஏற்றுமதி செய்யப்படும் ஒரு பொருளாக உப்பு இருந்துள்ளது.

1945 ஆம் ஆண்டு வரை 40000 மெ.தொன் உப்பு மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டிருக்க 1950இல் 300000 மெ.தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

1965 இல் ஆனையிறவுடன் குறிஞ்சாத்தீவு உப்பளமும் அபிவிருத்தி செய்யப்பட வருடாவருடம் 62000-65000 மெ.தொன் உப்பு உற்பத்திசெய்யப்பட்டது. 1986 ஆம் ஆண்டு வரை இந்த நிலை நீடித்தது.

1987 இல் இந்தியப்படையினால் உற்பத்தித் தடங்கல் ஏற்பட்டு அதன் நீட்சியாக இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பு செயற்பாடு காரணமாக உற்பத்தி முழுமையாக முடங்கிப் போயிற்று.

2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆனையிறவு கூட்டுப் படைத்தளம் விடுதலைப்புலிகளின் தீரமிகு போராட்டத்தால் துடைத்து அழிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்துக்கும் விமோசனம் கிடைத்தது.

அதன் நீட்சியாக 2000 ஆம் ஆண்டு ஆனிமாதம் உப்பு உற்பத்தி நிறுவனம் தனது உப்பு உற்பத்தியை ஆரம்பித்தது.

நிறுவனத்தின் மற்றொரு வளர்ச்சிக் கட்டத்திற்கான திறவு கோளாக அண்மையில் 27.07.2004 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வு அமைந்தது.

ச்ர்வதேச அமைப்பின் யுனிசெப் உதவியுடன் ரெக் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நவீன இருகருவிகள் பொருத்தப்பட்ட உப்பு பொதி செய்யும் தொழிற்சாலை திறந்துவைக்கப்பட்டது.

மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான அயடீனை உப்பினூடாக வழங்கும் ஒரு முயற்சியாக இந்தச் செயற்பாடு அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(சி-10044)

# கால்நடை வளர்ப்போர் விழிப்பாக இருக்க வேண்டும்!

கால்நடைகளை பாதிப்புக்குள்ளாக்கும் கால்வாய் நோய் தற்போது வன்னிப் பகுதியில் தீவிரமாகப் பரவி வருகின்றது. அண்மைக் காலத்தில் மல்லாவியில் தொடங்கிய கால்வாய் நோய் அசுர வேகத்தில், கிளிநொச்சி, விசுவமடு, மாங்குளம், ஒட்டுசுட்டான், முள்ளியவளை என நீண்டு செல்கிறது.

கால் நடைகளை இடத்துக்கு இடம் மாற்றி மேச்சலுக்காக கொண்டு செல்கின்றனர். சுத்தமற்ற தரவைகளில் மேயவிடும் போது வைரசுக் கிருமிகளால் இந் நோய் ஏற்படுகின்றது. எனவே சுத்தமற்ற புல்தரை, நீர், காற்று இவற்றால் தீவிரமாக பரவுகின்றது. இதனால் கால்நடை வளர்ப்பவர்கள் விழிப்பாக இருத்தல் அவசியமாகும்.

கால்வாய் நோய் பற்றிய அறிவுறுத்தல்களை த.பொ.மே நிறுவனமும் கால்நடை வைத்தியர்களும் அறிவுறுத்தி வருகின்றனர். வைரசுக் கிருமிகளால் ஏற்படுகின்ற இந்நோய் காற்றினால் பரவும் வீதம் அதிகமாக இருப்பதால் இதனைக் கட்டுப்படுத்துதல் மிகவும் அவசியமானதாகும்.

**நோயின் அறிகுறிகள்:-**

01. இரை மீட்காது
02. நாக்கிலும் வாயைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொப்புளங்கள் தோன்றும். பின்னர் கொப்புளங்கள் உடைந்து புண்ணாக மாறும்.
03. தொடர்ந்து வாயிலிருந்து வீணி வடியும்.
04. வாயினுள் கொப்புளங்கள் உடைந்து புண்ணாக இருப்பதால் துர்நாற்றம் ஏற்படும்.
05. கொப்புளங்கள் காயங்கள் என்பன குரை இடைவெளியுக்குள் காணப்படும். இதனால் நடக்கக் கஷ்டப்படும், மாட்டின் குளம்புகள் வெடித்து புண்ணாகக் காணப்படும். சில வேளைகளில் மாட்டின் கால் குளம்புகள் களன்று விடும், இதனால் நடக்க கஷ்டப்படும் நொண்டும்.
06. காய்ச்சல் காணப்படும்.
07. சில மாடுகளின் மடியிலும் கொப்புளங்கள் காணப்படும்.

**சிகிச்சை முறை:-**

நோய் ஏற்பட்ட மாடுகளின் வாய்ப்பகுதிக்கு உப்பு நீர் கொண்டு சுத்தப்படுத்திய பின் சீனாக்காரம் அல்லது பிரண்டைத் தண்டும் உப்பும் சேர்த்த கலவை கொண்டு தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.

காலில் ஏற்பட்டிருக்கும் கால் நோய்க்கு உப்புநீரால் சுத்தப் படுத்திய பின்பு செப்புச் சல்பேற்று கரைசல் கொண்டு கழுவ வேண்டும். காயங்களில் புழுத் தொற்றல் ஏற்பட்டால் புழுப்பவுடர் போட வேண்டும்.

**கட்டுப்படுத்தும் முறை:-**

இந்நோய் கால் நடைகளில் மேற் கூறிய அறிகுறிகளுடன் காணப்படின் மாடுகளை தனிமைப் படுத்த வேண்டும். மேச்சலுக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ கால்நடைகளை இடத்துக்கிடம் மாற்றுவதைத் தடுத்தல் வேண்டும்.

இந் நோய் ஏற்பட்ட மாடுகளையோ இந்நோயின் அறிகுறிகள் காணப்படும் பட்சத்திலோ கால் நடைகளை இறைச்சிக்குப் பயன் படுத்துவதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

இந்நோய் ஏற்பட்ட மாடுகளில் இருந்து பெறப்படும் பாலைக் குடிப்பதைத் தவிர்தல் வேண்டும்.

இவற்றுக்கு மேலாக கால்வாய் நோய் தொற்று ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுமாயின் அருகில் உள்ள கால் நடை வைத்தியரை அல்லது கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரைத் தொடர்பு கொண்டு தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும். மேலதிக ஆலோசனைகளையும் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

கால் நடைகளை வளர்ப்போர் உங்கள் கால்நடைகளுக்கு இந்நோய் வந்திருப்பின் அந்நோய்க்குரிய கால்நடைகளைத் தனிமைப் படுத்தி ஏனைய கால்நடைகளுக்கும் பரவாமல் இருக்க பாதுகாத்துக் கொள்ளுங்கள் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் அந்தந்தப்பகுதி கால் நடை அபிவிருத்தி போதனாசிரியரும் கால்நடை வைத்தியர்களும் கேட்டுக் கொள்கின்றனர்.

சிவகமலா

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

லெப். தனுகரனின் போராட்ட செயற்பாடுகளில் பெரும் பாலானவை எழுதவோ, சொல்லவோ, வ்ர்ணிக்கவோ முடியாதவை. தனுகரன் போராட்டத் தில் இணைந்த நாள் முதலாய், மட்டக் களப்பு மாவட்டத்தில் புலனாய்வு நடவடிக்கைகளிலேயே செயற் பட்டான். அதன்போதுதான் தனி சண்டைகள் பலவற்றை செய்து சாதனைபடைத்தான்.

சில வேலைகளில் அவனது செயற்பாடுகள் அழிந்துவிடாத காட்சிகளாகி நிற்கின்றன. காட்டு வாழ்க்கையின் துயரம் நிறைந்த கொடூரமான நாட்களில், பசி, பட்டினி, தாகம், சோர்வு எம்மை வாட்டியபோது, எவராலும் சோராது இருக்க முடியாது. என்ற காலமாகிவிட்டது.

01, 02, 03 நாட்கள் என தொடரும் பட்டினி சில காலங்களில் 10 நாட்களையும் தாண்டியது, வெறும் கதையல்ல எல்லோரும் அனுபவித்த உண்மையான சுமை, அப்படி கனதியான சோதனைகளின் போது காட்டில் கிடைக்கின்ற இலை, குழைகளை அவித்து சாப்பிட பழக்கியவர்களில் தனுகரனும் முதன்மையானவன்.

சாப்பாடு இல்லை என்றால் ஏன் பசியோடு இருக்க வேண்டும் மிருகங்களும், பறவைகளும் ஏதோ ஒன்றை உண்டு தானே உயிர்வாழுகின்றன. எனவே ஏன் நாம் உயிர்வாழ முடியாது என்று தத்துவம் சொல்லி, டிக்சனுடன் சேர்ந்து முதலை அடித்து அதை உரிக்கத்தெரியாமல் கோடாரியால் கொத்தி சுட்டுச் சாப்பிடச் செய்தவனும், முதலை இறைச்சி சாப்பிட பழக்கியவனும் தனுகரன்தான்.


ஆற்றங்கரையில் எப்படியாவது பல தவளைகளைப்பிடித்து அதை தேக்கம் இலை (அல்லது வேறு இலை) யில் சுத்தி அடுப்பில் வேகவைத்துச் சாப்பிட்டது எதுவுமே போராட்டத்தில் மறக்கப்பட முடியாத ஒன்றாகும்.

இப்படியாக ஒருநாள் மொறவெவ என்ற சிங்களக் குடியேற்ற கிராமத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ முகாம் ஒன்றை தாக்கச் சென்று வந்த போது. சண்டைக்கென சேமிப்பில் வைத்திருந்த கடலையை அவித்து சாப்பிட்டுவிட்டே சென்றிருந்தோம் நீண்ட நாட்களாக ஒருவராலும் சரியாகச் சாப்பிடாததனால் பெரும் பாலும் எல்லோரும் கொட்டிவிட்டே சென்றிருந்தோம். சண்டை முடிந்து வந்த போது, சாப்பாடு இல்லாமல் பசியினால் வாடி எல்லோரும் களைப்புற்றிருக்க, தனுகரனை மட்டும் காணவில்லை. "எங்கேயடா தனுகரன் என்று கேட்டது மாத்திரம்தான்" எழுந்து தேடிச்செல்லும் அளவிற்கு எவரிடமும் சக்தி இருக்கவில்லை. குறிப்பிட்ட நேரத்திற்குப்பின் தனுகரனும், கரிகரனும் ஒரு ஈரச்சறத்தில் ஏதோ கொண்டு வந்தார்கள், என்னவென்று எல்லோரும ஆவலுடன் எதிர்பார்க்க, தங்கக்கட்டி என பகிடியாகச்சொல்லி விட்டு, ஒருவரும் இருந்த இடத்த விட்டு எழும்பவேண்டாம். நான் பகிர்ந்து தருகிறேன் என்று கடலையை கொஞ்சம் கொஞ்சமாக எல்லோருக்கும் பகிர்ந்து தந்தான். ஏதடா? என்று கேட்க முந்தநாள் சண்டைக்குப் போகேக்க, வெள்ளைக்கார பிள்ளைகள்போல் கழிவு கிடங்கில கொட்டினயளே அந்தக்கடலைதான் கழுவிக் கொண்டுவந்தேன் என்றான். அதுவே எமக்கு அருமருந்தாகியது.

இப்படியாகவே இடையறாத தனது பொதுச்செயலை, சண்டையை போராளிகளிடத்தில் அன்பை, பரிவைக்காட்டிய தனுகரன் காட்டுவாழ்க்கையின் கடுமையிலேயே வாழ்ந்துவந்தபோது, 93ம் ஆண்டு நீண்டநாட்களாக உணவில்லாமல் இருந்த போராளிகளிற்கு உணவு எடுக்கச்செல்ல பெரியதொரு அணி தயார்படுத்தப் பட்டபோது. சின்ன வனான தனுகரனும் தன்னையும் அந்த அணியில் இணைக்கச்சொல்லி அடம் பிடித்து செல்கிறான். எத்தினையோ சுமைகளையும் இடர் வரவுகளையும் தாண்டி பலமைல்தூரம் பற்றையும், காடும், முள்ளும் நிறைந்த இடங்களால் சென்று உணவு எடுத்து வந்தபோது எதிரியின் பதுங்கித் தாக்குதலில் வீரச்சாவடைகிறான். தான் வீரச்சாவடைந்தபோது, மார்பினில் , வயிற்றினில் கை, கால், எங்கும் காயப்பட்டபோது, சக போராளிகளிற்காய் சுமந்துவந்த தனது அரிசி அடப்பையை (பொதி) கைவிடாமல் அதன் மேலேயே கட்டியணைத்தவாறு கிடந்து அதனை காப்பாற்றினான். அவனது உச்சதியாகத்தின் பாதுகாப்பில் காப்பாற்றப்பட்ட இரத்தம் தோய்ந்த அந்த அரிசி தனுகரனின் உடலோடு மீட்டெடுக்கப்பட்டு அவனது வித்துடல் மண்ணில் வித்தானபிறகு சக போராளிகளால் கழுவி எடுக்கப் பட்டு கஞ்சிகாச்சி பருகி பலநாள் பசியை தீர்த்ததன் பின்னே தொடர் இயக்க நடவடிக்கைகளை செய்தனர். ஏனைய போராளிகள் கொண்டுவந்த அரிசி, உணவுப் பொருள்களை சிங்கள காடையர்கள் கொட்டி, வீசி, பலவற்றை எரித்து நாசமாக்கிவிட்டே சென்றனர். அந்தச்சமயத்தில் தனுகரனின் இரத்தம் தோய்ந்த அரிசியே பல போராளிகளிற்கு உணவாகி, பலரின் பட்டினிச்சாவை தடுத்தது. தேசவிடுதலைக்காய் தன்னை அணு அணுவாக உருக்கி மண்ணிற்காய் மரணித்த அந்த மானமாவீரனின் குருதியும் அருமருந்தாகி மண்ணின் மைந்தர்களை காத்தது.


வன்னி நெட் கபே
Vanni Net Cafe
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது
- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பாராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)



# சத்தம்

ஒரு தடவை 'இந்தியா டுடேயில் சிந்திக்க ஒரு நொடி' பத்திப் பகுதியில் 'தமிழின் பேரிரைச்சலைப்பற்றித் துக்கம் ததும்ப வாஸந்தி எழுதியிருந்தார்.

அவர் எழுதியதைப் போலவே இன்றைய தமிழ்ச்சமூகம் இரைச்சலை, கத்தலை அதிகம் விரும்புகிறமாதிரி, எங்கும் ஒலிபெருக்கிகளின் ஓலம் தாங்கமுடியாத அளவுக்கு பெருகி ரணப்படுத்துகிறது.

"தமிழ் கூறும் நல்லுலகம்" (?) அதைப்பற்றியுமோ அல்லது எதைப்பற்றியுமோ, எவரைப் பற்றியுமோ அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

அது கத்தித்தான் தொலைக்கிறது. அதைப்பற்றி நாமும் கத்தத் தான் வேண்டியுள்ளது.

நெஞ்சில் அறைகிறமாதிரி, காதைப்பிளக்கிற மாதிரி அதிர்கிற சத்தத்தை- காட்டுக்கத்தலை ரசிக்கிற காலம் பிறந்திருக்கிறது நமக்கு.

என்ன விதியோ, என்ன குருட்டுத் தனமோ தெரியவில்லை பலரும் இரைச்சலையும் கத்தலையும் இசையென நம்பி விடுகிறார்கள். அப்படித்தான் அதை ரசித்து வருகிறார்கள்.

போனவாரம் ஒரு திருமண நிகழ்ச்சி. முதல்நாளே கத்தல் தொடங்கிவிட்டது. அயலில் ஒருவரும் இருப்பதில்லை என்கிற மாதிரியாக 'துள்ளிசை' அதிகூடிய ஒலியாக அதிரத்தொடங்கியது. திருமணம் முடிந்து மூன்று நாட்களின் பின்வரையில்கூட அதிர்வு குறையவேயில்லை. அதிரும் ஒலியின் மத்தியில் எல்லோரும் கத்திக் கத்தியே கதைத்தார்கள். காரியங்களையும் கத்திக்கத்தியே பார்த்தார்கள்.

அவர்கள் விரும்புகிற கத்தல்களை (சிலர் சொல்லக்கூடும் பாடல்களை என்று) பேரொலியில் ஒலிக்கவிட்டிருந்தார்கள்.


உண்மையில் அது அயலவர்களுக்கு பெருந்தண்டனைதான். ஆனால் என்ன செய்ய முடியும்? அதைப்பற்றி அவர்களிடம் கதைக்கப் போனால் அவர்கள் தம்முடைய சுதந்திரத்தை நாம் கட்டுப்படுத்துவதாகக் கூறுவார்கள். தமது கொண்டாட்டத்துக்கு நாங்கள் இடைஞ்சல் தருகிறதாக சொல்வார்கள். எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. இசையை ரசிக்கவே தெரியாதவர்கள் என்று எம்மைப்பற்றி அவர்கள் நினைக்கவும் கூடும். ஏன் சிலவேளைகளில் அவர்கள் வீண்வாதங்களுக்கும் வரலாம். அது சண்டையாகவும் மாறிவிடக்கூடும். இப்படியான நிலைமையில் அவர்களிடம் இதைப்பற்றிப் பேசுவதை விடவும் 'ஏதோ நடந்து தொலையட்டும், ஒரு நாலுநாள் கரைச்சல் தானே' என்று பேசாமல் இருந்து விடுகிறோம்.

அந்த நான்கு நாட்களும் எந்தக் காரியத்தையும் அமைதியாக இருந்து பார்க்க முடியாது. வீட்டிலுள்ளவர்களுடன் சரியாக பேசவும் முடியாது. சத்தம் அப்படியிருக்கும் அந்தப் 'பேரிசை'

இது தனியே நாலுநாட்களுடன் முடிந்துவிடுகிற சங்கதியல்ல. பிறகு அயலீல் இன்னொருவீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டம் வரும். அல்லது புதுமனைப் புகுவிழா, பூப்புனித நீராட்டு விழா.இப்படி ஏதாவதொண்டு வரும்போது அதில் முதலாவதாக இடம்பெறுவது கத்தல்தான்.

இதைவிட கோவில்களில் வெள்ளிதோறும், விஷேடவைபவங்கள் தோறும் மற்றும் திருவிழாக் காலங்களில் என்றெல்லாம் ஒலிக்கிற சத்தமும் சாதாரணமானதல்ல.

படிக்கிற பிள்ளைக்ள் அருகில் இருந்தாலென்ன? பரீட்சைக்காலமென்றாலென்ன? குழந்தைகள் பக்கத்து வீட்டில் தூங்கினால் என்ன? நோயாளிகள் உபாதையில் அழுந்தினாலென்ன, முதியோர் அமைதிவேண்டியிருந்தாலென்ன அதைப்பற்றியெல்லாம் ஏன் யாரும் கவலைப்பட வேண்டும்.



"போடுகிறோம்"- பாட்டு விரும்பினால் கேளுங்கள் இல்லையென்றால் சில நாட்களுக்கு வேறிடம் பார்த்துப் போய்விட்டு வாருங்கள் என்பதாக இருக்கும் அவர்களுடைய செய்கைகள்.

நாகரிகம் தெரியாமலிருக்கிறீர்களே: இசையை ரசிக்கத் தெரியாத படுபாவிகளே என்கிறமாதிரி இந்த நிகழ்வுகளில் ஒலியமைப்புச் செய்கிறவர்கள் கேட்கிறார்கள்.

'இந்த ஒலிபெருக்கியை ஏன்தான் கண்டுபிடித்தார்களோ' என்று கூட எண்ணத் தோன்றுகிறது. சிலவேளைகளில்.

அட, அதைவிடப்படுமோசம், இன்று வருகிற பல துள்ளிசைப் பாடல்கள். அதுவும் சினிமாவில் வருகிற துள்ளிசைப்பாடல்கள்.

அந்தப்பாடல்களின் காட்சியும் அப்படித்தான்; கானமும் அப்படித்தான். மகாமோசம்- படுகேவலம்.

ஒலிபெருக்கியைக் கண்டுபிடித்தவர்கள் அதைக் கைவிட்டு பல காலமாகிவிட்டது. அப்படிப் பாவிக்கும்போது கூட அளவான ஒலியில், ரசிக்கக் கூடிய அளவுக்கு 'சவுண்டு' வைத்துத்தான் ஒலிபரப்புகிறார்கள்.

நாங்களோ 'பரம்பரையாகக் காதே கேட்காத பிறவிகள்' என்பதுபோல அந்தச் சாதனத்தின் முழுவிசையையும் பயன்படுத்தியே கேட்கிறோம்.

இந்தக் கேவலத்தை எப்படிப் பாராட்டாமல் இருக்கமுடியும்? சொல்லுங்கள். ஒரு நிகழ்வென்றால் பாட்டு என்பது அதில் கட்டாயம் இருக்கவேண்டும் என்று எல்லோரும் கருதுகிறார்கள்- அதிலும் துள்ளலுக்கான இசை. அதையும் சத்தமாக ஒலித்தால்தான்- அயலில் பத்துவீட்டுக்கு கேட்டால்தான் தங்களுக்குப் பெருமை; நிகழ்வும் நடந்தமாதிரி இருக்கும் என்று நினைக்கிறார்கள். இது தப்பு; பெருந்தவறு.

சத்தமாகப் பாடிக் கொண்டிருக்கும் போது அந்த வீட்டில் இரைச்சல் அதிகமாகி விடும். எந்த விடயத்தையும் சத்தமிட்டே கதைக்க வேண்டும், ஆக, கத்திக்கத்தி நாக்கும் தொண்டையும் வரளுமே தவிர பாட்டு- கத்தல்- நிக்கவே நிக்காது. யாரும் அமைதியாக இருந்து அப்பாடல்களைக் கேட்பதாகவும் இல்லை.

இப்படிச் சத்தமாகப் பாடல் களை ஒலிக்கவிடுவது இன்று "பரவலாகி" விட்டது.

சில பொது நிகழ்வுகளிலும் இதே நிலைமைதான்.

நண்பர் ஒருவரின் புத்தக வெளியீட்டு விழாவுக்கு ஒலியமைப்புக்காக அதற்குரிய சாதனத்தோடு ஒருவரை அழைத்திருந்தோம். நாங்கள் 'மென் இசைக்கேற்ற மாதிரி' ஒரு இசைப்பேழையை அவரிடம் கொடுத்து 'அதை மிகமெதுவாக, அரங்கில் ஒலிக்க விடுங்கள். நிகழ்வு தொடங்கு முன்பும், நிகழ்ச்சி முடிந்தபின்பும் அது ஒலிக்கட்டும்' என்றோம்.

நாங்கள் சொன்னமாதிரி எதுவும் நடக்கவில்லை. அந்த இசைப்பேழையை அவர் போட்டுக்கேட்டிருக்கிறார். அதில் தனியே இசைக்கருவிகளின் ஒலிமட்டும்தான் ஒலித்தது. அவர் விரும்பிய பாடல்கள் எதுவும் அதில் இல்லை. அவருக்கு அந்த இசை புலப்படவும் இல்லை. அதை அவர் பெட்டிக்குள் போட்டு விட்டு தன்னிடமிருந்த தேவாவின் "கானா பாட்டுக்களைத் திறந்துவிட்டார்.

அப்பாடா, இசைஅருவி பேராறாகப் பிரகாசித்தது(?)

இப்படித்தான் பல இடத்திலும் ஒலியமைப்புகள் செய்யப்படுகின்றன. கிளுகிளுப் பூட்டும் பாடல்கள் அதற்குத் தோதான இசை, இரண்டுக்கும் தோதான சத்தம்.

ஐயோ; என்னதான் செய்வது இவர்களை? அல்லது எங்களை?

தாங்கள் தானாக வந்து, இசை மழையை இலவசமாகப் பொழிவது போல ஒலி பெருக்குகிறார்கள். இந்தத் தொண்டர்கள் (?) நாங்கள் பணம் கொடுக்க வேணும். அவர்கள் தமது விருப்பப்படி பாடல்களைப் போடுவார்கள், சத்தமிடுவார்கள்.

இவர்கள் அறியாமையால்தான் இப்படிச் செய்கிறார்களா? அல்லது வேண்டுமென்றே இப்படி நடந்து கொள்கிறார்களா?

புலம்பெயர்ந்த நாடுகளில் அதிகமும் அந்த சுதேசிகளால் நம்மவர்கள் வெறுக்கப் படுவது இப்படி கத்தலாக இசையைப் போடுவதால்தான் என்று பல நண்பர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். சில இதழ்களிலும் இந்தப் பிரச்சினையைப்பற்றி எழுதியதையும் படித்திருக்கிறேன்.

வேலையால் வந்தவுடன் அறையில் நுழையும்போதே ஒலிக்கவிடுவது- விசையில் அழுத்துவது பாட்டுக்காகத்தானாம்.

இருக்கும் வெறுமையைப் போக்க அப்படியொரு அவசியம் அவர்களுக்கு அங்கேயுண்டு என்று சமாதானம் சொல்லலாம். ஆனாலும் பிறருடைய அமைதியைப்பற்றிய சிந்தனை அக்கறையில்லாமல் இருக்க முடியுமா?

வீட்டில் வானொலியைக் கேட்கும் போது கூட பலமான சத்தத்திலேயே பலரும் வைக்கிறார்கள்.

சில வீடுகளிலிருந்து அயல்வீடுகளுக்கான இலவச ஒலிபரப்புச் செய்வோரும் இருக்கிறார்கள். இதெல்லாம் மற்றவர்களை மதிக்காத தன்மை தான். மற்றோரை ஒருவர் மதிக்கவில்லை என்றால் அவரையும் பிறர் மதியாரே.

என்னிடம் நண்பர் கேட்பார். "மந்திரம் என்பது என்ன?" பிறகு, அவரே சொன்னார். 'சக்திமிக்க சொல் மந்திரமென்றால் அது ரகசியமாகவும் உச்சரிக்கப்பட வேண்டும்' என்று ஆனால் இன்று மந்திரம்மட்டுமல்ல பண்ணிசை தொடக்கம் எல்லாமே முழக்கங்களாகிவிட்டன. சிலருக்கு ஒலியில் விருப்பம்? சிலருக்கு' ஒலிபெருக்கி விருப்பம்.

ஒலிவாங்கி கிடைத்தாலும் விட மாட்டார்கள். ஒலிபெருக்கி வாய்த்தாலும் விடமாட்டார்கள். இடையில் வசமாக மாட்டிக் கொண்டது நாங்கள் தான்.

பஸ்ஸில் பயணம் போகும் போதும் துள்ளற்பாட்டுக்கள் உச்சஒலியில்தான் விடப்படுகின்றன. இதனால் பல சமயம் தரிப்பிடங்களைக் கடந்தே பேருந்து நிற்கவேண்டியுள்ளது. பயணிகளின் அறிவிப்பொலி ஓட்டுநருக்குக் கேட்கமுடியாமல் பாட்டொலி இருக்கிறது. அதிலும் கீழ்த்தரமான பாடல்களை தெரிவுசெய்து பல பேருந்துக்காரர்கள் போடுகிறார்கள்.

இசையென்பது என்ன? அது அழகு. இசை அமைதி நிரம்பியது. சுவையானது. காதிலூறும் இன்பச்சுவை? இனிய சுவை. இசை ஒரு ஒலிக்குழந்தை. இசை மென் நடை. இசை சிறுநகை. இசையைக் கத்தலாக்குவது எப்படி ரசனையாகும்?

உலகில், வேறிடங்களில் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இசையைக் கேட்கும் சாதனங்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டன. ஏன் நமக்கும் கூட இவற்றில் சில வந்துள்ளனவே.

இது தவிர, ஒருவாகனத்தில் ஒருவர் தன் விருப்பத்துக்கு போடும் பாடலையோ இசையையோ பிறர் கேட்க வேண்டும் என்றில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியாக விரும்பியதைக் கேட்கக் கூடிய மாதிரியான அமைப்பில் சாதனங்களைப் பொருத்தியிருக்கிறார்கள்.

எதையும் கேட்க விருப்பமில்லாதவர் பேசாமலிருக்கலாம் - அமைதியாக அந்தளவுக்கு அங்கே வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். விரும்பியவர்கள் தமக்கு தமக்குத் தேவையானவற்றை தனித்தனியே கேட்கலாம்.

இங்கே, நாங்களோ குப்பைத்தனமாக குழம்பிக்கிடக்கிறோம். கரைச்சலப் பட்டு வெதும்பிக் கொண்டிருக்கிறோம்.

பிறர் படும் துன்பம் பற்றி நமக்கென்ன என்ற மனோபாவம்தான் இதற்கான அடிப்படை. ஒருவகையில் இதை பிறர்மீது பிரயோகிக்கும் புதிய வன்முறை விளங்கா அதிகாரம் எனலாமா? இன்றும் கத்தத்தான் வேணுமா? அப்படியென்றால் எவ்வளவு காலத்துக்கு?

**வெளிவாசல்பாலன்**

---

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பாடத்திட்டத்தில் தொழில்நுட்பப் பாடங்களாக உள்ள இன்றைய தொழில்நுட்ப தேவைகளுக்கு ஏற்ப நிர்மாண தொழில்நுட்பம், இயந்திரவியல் தொழில்நுட்பம் மின்னியலும் இலத்திரனியலும் மீன்பிடியியல் தொடர்பான பாடங்கள் கூடியபயனுள்ள தேவையான பாடங்களாக உள்ளன.

இப்பாடங்களுக்கான ஆசிரியநியமனங்கள் எமது பகுதிகளுக்கு நியமிக்கப்படாதுள்ளமையால் எமது பகுதியில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுவதில்லை. எமது பகுதியில் தொழில்நுட்பப் பாடங்கள் என்ற வகையில் வர்த்தகப் பாடம் தனியே அநேகமானவர்கள் கற்று வருகின்றனர். வர்த்தகப் பாடம் வாழ்வியலுக்கு ஏற்ற பாடமாக இல்லாது உள்ள நிலையில் கூட ஏனைய தேவையான பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கபபடாமையினால் வர்த்தகப்பாடத்தை வேறுவழியின்றி கற்றுவருகின்றனர்.


கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மேற்படி தொழில்நுட்பங்களுக்கு தமிழ்மொழி மூலம் தோற்றுகின்ற மாணவர்களின் விகிதம் மிகக் குறைவாக இருந்து வந்துள்ளது. அதாவது இரண்டு வீதம் மூன்று வீதம் என்ற அடிப்படையிலே மேற்படி பாடங்களுக்கு எமது மாணவர்கள் தோற்றி வந்துள்ளனர். அதே நேரம் சிங்கள மொழி மூலம் 95 வீதமான மாணவர்கள் தோற்றிவந்துள்ளதனை புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது. இந்த நாட்டிலே 26 வீதமான தமிழ் மொழி பேசுபவர்கள் இருக்கின்ற போதிலும் 4 வீதத்திற்குட்பட்டவர்கள் தான் இவ்வாறான பாடங்களை கற்று வருகின்றனர். கல்வியில் எல்லா வசதி வாய்ப்புக்களைய்யும் அனுபவிப்பவர்கள் சிங்களவர்களாகவே உள்ளனர்.

இது அரசின் ஒரு திட்டமிட்ட செயலாகவே அமைகின்றது. தொழில்நுட்பவியல் பாடத்தில் மீன்பிடியியல் பாடங்களாக இரு பாடங்கள் உள்ளன.

01. கடல்நீர் உயிர்வாழ் தொழில்நுட்பம். 02. உள்நாட்டு உயிர் வாழ் தொழில்நுட்பம்.

என இரு பகுதிகள் உள்ளன. இவ்விருபாடங்கள் மிக நீண்ட காலமாக 30 ஆண்டுகளாக பாடத்திட்டத்தில் இருந்து வருகின்றன. கடந்த 1997 ஆம் ஆண்டு இப்பாடங்கள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகக் கற்பிக்கப்படும் நிலை வந்தாலும், தேசிய கல்வி நிறுவாகம் இந்தப் பாடங்களுக்கான கைநூல்களை சிங்களத்தில் அச்சிட்டனவே தவிர தமிழில் அச்சிடவில்லை. இதனால் தமிழ் பகுதிகளில் இப்பாடங்கள் கற்பிக்கப்படாத நிலை காணப்பட்டது. மூன்றில் இரண்டு பகுதி கடல் வளம் எமது தாயகத்தில் இருப்பதாலும் மிகப் பெரிய வளமாக எமது பகுதியில் மீன் வளம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இவற்றுக்கு மாறாக இப்பாடத்தினை இருட்டடிப்புச் செய்து வந்தனர். சிங்களத்தில் அச்சிடப்பட்ட நூல்களில் நாங்கள் தமிழ் மொழியிலே ஆக்கி இப்பாடங்களை கற்பிப்பதற்கான ஆளணியினரையும் திரட்டி அவர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கி கடந்த ஆண்டிலே பெரும் தொகையான மாணவர்கள் இப்பாடத்திற்கு தோற்றி ஏனைய தொழில்நுட்பங்களைவிட கூடுதலான தேர்ச்சியினை தமிழ் மாணவர்கள் பெற்றுள்ளனர் இந்த நிலையில் தேசியக் கல்வி ஆணைக்குழு செய்து கொண்ட புதிய கல்வித்திட்டம் தொடர்பான பரிந்துரையில் தொழில்நுட்பப்பாடங்களில் இருந்து மீன்பிடியியல் பாடத்தினை நீக்கும்படி பரிந்துரை செய்துள்ளது. இதற்கு இப்பாடங்களில் மாணவர்கள் குறைவாகவே தோற்றுகின்றனர் என காரணம் காட்டியுள்ளனர். இந்த நடைமுறையில் உள்ள இப்பாடம் 1997 முதல் இன்றுவரையில் தோற்றிய வீதம் கூடிக்கொண்டே வருகிறது. இப்பாடத்தினை நிறுத்துவதற்கு அரசு எடுத்த முடிவானது எமது பகுதியில் இருந்து கூடுதலான மாணவர்கள் தோற்றுவதனால் அதனை தடுக்கும் நோக்கில் அரசு இவ்வாறான ஒரு திட்டத்தினை நடைமுறைப்படுத்த முனைகிறது போலத் தோன்றுகின்றது.

வாழ்வியலுக்கு தேவையான தொழில்நுட்ப பாடங்களை புதிதாக அறிமுகப்படுத்திய போதும் அத்தொழில்நுட்பப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டது. தமிழ் பகுதியில் மாணவர்கள் கற்க முடியாத நிலை, இவற்றைவிட பள்ளிக் கல்விக்கு வெளியே தொழில் நுட்பக் கல்லூரிகளை சிங்களப் பகுதிகளில் மிகமிகக்கூடுதலாகவும் தமிழர் தாயகப்பகுதிகளில் மிககுறைந்த அளவில் நிறுவியுள்ளது. சிங்கள அரசு இருக்கின்ற குறைவான கல்லூரிகளும் வளங்குன்றிய நிலையில் செயற்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் யாவும் தமிழர்கள் கல்வியை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.




எல்லாருக்கும் வணக்கம்! எப்பிடி சுகமா இருக்கிறீயளோ? நீங்கள் நினைப்பியள் போன மனுசன் யாழ்ப்பாணத்திலேயே செற்றில் ஆகிவிட்டெண்டு நான் கன காலத்திற்குப் பிறகு வந்தனான். அப்ப எல்லா இடமும் போய் கண்ணுக்குள்ளை வைக்கவேணும் அல்லோ! மற்றது பாருங்கோ! பேச்சுவார்த்தை நடக்குதோ இல்லையோ, உந்த இனந்தெரியாத நபர்களின்ரை புண்ணியத்திலை தமிழரின்ரை வெட்கக் கேடுகள் கனக்க வெடி விழுந்து வீழுது சந்திரிகாவும் பாவம் பாருங்கோ! 'அல்ஸ்கைமர்' எண்டிற வயசு போய் வாக்கு மாறும் வருத்தத்தால் உந்த இளவயசிலேயே பாதிக்கப்பட்டு கஷ்ரப்படுவது மனிசி! இடைக்காலத் தன்னாட்சி சபையை அடிப்படையா வைச்சுப் பேசலாமெண்டு, தான் ஒரு நாளும் சொல்லேல்லையாம்! அப்ப இரவிரவா 22 பேரோடையும் 12 மணி மட்டும் கதைச்சது சும்மா பம்பலுக்குப் போல. எங்கடை ஆக்களிலை சிலர் அந்த பம்பலை சீரியசா எடுத்திட்டினம். அவையளும் சும்மா உந்த நாடா வெட்டிற திறப்புவிழாக்களை விட்டுவிட்டு, கொஞ்சம் கொழும்பிலேயும் வெளி நாடுகளிலையும் சர்வதேசக்காரர்களைச் சந்திச்சு (lobby) 'லொபி' அலுவல்களிலை இறங்கோணும். ஒரு வயசுக்கு மூத்தனான் எண்டு சொல்லிறன், 22 பேரும் கொஞ்சம் இப்படியான வேலையளிலை இனியெண்டாலும், என்ர வயசுக்கு மரியாதை கொடுத்துக் கேட்டு நடக்க வேணும்.

அரசியல் கதைக்க வெளிக்கிட்டதாலை சொல்ல வந்த புதினத்தை விட்டுவிட்டன் பாருங்கோ! நான் இஞ்சாலப் பக்கம் வரவேண்டி இருந்தது. முன்னமே உங்களுக்குச் சொன்ன மாதிரி ஊர்க்கோவில் நிர்வாகம் என்னை ஆண்டுவிழாவுக்குக் கூப்பிட்டதாலை தான்! போன வெள்ளிக்கிழமை பின்நேரம் விளையாட்டுப் போட்டியளும், இரவு நிகழ்ச்சியளுமெண்டு நல்ல மாதிரி நடந்து முடிஞ்சிது எல்லா வயசுக்காரரும் நிண்டிஞ்சினம். நிரம்பி வழியிற அளவு சனம். கோவில் நிர்வாகத்தின்ரை ஆதரவில உருவாக்கப்பட்ட சாரணர் குழு தேவையான எல்லாத்தையும் ஒழுங்கு பண்ணி சமாளிச்சுது. பெரிய விசயம் என்னவெண்டால், போட்டியளிலை எனக்கும் பரிசு கிடைச்சதுதான் "உந்த வயசிலை உவர் என்ன செய்து கிழிச்சிருப்பர்?" எண்டு நீங்கள் நக்கலா யோசிக்கிறது எனக்கு விளங்குது. தயிர் முட்டி அடிக்கிற போட்டி ஆரம்பத்திலை விருப்பமான ஆக்கள் வயசு வேறுபாடில்லாமல் பெயருகளைப் பதியலாம் எண்டு அவையள் அறிவிச்ச நேரம் உள்ளுக்குள்ள விருப்பம் தான்! ஆனால் சனம் என்ன சொல்லும் எண்டு விட்டு இருந்திட்டன். ஆனாப் பேந்து கூட இருந்த ஆக்கள் என்ரை பெயரைப் பதிஞ்சிட்டினம். நானும் ஏதோ விருப்பம் இல்லாமல் அரை மனத்தோட போற மாதிரிப் போய் வெளுத்து வாங்கிப்போட்டன் அவ்வளவு சனத்துக்கு முன்னாலை போட்டியளிலை ஈடுபடுறது ஒரு த்ரில் ஆகவும்,மனசுக்கு சந்தோசமாகவும் இருந்திச்சு என்ன மாதிரி இன்னும் கன வயசு போனதுகள் வயித்துக்குள்ளை ஆசைப்பட்டுக் கொண்டிருந்திருப்பினம் பக்கத்திலை இருந்த ஆக்களின்ரை புண்ணியத்திலை எனக்கு மட்டும் நல்ல வாய்ப்பாய் போயிட்டுது.!

என்ரை கதையளைக்கேட்டுவிட்டு நீங்கள் நினைப்பியள் ஏரம்பர் கோவில் நிகழ்ச்சிக்குப் போனவரோ இல்லாட்டி ஏதாவது களியாட்ட வேடிக்கையிலை கலந்து கொண்டவரோ எண்டு! எந்தச் சந்தேகம் உங்களுக்கு மட்டுமில்ல, இண்டைக்கும் கன இடத்தில கன பேருக்கு இருக்கு. உதே பிரச்சினையை நாங்கள் கனகாலத்துக்கு முன்னமே சந்திச்சனாங்கள். அப்ப காரசாரமான விமர்சனங்களுக்கு மத்தியிலை நாங்கள் எடுத்த சில தீர்மானங்கள் தான் இண்டைக்கு ஒரு ஆரோக்கியமான சமூகச் சூழலை இஞ்சை ஊரிலை உருவாக்கியிருக்கிது. வழக்கமா நீங்கள் பார்த்தால் எங்கட கோவில்களிலை கூடிற மக்கள், ஒரு சமூகம் எண்ட அடிப்படையிலை ஒண்டிணைஞ்சு செயற்படுறதுக்கான வாய்ப்புக்கள் வலு குறைவாத் தானிருக்கு. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எண்டு சொல்லிறன் நல்லது! ஆனால் அந்தக் குடியிருக்கிற குடிகளுக்கு கோவில் என்ன செய்யிது எண்டும் பார்க்கலாமெல்லோ! கோவில்களின்ரை பெயரைச் சொல்லிக்கொண்டு சனமெல்லாம் நல்லாக் கஷ்ரப்பட்டு உழைக்கினம் அதோட கோவில்களின்ரை பெயராலை உதவி தேவைப்படுற சனத்துக்கும் நாலு நல்லதைச் செய்யலாம் அல்லோ! நீங்கள் என்னைப் பிழையா விளங்கிக்கொள்ளக் கூடாது! எனக்கும் உதுகளிலை எல்லாம் நம்பிக்கை இருக்கிறது தான். நான் என்ன சொல்லிறனெண்டால், சனியன் போகுமெண்டு நினைச்சு, கரைஞ்சு கரைஞ்சு ஊத்தைக் காகங்களுக்கு சோறு தீத்திற நாங்கள் பக்கத்து வீட்டுக்காரன்ரை வறுமையை எங்களால போக்கலாமெண்டு வடிவாய்த் தெரிஞ்சிருந் தாலும் செய்ய முன்வாறேல்லை. தற்காலத்து சமூகத் தேவையளை இனம் கண்டு அதுக்கு உருப்படியா ஏதா வது செய்யிறமாதிரியான ஆன்மீக வழிகாட்டலுகள் தேவை. அப்பிடிச் செய்யாட்டி பிரேமானந்தா மாதிரிப் பலரும் சமூகத்திலை தலைதூக்கிச் சீரழிக்கத்தான் செய்வினம். பிரேமானந்தாவோட மிச்ச ஆக்களையும் நான் உங்களுக்குச் சென்னால், அடிக்க வருவியள் ஏதோ என்ரை பிள்ளையள் நீங்கள் எல்லாரும் சுகமா பிரச்சினையளில்லாமல் இருக்கோணும் எண்டெல்லே உவ்வளவும் சொல்லிறன்.

கடவுள் எண்டிறவர் ஒண்டும் கடன் காரனில்லை. நாங்கள் கொடுக்கிறதுக்கு பதிலா ஏதாவது எங்களுக்குச் செய்யோணும் எண்டு எதிர்பாக்கிறதுக்கு ஒண்டும் குடுக்காமலேயே எங்களுக்கு ஆதரவா நிற்கக்கூடிய ஒரு அன்பின் வடிவம் தான் அவர். இதாலை தான் எங்கட ஊர் கோவில் நிர்வாகத்துக்குக்கீழே கன விசயத்தைச் செய்யிறோம். ஒரு முன்பள்ளி, நூலகம், சின்னப்பிள்ளையள் விளையாடிறதுக்கான சின்ன ஒரு பூங்கா, மாலை நேரக்காலை வகுப்புகள் இது தவிர ஊரிலை இருக்கிற இளையோர்களை வைச்சு சாரணர் அணி ஒன்றையும் வைச்சிருக்கிறோம். இந்தச் சாரணர் அணிமாதத்துக்கு ஒருக்கால் சிரமதானப் பணி மூலம் ஊர் முழுக்க குப்பையளை அகற்றி முடிஞ்ச வீதியளைச் செப்பனிட்டுச் சரி செய்வினம். பேந்து பின்நேரத்துக்கு எல்லாரும் சேர்ந்து சின்ன நாடகம், பாட்டு எண்டு தெரிஞ்சதைச் செய்து சந்தோசமா நிகழ்ச்சி செய்வினம். சனங்களும் கஷ்ரப்பட்டு வேலை செய்துதங்கட பிள்ளையளுக்கு விதம்விதமா முடிஞ்சதைச் செய்து கொண்டு வந்து சாப்பிடகொடுப்பினம். தங்கட ஊரை சுத்தமாவைச்சிருக் கோணும் எண்ட பொறுப்புணர்வும் எல்லாருக்கும் வந்திட்டிது. ஒரு நிர்ப்பந்தமும் இல்லாம இருப்பமா? எல்லாரும் வந்து செயற்படுவினம். இது தவிர உதவி தேவைப்படுற குடும்பங்களுக்கு உதவி செய்யிற திட்டமும் நடைமுறையில இருக்கு எங்கட உதவித்திட்டம் ஒவ்வொண்டையும் அர்ச்சனை- ரிக்கற்றியையும். குறிப்பிட்டிருக்கிறோம் மற்றது இலங்கையிலேயே ஐயருக்கு நிரந்தரச் சம்பளத்தோட காப்புறுதி போல ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பிலை இடும் ஒரேயொரு நிர்வாகம் எங்களின்ரையாத் தானிருக்கும். செய்யிற எல்லாத்தையும் சொல்லிற நேரத்திலை, செய்யாத காரியம் ஒண்டும் கிடக்கு. கோவில் கட்டடம் 40 வருஷத்துக்கு முன்னால எப்படி இருந்திச்சோ, அதேமாதிரி எளிமையா, அழகா மாற்றமில்லாமல் இருக்குது. கடவுளைக் கும்பிடற மனுசருக்கு என்ன அவசியமா இருக்கோ, அதைத்தான் நாங்க கட்டிறோம் பின்னே என்னங்கோ! அவசரத்துக்கு, ஆபத்துக்கு ஒரு ஆஸ்பத்திரி இல்லை, பள்ளிக்கூடங்களுக்கு கட்டடம் இல்லை, தேவையான இடங்களிலை தேவையான அவசர வசதிகள் இல்லாம வேலியோரம் வெட்கம்கெட வேண்டின நிலைமை. ஒவ்வொண்டுக்கும் உதவி நிறுவனங் களையும், நிவாரணங்களையும் நம்பிக் கொண்டு இருக்கிற எங்கட சமூகத்திலை, கடவுளை மனிசரிலை எல்லே தேடவேணும். கொஞ்ச நாளைக்கு முன்னால கொழும்புப் பேப்பர் ஒண்டிலை வாசிச்ச. செய்தி ஒண்டு:-அனுமார் கோவில் அனுமாருக்கு 17 இலட்சம் ரூபா செலவிலை பட்டாடை வாங்கிக் கொடுத்தினமாம் ஆரோ ஆக்கள்! எட எனக்கு வாசிச்ச நேரம் சீவன் தொலைஞ்சு அஞ்சும் கெட்டு, அறிவும் கெட்டும் போச்சு! அவனவன் இஞ்சை கோவணத்துக்கே வழியில்லாம இருக்கிறார்கள் ஆரோ ஒருத்தர் 20 ஆயிரம் டொலர் செலவழிச்சு அனுமாருக்கு "மேக்-அப" பண்ணியிருக்கிறார். "ஹனுமான்" எண்டால் வடமொழியிலை 'பாதிமனிதன்' அல்லாட்டி மனிதனுக்கு முந்தியவன்' எண்டு அர்த்தம். Homo Sapiens ஆகிய எங்கட பரிணாம கட்டடத்துக்கு முன்னால HOMO ERECTUS, AUSTRALO PITHECUS எண்டெல்லாம் ஒவ்வொரு கட்டங்கள் இருந்திச்சு. அப்பிடியொரு 2லட்சம் ஆண்டு பழமையான எழும்புக் கூட்டை ஆபிரிக்க நாடான எதியோப்பியாவிலை கண்டுபிடிச்சவை. கத்துவாய் கவுண்ட மணி ஏதோ 'நாகரிகம் இல்லாத சனம்' எண்டு நக்கலடிக்கிற ஆபிரிக்க மக்கள் அந்த எழும்புக் கூட்டுக்கு "லூசி" எண்டு பெயர் வைச்சு, ஆராய்ச்சி செய்யினம். கூர்ப்பு கொள்கையின் படியான மனித மூலம் எதியோப்பியா தானெண்டு பெரிய பெரிய ஆராய்ச்சிக்காரரெல்லாம் இப்பை ஒத்துக் கொள்ளினம். எங்களிட்டை ஆராயிறதுக்கும் ஒருத்தனுமில்லை. அடுத்தவங்களை நக்கலடிச்சுக் கொண்டு பெரிசா பெருமை பேசத்தான் தெரியும். அணைகட்ட உதவினதா சொல்லப்படுற அணிலை ராமர் அன்பாத் தடவிக் கொடுத்தாரே தவிர, அட்டியல் வாங்கிக் கொடுக்கேல்லை. அனுமாருக்கு 17 (பதினேழு) லட்சம் செலவழிச்சு பட்டாடை போர்த்திப் பார்த்த அந்தச் சகோதரத்தை, சில நேரம் உங்களுக்குத் தெரிஞ்சா ஒருக்காச் சொல்லி விடுங்கோ ஒரு அம்புலன்ஸ் இல்லாமல் எத்தினை பொம்பிளையள் இஞ்சை தாலி அறுத்துப் போட்டு இருக்கினமெண்டு! எத்தினை பிள்ளையள் பெத்ததுகளை இழந்திருக்கிதுகளெண்டு! சரி இதுகள் தான் கண்ணுக்குள்ளை தெரியாட்டி, அந்த எதியோப்பிய 'லூசி' க் குரங்குகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய எண்டாலும், அந்த பெரிய மனுசனை செலவழிக்கச் சொல்லி விடுங்கோ!

நான் சொல்லிறதிலை நியாயம் இருக்கோ இல்லையோ? மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கோ! எனக்கு எழுதுங்கோ!!

## புலனாய்வு......

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமீபகாலமாக இக்குழுக்கள் மீதான பிஸ்டல் குழுவின் தாக்குதல்களால் இவர்களது செயலாற்றல் சீர்குலைந்து பலவீனமான நிலைக்குள் தள்ளப்படுகின்றது. இவர்களை பிஸ்டல் குழுவின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதில் சிங்கள அரசு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்ற போதும் அத்தகைய பாதுகாப்பை வழங்குவதிலும் போதிய கவனம் செலுத்தியதும் இல்லை.

இக்குழுக்களின் பாதுகாப்பு விடயம் தொடர்பாக 23.10.2003 தினக்குரலுக்கு முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன வழங்கிய பேட்டியை கண்ணோக்குவோம்.

"நாட்டின் மீதும் மக்கள் மீதும் கொண்ட அன்பினால் தகவல்களை வழங்கவில்லை. அவர்களது தனிப்பட்ட நலன்களை அபிவிருத்தி செய்து கொள்ளும் நோக்கிலேயே தகவல்களை வழங்குகின்றனர். இதன் போது ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்."

ஆதலால் அவர்களின் பாதுகாப்பை எம்மால் உறுதி செய்யமுடியாது. இதுதான் தமிழ் விரோதக்குழுக்கள் தொடர்பாக சிங்கள அரசினது நிலைப்பாடாக இருக்கின்றது.

இதனைவிட 28.03.2004 வீரகேசரிக்கு சித்தார்த்தன் வழங்கிய பேட்டியைப்பார்ப்போம்.

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள கருணாவின் முறுகல் நிலைபற்றி உங்கள் கருத்து யாது?

பதில்: கருணாவால் இனி தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்க முடியாது. அரசாங்கம் கருணாவை தனது தேவைக்கு பயன்படுத்தும் பின்னர் அவர்களின் தேவை நிறைவடைய கருணாவைக் கைவிட்டு விடுவார்கள்"

இந்த யதார்த்த உண்மையினை நாங்கள் எமது அனுபவத்தில் கண்டோம். எமக்கு நடந்தது இது தான் என்றார்.

மேலே உள்ள இரு பேட்டிகளிலும் சில வரிகளுக்கு சான்று பகர்வதாக அண்மையில் நடந்து முடிந்த இரு நிகழ்வுகளை சற்று நோக்குவோம்.

அதாவது 24.07.2004 மலபேவீதி, கொட்டாவவிலுள்ள வீட்டில் சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நீல் தம்மிக்க உள்ளிட்ட கருணா குழுவினர் எட்டு பேர்கள் கொல்லப்பட்ட நிகழ்வும், மட்டக்களப்பில் கடமையாற்றிய இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளான கேணல் லக்கி, கப்டன் முனாஸ் ஆகியோரால் கையாளப்பட்டவரான புளொட் மோகன் 31.07.2004 அன்று பம்பலப்பிட்டியில் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வும் எடுத்துக் காட்டுகின்றன.

இக்குழுக்கள் தம் தனிப்பட்ட நலன்களை அபிவிருத்தி செய்து கொள்ளும் பலவீனமானவர்களாக இருந்து வருவதனால் சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவு தம் தேவைகளுக்காக உச்சமாக பயன்படுத்திய பின் கைவிட்டு விடுவது வழமையாக நடைபெறும் நிகழ்வுகளாகும். ஆக மொத்தத்தில் இக் குழுக்களால் சிங்கள அரசும் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் பயன்களைப் பெற்று தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இடையூறுகளை விளைவித்தும், அச்சுறுத்தல்களை கொடுத்தும் சேதங்களை ஏற்படுத்தியும் வருகின்றன. இவற்றைவிட நூற்றுக்கணக்கான தமிழ்த் தேசிய பக்தர்கள் படுகொலை செய்யப்படுவதற்கும் சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவினது ஒத்துழைப்பாளர்களாக எதிர்குழுக்கள் செயலாற்றியும் வருகின்றன.

"எமது எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள் எமது எதிரியையும் அவனது நோக்கத்தையும் நாம் இனங் கண்டு கொள்வது சுலபம். ஆனால், எமது துரோகிகள் முகமூடி அணிந்தும் நடமாடுகிறார்கள். எதிரியின் கைப் பொம்மைகளாக செயற்படுகிறார்கள் தமது சுயநலத்திற்காகவும் வர்க்க அபிலாசைகளுக்காகவும் சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்க தயங்காத இந்த ஆபத்தான பிற்போக்கு சக்திகள் மீது எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்" என தேசியத் தலைவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது வரையிலும் இங்கு எடுத்தாளப்பட்ட அனைத்து விடயங்களையும் நோக்கும் போது எதிர்க்குழுக்களை பயன்படுத்துவதை ஒரு காலக்கிரமமான பணியாகவே சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வந்தது, வரும். ஆகவே தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் புலிகளின் புலனாய்வுத் துறையினரின் ஒத்துழைப்பாளர்களாக தமிழர் பங்காற்றி உறுதுணையாக இருக்கும் போது தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்படும்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை தகர்ப்பதற்கு சிங்களப் புலனாய்வு உள்ளிட்ட தமிழ் விரோத சக்திகளின் சவால்களை எதிர் கொள்ளும் புலிகளின் புலனாய்வுத்துறையினருக்கு தமிழர்கள் பக்க பலமாக இருந்து சிங்கள அரசின் புலனாய்வு தந்திரோபாயங்களை தகர்த்தெறியும் தமிழ்த் தேசிய புலனாய்வுச் சக்தியாக கிளர்ந்தெழுவோம்.

## அவனின் கேள்விகள்.....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் சலித்துக் கொண் டாரோ சபித்துக் கொண்டாரோ அவனது எதிர்கால துளிர்வை கருக்கி விட்டார். உலகெல்லாம் முறக்கள் ஒரு சேர்த்து அவனை துளைத்தன.

"உனக்காரும் சொந்தங்கள் இங்க படிக்கினமே இருந்தால் சொல்லு உன்னைப் பற்றி கொஞ்சம் சொல்லி வைக்க வேணும்" கோவம் தணிய ஆசிரியர் கேட்டார்.

"ஓம் சேர் O/L படிக்கிற சுகிர்தா என் மச்சாள்"

"இல்ல சேர்- எனக்கு உவனைத் தெரியா. பாவம் என்று அப்பா படிப்பிக்கிறார்.

சுகிர்தாவின் கண்களையே பார்த்தான் கபிலன்.

"பொய் எல்லாமே பொய் நான் பொய், அவன் பொய், அவள். பொய், எல்லாமே பொய்" வீடு செல்லும் வரை அவனால் அப்படித் தான் முணுமுணுக்க முடிந்தது.

"உடுப்பெல்லாம் ஊத்தையாக்கி காட்டேறி மாதிரி வாறாய்- என்ர பிள்ளைகளும் போய்வருதுகள் தானே- உன்ன கூட்டிவந்து விட்டவங்கள் போனது போனது தான். தொலைஞ்சிட்டாங்கள். இந்த மனிசனே வீட்டில நிக்குது ஆர் எவரெண்டு இல்லை எதுவெண்டாலும் 'ஓம்' என்றிரது"

மாமியின் வைதலின் சுருதி நாளுக்குநாள் மாறியதே தவிர பொருள் மாறவில்லை.


"பொய் பொய் எல்லாம் பொய் நானும் பொய் நீயும் பொய் மெய்யும் பொய் பொய்தான் மெய்" கபிலனிடம் கவிதை வந்தது.

"என்னடா கொச்சிக்காய் காலம் காத்தால இருந்து சிரிச்சுக் கொண்டே இருந்தாய். ஏதாவது இசகு பிசகா! நடந்திட்டே" அவன் சிரிப்பதை நிறுத்தி பழக்கடைக் காரன் வாசுவை தன் கண்களினுள் எடுக்கிறான்.

'என்னைப் போலவே பிஞ்சில் கருகிய உன் வாழ்வை பழக்கடை கொண்டு துளிர்விக்கும் உன்னால் கூட புரிந்து கொள்ள முடியாத போது என்னை புரிபவர் யார்? கபிலனின் கண்கள் அதை மட்டுமா கேட்டன.

# நியாப் இரண்டாம் கட்டத்தில் சவால்கள் காத்திருக்கிறது






வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டமான "நியாப்" தனது இரண்டாவது கட்ட செயற்பாடுகளை அறிமுகம் செய்திருக்கின்றது.

1999 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நியாப்பின் முதலாம் கட்ட செயற்பாடுகள் நிறைவடைய இருக்கின்றன.


நியாப்பின் பெறுபேறுகளை திரும்பிப்பார்ப்போமேயாயின் அது 100% வெற்றியளிக்காவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் எமது பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளில் இந்தத் திட்டம் கணிசமான பங்களிப்பை செய்திருக்கின்றது.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இலக்குக் கிராமங்கள் சில தெரிவு செய்யப்பட்டு அவை ஓரளவேனும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த நியாப்பின் முதலாம் கட்டத்திற்கென 40 கிராமங்கள் கிளிநொச்சியில் முன் மொழியப்பட்டிருந்த போதிலும் நிதிப்பற்றாக் குறை காரணமாக அது 30 கிராமங்களாகக் குறைக்கப்பட்டிருந்தன.

குறைக்கப்பட்ட கிராமங்களில் நியாப் முதலாம் கட்ட செயற்பாடுகள் யாவும் முற்று முழுதாக முடிந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. இன்னும் பல குளங்களின் புனரமைப்புகளும் பல செயற் திட்டங்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

நியாப்பினூடாக 2002ஆம் ஆண்டு முன்மொழியப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் இதுவரை மூன்று திட்டங்கள் மட்டுமே நிறைவடைந்திருக்கின்றன. மிகுதி 7 திட்டங்களும் இம்மாத இறுதிக்குள் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்தத் திட்டங்கள் கூட இம்மாத இறுதிக்குள் கையளிக்கப்படாதவிடத்து அதனுடைய தொடர் வேலைகளும் அடுத்த மாதங்களில் தொடரப்போகின்றன.



இது இவ்வாறு இருக்க நியாப்பினூடாக 2003ஆம் ஆண்டில் தொடகக்கப்பட்ட திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை இவ் வருட இறுதிக்குள் முடிவடையும் என நியாப் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதிலும் கூட சில திட்டங்கள் நிதிப்பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நியாப் கூறுகிறது.

ஆகவே நியாப் முதலாம் கட்டத்தின் பெறுபேறுகளில் பல திட்டங்கள் இன்னும் நிறைவடையாதிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிலையில்தான் நியாப் இரண்டாம் கட்டத்தின் அறிமுக விழாவும் அண்மையில் நடைபெற்றிருக்கிறது.

நியாப் இரண்டாம் கட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களை விட நியாப் முதலாம் கட்டத்தில் நிறைவடையாத திட்டங்கள் பலவும் கூட இரண்டாம் கட்டத்தில் ஒரு அங்கமாக சேர்த்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு நியாப் தள்ளப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

ஆகவே நியாப் இரண்டாம் கட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம காலத்தில் நியாப் ஒன்றின் குறை வேலைகள் நடைபெற்றே ஆகவேண்டும்.

எனவே நியாப் முதலாம் கட்டத்தில் சந்தித்த இடர்பாடுகளை விட நியாப் இரண்டாம் கட்டத்தில் சந்திக்கப் போகும் இடர்பாடுகள் அதிகமாகவே இருக்கும்.

அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புகள் சிலவும் நியாப் இரண்டாம் கட்டத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்ற அவசியம் இங்குதான் சுட்டிக்காட்டப்படுகிறது.

நியாப் திட்டத்தினூடாக கிளிநொச்சியில் பிரதான நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் அபிவிருத்தி கூட முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தின் அபிவிருத்திக்கு தற்போது 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தத் தொகை தற்போது இந்த நீர்த்தேக்கம் இருக்கும் நிலைக்கு என்றாலும் போதாதது எள்ளளவும் உணரப்பட்டிருக்கிறது.

கிடைத்திருக்கும் 1000 மில்லியனை வைத்து குளத்தை ஓரளவு சீர் செய்தாலும் குளத்திலிருந்து வெளியேற்றப்படும் பிரதான மற்றும் கிளை வாய்க்கால்களும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். ஏனென்றால் குளம் ஓரளவு புனரமைப்புச் செய்யப்பட்ட பின்பு அதிலிருந்து சிறந்த நீர் முகாமைத்துவத்தின் அடிப்படையில் நீர் பங்கீடு செய்யமுடியாது என்பது உண்மை.

எனவே குளம் அபிவிருத்தி செய்யப்படும் சமகாலத்தில் வாய்க்கால்களும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் இல்லையேல் குளத்தை மட்டும் புனரமைப்புச் செய்வதனூடாக முழுமையான பயனை பெறமுடியாது.

எனவே குளமும் வாய்க்கால்களும் சம நேரத்தில் புனரமைப்புச் செய்வதற்கு மேலதிக நிதி அவசியமாகிறது.

எனவே தான் நியாப் முதலாம் கட்டத்தை விட நியாப் இரண்டாம் கட்டத்தில் நெருக்கடியான பல சவால்கள் எதிர்நோக்கப் படுகிறது.

ஆகவே நியாப் இரண்டாம் கட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் மேலதிக நிதியை பெறுவது தொடக்கம் அபிவிருத்திப் பணிகளில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என்ற அவசியத்தை மட்டும் மக்கள் சார்பில் தற்போதைக்கு சுட்டிக்காட்டமுடியும்.

**தேவி**


## கிராமிய அபிவிருத்தி வங்கி பணிநிலை வெற்றிடம்

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கீழ் காணப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிநிலை:- I:- அலுவலர்

தகமை:- க.பொ.த உயர்தர பரீட்சையில் வர்த்தகப் பிரிவில சகல பாடஙகளிலும் திறமைச்சித்திக்குக் குறையாத பெறுபேற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பணிநிலை:- II: எழுதுனர்

தகமை:- க.பொ.த. சாதாதரண தரத்தில் கணிதப்பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடஙகளில் சித்தி அடைந திருபபதுடன் க.பொ.த. உயர் தரத்தில் வர்த்தகப்பிரிவில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அகவை:- விண்ணப்ப முடிவுத் திகதியில் 20 அகவைக்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதியம்:- வங்கியின் ஊதிய அளவுத்திட்டத்திற்கமைய வழங்கப் படும்.

விண்ணப்பதாரிகள் அருகில் உள்ள கிராமிய அபிருத்தி வங்கிக் கிளைகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி 15.09.2004ற்கு முன் கிராமிய அபிவிருத்தி வங்கி கிளைகளிலேயே ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமேலாளர்
கிராமிய அபிவிருத்தி வங்கி
மத்திய செயலகம்.

(சி-10069)



## பணிநிலை வேண்டுகை

அரசியல்துறை நிறுவனங்களில் கீழ் குறிக்கப்படும் பணிநிலைகளுக்கு தகுதியுடைய ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

பணிநிலைகள்:
01. உதவிக் கணக்காய்வாளர். 02. கணக்காய்வு எழுதுனர்.
03. கணக்கு எழுதுனர்.

தகமைகள்:
01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை அல்லது முகாமைத்துவப் பட்டம்.
02 03. க.பொ.த. உயர்தரத்தில் வணிகப்பிரிவில் வேண்டிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அகவை எல்லை:
18 அகவைக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

ஊதியம்:
ஊதிய அளவுத்திட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்.

வேண்டுகை கடித உறையில் எழுதப்பட வேண்டிய முகவரி:
பொறுப்பாளர். ஆளணிப்பகுதி. நிதிப்பிரிவு. அரசியல்துறை. தமிழீழம்.

விண்ணப்ப முடிவு நாள்: 31.08.2004

*வேண்டுகை சேர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரிகள்:*

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் - | அரசியல்துறை - மாவட்டச் செயலகம் - பொற்பதி வீதி, கொக்குவில். |
| புதுக்குடியிருப்பு- | திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம். |
| மல்லாவி - | மின்வழங்கல் சேவை நிறுவனம். |
| கிளிநொச்சி- | விளம்பரப் பணிமனை, ஈழநாதம். யாழ் சாலை கிளிநொச்சி. |
| பொது அஞ்சல் - | மக்கள் தொடர்பகம், அரசியல்துறை, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி. |

(சி-9780)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 02

### பகுதி -09


டிப்ஸ் மற்றப்பிள்ளைகளோடு நெருங்கிப் போகாமல் விலகியே இருந்தான். அவர்களும் அவன் பாட்டில் அவனை விட்டு விட்டார்கள்.

வெளியே போய் விளையாடுவதற் கான நேரம் வந்தது. "சிலவேளை அவன் வெளியே வருவான். வராமலும் விடுவான். இன்னதைச் செய்வான் என்று பந்தயம் கட்ட நான் தயாராகஇல்லை. என்று ஒரு ஆசிரியை என்னிடம் சொன்னார் வெளியே போய் விளையாடும் நேரம் வந்துவிட்டது என்று பிள்ளைகளுக்கு கூறிய அவர் வெளியே விளையாடப் போவோமா என்று டிப்ஸ்சிடம் கேட்டார்.




"நான் மாட்டன்'' கடுமையான தொனியில் அவனது பதில் வந்தது.

"நான் வெளியே போகப் போகிறேன். இன்றைக்கு வெளியே அற்புதமாக இருக்கும்" என்று கூறிவிட்டு நான் எனது மேல் கோட்டை அணிந்து கொண்டேன். தீடிரென டிப்ஸ், "டிப்ஸ் வெளியே போகப்போறன்'' என்றான். அந்த ஆசிரியை அவனது கோட்டைப் போட்டுவிட்டார். அவன் இசகு பிசகான முறையிலே விளையாடும் முற்றத்துக்குள் சென்றான். அவனது உடல் அசைவுகளின் ஒருங் கிணைப்பு மிக மோசமாக இருந்தது. ஏதோ உடல் ரீதியாகவும், உணர்வுகள் ரீதியாகவும் அவனில் விழுந்திருந்த முடிச்சுகளில் அவ்வன் சிக்கித் தவிப்பதாகவே தோன்றியது.



ஏனைய பிள்ளைகள் மணல் நிறைந்த பெட்டிகள், ஊஞ்சல்கள், காட்டு உடற்பயிற்சிச் சாதனம் ஈருருளிகள் போன்ற ஏதாவதொன்றில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பந்தடித்தோ ஓடிப்பிடித்தோ அல்லது ஒழித்துப்பிடித்தோ விளையாடினார்கள். ஓடிவிளையாடினார்கள். கயிறடித்தார்கள். ஏறியிறங்கினார்கள், பாய்ந்தும் விளையாடினார்கள்.

ஆனால், டிப்ஸ் எதுவுமே செய்யவில்லை. அவன் சிறிது தள்ளியிருந்த மூலை ஒன்றுக்குச் சென்று, கீழே குந்தியிருந்து ஒரு தடியை எடுத்து மண்ணில் முன்னும் பின்னுமாக கோடுகளைத் திரும்பத் திரும்ப வரைந்து கொண்டிருந்தான். அவை மணலில் சிறிய வரிப்பள்ளங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. எவரையும் நிமிர்ந்து பார்க்காமலே அப்படிச் செய்து கொண்டிருந்தான். தடி நெடுக நிலத்தைப் பார்த்தபடி, குனிந்து, தன் தனிமையான செயற்பாட்டை மேற்கொண்டிருந்தான்... அமைதியாக... தனக்குள்ளேயே சுருங்கிக்கொண்டு.... எவராலும் எட்டமுடியாதபடி அவன் இயங்கிக்கொண்டிருந்தான்.

பிள்ளைகள் அவர்களது ஓய்வு நேரத்தின் பின் மீண்டும் வகுப்பறைக்குள் வந்ததும் அந்த மண்டபத்தின் முடிவிலிருந்த விளையாட்டு அறைக்கு நான் டிப்ஸ்சை அழைத்துச் செல்லவேண்டும் என்று நாம் முடிவு செய்து கொண்டோம். அதாவது அவன் என்னுடன் வர ஒப்புக்கொண்டால்.

ஆசிரியை மணியை அடித்ததும் எல்லாப்பிள்ளைகளும் உள்ளே வந்துவிட்டனர். டிப்ஸ் கூட வந்துவிட்டான். ஜேன்மிஸ் அவன் கோட்டைக் கழற்ற உதவினார். இந்த முறை தனது தொப்பியை அவனே கழற்றி அவளிடம் கொடுத்தான். மென்மையான உற்சாகமூட்டுகின்ற இசைத்தட்டு ஒன்றை ஆசிரியை அதற்கான சாதனத்தில் போட்டுவிட்டார். ஒவ்வொரு பிள்ளையும் ஓய்வு வேளைக்கென தத்தமது விரிப்புகளை கீழே விரித்துக் கொண்டனர். டிப்ஸ்சும் தனது விரிப்பை விரித்துக் கொண்டான். ஆனால் மற்றப் பிள்ளைகளிலிருந்து சிறிது தூரத்திலே நூலக மேசையின் கீழ் அதை விரித்துக் கொண்டான். பாயின் மீது குப்புறப்படுத்துக் கொண்ட அவன் பெருவிரலை வாய்க்குள் வைத்துக் கொண்டு மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து ஓய்வு எடுத்தான். தனது தனிமையான சிறிய உலகத்தினுள் இருந்தபடி அவன் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறான்? அவனது உணர்வுகள் என்ன? அவன் ஏன் இப்படி நடந்து கொள்கிறான். மற்றவர்களிலிருந்து இந்த அளவுக்கு விலகியிருக்கச் செய்யும் அளவிற்கு இந்தக் குழந்தைக்கு என்ன நடந்தது? அவனது கூட்டுக்குள் ஊடுருவி அவனை எட்ட எங்களால் முடியுமா?

ஓய்வு வேளையின் பின் பிள்ளைகள் தங்கள் தங்கள் விரிப்புகளை உரிய இடங்களில் வைத்து விட்டார்கள். டிப்ஸ்சும் தனது விரிப்பை சுற்றி எடுத்து அதற்குரிய அலுமாரியில் சரியான இடத்தில் வைத்து விட்டான். பிள்ளைகள் சிறிய சிறிய குழுக்களாக, பிரிந்து கொண்டிருந்தார்கள். ஒரு குழுவினருக்கு மரத்துண்டுகளைக் கொண்டு ஏதாவது செய்யும் வேலை நேரம் வழங்கப்பட்டது. இன்னொரு குழு வர்ணம் தீட்ட அல்லது களிமண்ணை எடுத்து விளையாடவிடப் பட்டது.

டிப்ஸ் கதவின் அருகே நின்றபடி இருந்தான். நான் அவனுக்கு அண்மையாகச் சென்றேன். மண்டபத்தின் முடிவில் இருக்கும் விளையாட்டு அறைக்கு போய் சிறிது நேரம் என்னோடு விளையாட விருப்பமா? என்று கேட்டுவிட்டு எனது கையை அவனை நோக்கி நீட்டினேன். அவனில் ஒரு தயக்கம் தெரிந்தது. மறுகணம் அதனை உதறி விட்டு ஒருவார்த்தைதானும் பேசாமல் எனது கையைப் பற்றிக்கொண்டு விளையாட்டு அறைக்கு என்னோடு நடந்து வந்துவிட்டான். நாங்கள் ஏனைய அறைகளின் கதவுகளைக் கடந்து சென்றபோது அவன் ஏதோ முணுமுணுத்தான் (தொடரும்....)



இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜி-சுபாஸ் சந்திரபோஸ்

# மறக்கப்பட்ட ஒரு வீரனும், மறைக்கப்பட்ட அதன் பின்னணியும்

ஆயுத மேந்திப் போராடுவதே சுதந்திரத்தைப்பெறபயன்தரு வழி என்ற முடிவோடு சுபாஸ் சந்திரபோஸ் இந்தியர்களுக்கான இந்திய இராணுவம் ஒன்றை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் ஒற்றையர்களாக பிரிட்டிஷ் வெறியர்களுக்கெதிராக செயற்பட்டுக்கொண்டிருந்தவர்களை இணைத்துப் போரிடத்துணிந்தார். 1856 இல் பிரிட்டிசில் சிப்பாய்களாக இருந்த இந்திய வீரர்களின் "ஒத்துழையாமை இயக்கம்'' பலவந்தத்தால் ஒடுக்கப்பட்டு, வரலாற்றின் பக்கங்களில் வெறும் 'சிப்பாய்க் கலகம்' எனவே குறிக்கப்பட்டது. விடுதலை விரும்பி தேசத்திற்காய் குரலெழுப்பிய இவர்கள், வெறுமனே கலகக்காரர்களாக வர்ணிக்கப்பட்டது வேதனைக்குரியது. இவற்றின் விளைவாகவே காந்தியும், நேருவும் முறையே சத்தியாக்கிரகம் மற்றும் காங்கிரஸ் கட்சி மூலமாக முன் னெடுக்கும் நடவடிக்கைகளில் நம்பிக்கை இழந்தவராக அதேநேரம் அவர்களை மிக ஆழமாக மதித்து நேசிப்பவராக நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் திகழ்ந்தார். இந்தியாவில் மட்டுமன்றி தென்கிழக்காசிய நாடுகளாகிய சிங்கப்பூர், மலேசியா உட்பட்டு பர்மா, நேபாளம் என்று பலநாடுகளிலும் வாழ்ந்து வந்த இந்தியர்கள் ஆயுதபாணிகளாக்கப்பட்டனர். ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருக்கும் இந்தியாவைவிட, இந்தியாவிற்கு வெளியே வாழ்ந்துவந்திருந்த இந்தியத்தொழிலாளிகள் தங்கள் தாயகத்தின் சுதந்திரத்திற்காய் அர்ப்பணிப்போடு இணைந்து கொள்வதும், இராணுவப்பயிற்சி எடுப்பதும் முடியுமானதாக இருந்தது. இரண்டு லட்சத்திற்கும் அதிகமானவர்களைக் கொண்டிருந்த இந்தப்படையில், பெண்களைக்கொண்ட ஜான்சி ராணியின் படையணியும் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சேர்ந்தவர்களுக்கான ஆயுததளபாடங்கள் விடயத்தில் சுபாஷ் சந்திரபோஸ் அக்கால அரசியல் நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது என முடிவெடுத்தார். சுதந்திரத்திற்காய் தம்மை அர்ப்பணிக்கத் தயாராயிருந்தவர்களுக்கு ஏற்ற ஆயுததளபாடங்களின்றி யுத்தகளத்திற்கு அனுப்புவது, சாகக்கொடுத்தலுக்கு ஒப்பானது என்று கணித்த அவர், பிரிட்டன் உட்பட்ட நேசநாடுகளுக்கு எதிராகப் போர்முனையிலிருந்த ஜேர்மனி, இத்தாலி மற்றும் யப்பான் ஆகியவற்றின் உதவியை நாடும் முடிவுக்கு வந்தார்.

1897 ஆம் ஆண்டு இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் பிறந்து கொல்கத்தா மற்றும் கேம்பிறிச் பல்கலைக்கழகங்களில் தனது மேற்படிப்பை முடித்துக்கொண்டு வந்தவர், இந்தியாவில் நடந்த பல அமைதிவழிப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1938 இல் இந்தியத் தேசியகாங்கிரசின் (Indian National Congress INC) தலைமைப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், காந்தியின் எதிர்ப்பால் 1939 இல் தனது பதவியைத் துறந்தார். இதன் பின்னர் 1941 இல் பிரிட்டிஷ் காவலிலிருந்து தப்பிய இவர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், ஹிட்லர் ஆட்சியிலிருந்த ஜேர்மனிக்குச்சென்றார்.

இந்திய சுதந்திரப்போராட்ட வீரர் என்றளவில் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி, தங்கள் எதிரிகளின் எதிரியாகிய சுபாஷ் மீது மிகுந்த மதிப்புக்கொண்டு. நல்லதோர் உறவினை வளர்த்துக்கொண்டதால் இத்தாலியின் நேசநாடாகிய ஜேர்மன் நாட்டு அதிபர் ஹிட்லருடன் பேசும் வாய்ப்புக்கிடைத்தது. சுபாஷின் பேச்சாற்றலாலும், ஆளுமையாலும் ஹிட்லர் மிகவும் கவரப்பட்டார். தனது mein Kampf(எனது போராட்டம்) எனப்படும் நாசிசத்தை வெளிப்படுத்தும் நூலிலிருந்து இந்தியர்களை அவதூறு செய்யும் பகுதிகளை நீக்கிவிடச் சம்மதித்தார். அது மட்டுமல்லாமல் சுபாஷிற்கு ஒரு சகநாட்டு இராணுவ அதிகாரிக்கு வழங்கும் அனைத்து கௌரவங்களும் கிடைக்கச்செய்தார். சுபாஷ் சந்திரபோஸ் கேட்டுக்கொண்ட இராணுவ தளபாட வசதிகளை எவ்விதக் குறையுமில்லாமல் செய்து கொடுப்பதற்கு முன்வந்த ஹிட்லர், நேதாஜிக்கு ஜேர்மனியில் சுதந்திர இந்திய வானொலி நிலையத்தை முதன் முதலாக அமைத்துச்செயற்பட வசதிசெய்தான.

மேலும் சுபாஷ் அங்கு நின்ற காலத்தில் மேலும் ஒரு மிக முக்கியமான பணியைச் செய்தார் பிரிட்டிஷ் இராணுவத்தின் முன்னரங்க வீரர்களாக வடஆபிரிக்க நாடுகளில் போரிட்டு, ஜேர்மன் படைகளினால் யுத்தக்கைதிகளாக ஜேர்மனியில் சிறைவைக்கப்பட்டிருந்த, இந்தியர்களைக்கொண்டதோர் இராணுவ அணியை உருவாக்கியது தான் அந்தப்பணி. நிர்ப்பந்தத்துக்காக பிரிட்டனிற்கு ஆதரவாகப்போர்புரிந்த கூலிப்படைகள் என்று ஜேர்மனியரால் ஏளனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்த அவர்களை விடுவிப்பதற்காக ஹிட்லருடன் பேசி, ஐரோப்பிய மண்ணிலே ஆயிரக்கணக்கானோரைக்கொண்ட இந்தியத்தேசிய இராணுவ அணி ஒன்றினை உருவாக்கினார். Dresden Arnsberg ஆகிய நகரங்களில் இந்தியப்பாசறைகள் அமைக்கப்பட்டன. இவரது செயற்திறனைக்கண்ட ஜேர்மன் அதிகாரிகள், தலைவர்கள் ஜேர்மனிக்கு ஹிட்லரைப்போல, பாரதத்தின் Fuehrer (தலைவர்) சுபாஷ் தான் என்று புகழ்ந்தனர். வெகுவிரைவிலேயே ஜேர்மன் மொழியினையும் கற்று மேடைகளில் உரையாற்றி பிரபல்யம் அடைந்தார். ஜேர்மனியின் களமுனைகளில் போர் உக்கிரம் பெற்றுவந்த நேரத்தில் தான் செய்யவேண்டிய மற்றதோர் பணி குறித்தும் அவர் சிந்திக்கலானார். இதன் காரணமாக தென்கிழக்காசியாவிலுள்ள இந்தியத் தேசிய இராணுவத்தை மறுசீரமைக்க சிங்கப்பூர் செல்லத்திட்டமிட்டார். அவரது திட்டத்தை அறிந்த ஜேர்மன் அரசு, அதிநவீன நீர் மூழ்கிக்கப்பல் மூலம் அவரைப் பாதுகாப்பாக அங்கே அனுப்பி வைத்தது.

தென்கிழக்காசியா வந்து சேர்ந்த அவர் அங்குள்ள தலைவர்கள், மக்கள் அனைவருடனும் கலந்து பேசி, அடுத்தகட்ட நடவடிக்கைகளை உறுதியுடன் முடுக்கிவிட்டார். தொழிலாளிகள், ஆசிரியர்கள், முதலாளிகள், ஆண், பெண் பெரியோர்-சிறியோர் என்ற பேதம் எதுவுமற்று தேசிய இராணுவத்தில் இந்திய மக்கள் இணைந்தனர். ஜப்பானின் உதவியோடு படைக்கலவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 1943 இல் தற்காலிக இந்திய அரசாங்கம் நிறுவப்பட்டு அதன் பிரதம மந்திரியாக சுபாஷ் ஏகமனதாக எல்லோராலும் தெரிவுசெய்யப்பட்டார். இது நடந்து 10 நாட்களில் ஜப்பானின் அழைப்பை ஏற்று அங்கு சென்று ஜப்பானிய மன்னரின் கீழ்ச் செயற்படும் முதல்தர தளபதியும் தலைமை அமைச்சருமாகிய ரோஜோ ஹிடெக்கியுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். பிரிட்டிஷ் ஆட்சியை ஆசியாவிலிருந்து இல்லாதொழிக்க இணைந்து செயற்படுவதென்ற உடன்பாடு காணப்பட்டதுடன் ஜப்பான் ஆட்சியிலிருந்த இந்தியாவின் அந்தமான், நிக்கோபார் தீவுகளை நல்லெண்ண சமிக்ஞையாக ஜப்பான், தற்காலிக இந்திய அரசிடம் ஒப்படைத்தது.

(தொடரும்)

சு.ஞாலவன்

## மங்கி



"குரங்கைப்பார்க்கனும் எண்டு புதுச்சட்டையை வெயில்லே காயப்போடுறியே''

"வெயில்லபுதுத் துணியைப் போட்டா 'மங்கி'ப்போகும் எண்டு சொன்னீங்களே!"





அடிதடி, சண்டை, நடனம், கடத்தல், பொலிஸ், பாடல்கள், சஸ்பென்ஸ், கிளைமக்ஸ் என்று எல்லாம் கலந்த பழைய கலவையாக மீண்டும் ஒரு சினிமா வந்துள்ளது.

எத்தனை தடவைகள், எத்தனையோ 'விதமாக மாற்றிமாற்றிச் சொன்னாலும், அல்லது காண்பித் தாலும் தமிழ்ச்சினிமா பார்வையாளர்களுக்கு இந்த விவகாரங்கள் அலுக்காது என்ற நம்பிக்கையில் எடுக்கப்பட்ட படம் இது. ரிமோட்.

புதிதாக வருகிற படங்களுக்கு இப்போது ஆங்கிலத்தில் பெயர் வைப்பது வழமையாகி வருகிறது. அதில் ஒன்றாக இப்போது ரிமோட்.

உள்ளூரில்- கிராமமொன்றில் சுயமாக இயங்கி, ஊர்




முன்னேற்றத்தை உருவாக்கும் இளைஞர் அணியும் வயதான பெரியவரும் இவர்களின் ஒற்றுமையாலும் திட்டமிடலாலும் ஒன்றித்த செயல்களாலும் ஊர் வளர்ச்சியடைகிறது, விழிப்பும் அடைகிறது.

இது அரசியல் வாதிக்கு ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறது. அவர் இளைஞர்களைப் பழிவாங்குகிறார். வயதானவர் ஒரு இஸ்லாமியர். மதக்கலவரத்தை உருவாக்கு கிறார். கொலைகள் தாராளமாக நடக்கின்றன. இளைஞர்கள் இந்த அநீதிக்கெதிராக ஆயுதமேந்துகிறார்கள். முதலில் ஒரு தொகை ஆட்களை பணயக்கைதிகளாக மடக்குகிறார்கள். இவர்களை பொலிஸ் மீட்பதுதான் படத்தின் கதை.

கண்ணிவெடிகளை ஆழப் புதைத்து விட்டு, உள்ளே ஒரு பழையகட்டடத்தில் கடத்தப்பட்டவர்கள் பணயம் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களை மீட்பதற்காக பொலிஸ் போராடுகிறது. கண்ணி வெடிகள் 'ரிமோட்'டில் வெடித்துவிடும் என்ற அபாயத்தைக் கடப்பது தான் படத்தின் மையம்.



குறுக்கு வழிமுறையைப் பயன்படுத்தி இறுதியில் பொலிஸ் பணயக் கைதிகளை மீட்டு விடுகிறது. தீவிரவாதிகள் எனப்படும் இளைஞர்கள் இறந்து போகிறார்கள்.

ஆனால், இளைஞர்கள் முன்னெழுப்பிய பிரச்சினைகளை யாரும் தீர்க்கவும் இல்லை: அதுபற்றிப் பேசவும் இல்லை.

படத்தின் நோக்கம் பார்வையாளர்களின் மந்தத்தனத்தில் பணம் கறப்பதில்தான் அதற்காக எல்லாச் சரக்குகளிலும் கொஞ்சம் கொஞ்சமாக கலந்து ஒரு 'ரசம்' வைக்கப்பட்டுள்ளது.

பேச எடுத்துக்கொண்டு எந்தப்பொழுதிலும் பேசப்படவும் இல்லை. அதுபற்றி அக்கறைப்படவும் இல்லை. தொழிநுட்ப வளர்ச்சியின் துணையுடன் இரண்டரை மணித்தியாலத்தை கவர்ந்திழுக்க வைத்திருக்கிறார்கள் இயக்குநரும் இந்தச் சினிமாவுக்குள் இணைந்த பிறரும். அவ்வளவுதான்.

— ஆரதி

## ஊக்கமாத்திரை



# மனமும்... அறிவும்...

வாழ்க்கையின் முன்னேற்றத்தில் அறிவு வகிக்கிற பங்கின் அளவிற்கு மனமும் வகிக்கின்றது. எமது மனது அமைதியாக, நிதானமாக இருக்கின்றபோது தான், அறிவுபூர்வமாகத் தெளிவாக எம்மால் சிந்திக்க முடிகிறது. குழப்பமான மனதினால் அறிவுபூர்வமாகச் சிந்திக்க முடியாதல்லவா?

பார்க்கப் போனால் நாம் பெறுகின்ற வெற்றி தோல்விகளுக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும் நமது மனமே காரணமாகிறது. எமது மனம் பக்குவப்பட்டுவிட்டால் எம் வாழ்வில் எல்லாமே இலகுவாகி விடுகிறது. சம்பவங்கள் எப்படி இருக்கிறது. என்பதைவிட, அவற்றை நாம் எப்படி உணர்கிறோம் என்பதிலேயே பல விடயங்கள் தங்கியிருக்கிறது.

நடக்கும் சம்பவங்கள் ஒன்றாக இருந்தாலும், அவை எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியான உணர்வுகளைத் தோற்றுவிப்பதில்லை. இதற்குக் காரணம் மனம் தான். ஒவ்வொருவரும் எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தே உணர்ச்சிப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. நம்மிடமுள்ள பல குறைபாடுகளை நாம் உணர்ந்து கொள்வதில்லை. இதனால் எமது மனப் பாதிப்புகளுக்கு நாமே காரணமாகிவிடுகிறோம்.

வெறுப்பு, கோபம், பொறாமை, சலிப்பு போன்ற, எதிர்விளைவு தரக்கூடிய உணர்வுகள் எமக்கு ஏற்படுவதற்கும் மனப் பான்மையே காரணமாகிவிடுகிறது.

ஒரு நிகழ்வை எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தே, அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும் அமைகின்றன. ஆராய்ந்து பார்த்தால் வாழ்க்கையில் சந்திக்கும் எல்லா நிகழ்வுகளும் மனதைப் பொறுத்து அமைவதை உணர முடியும். கடிவாளம் இல்லாது, மனம் போனபடி நடந்தால் நாம் பலவற்றில் தோல்விஅடைய நேரிடுகிறது. அதே சமயம் நம் கட்டுப்பாட்டில் மனதை இயக்குகிற போது உயர்வடைகிறோம்.

மனக்கட்டுப்பாடு இல்லாமல் எவராலும் முன்னேற்றம் காண்பது சாத்தியமில்லை. மனதிற்குக் கட்டளையிட அறிவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

புரிந்துகொள்ளுதல் என்பது முற்றிலும் மனதைப் பொறுத்தது தான். சரி, தவறு என்பதெல்லாம் வெறும் அபிப்பிராயங்களே. மனம் பக்குவப்பட்டால் எதையும் புரிந்து கொள்வது எளிதாகிவிடுகின்றது. மனம் வகிக்கின்ற பங்கினைப் புரிந்து கொள்ளபவர்களே சாதனைபுரிகின்றார்கள். இவ்வாறு புரிந்து கொள்ளும் மனதையே மனப்பக்குவம் என்று சொல்கின்றோம்.

வாழ்வில் சந்திக்கும் நெருக்கடிகளில் நிதானத்தை இழக்காத மனப்பக்குவம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எந்த நெருக்கடியையும் சமாளித்து முன்னேற முடியும்.

தரிசிக்கும் சம்பவங்களால் ஏற்படுகின்ற உடனடியான தாக்கங்களுக்கு ஏற்பசெயற்படுகின்ற பழக்கத்தை மாற்றிக் கொண்டால்தான், நம்மை முன்னேற்றக்கூடிய சாதகமான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட முடியும். இல்லாவிட்டால் சோர்வும், சலிப்பும், அவநம்பிக்கையும் எமது வாழ்வின் வெற்றிகளை ஏப்பம்விட்டு விடும்.

தனிமனித உறவுகள், குடும்ப உறவுகள் சமூகஉறவுகள் பலப்படுவதற்கு மனப்பக்குவம்தேவை. கணவன் மனைவியரிடையே ஏற்படுகின்ற புரிந்துணர்வுக்கும் மனப் பக்குவம் தேவை.சிறுவயதிலிருந்தே மனப்பக்குவமாகச் சிந்திப்பதைப் பழகிக்கொண்டு வந்தால், மனம் நமது கட்டுப்பாட்டில் இருக்கும்.

இதனால் நமது வாழ்வும் வெற்றிகரமாக அமையும்.

**ச.முருகானந்தன்**

# குழப்பமும் தெளிவும்



சில பிரச்சினைகளுக்கோ அல்லது திட்டங்களுக்கோ ஒரு தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு மிகவும் கடினப்படுவது வழமை இதற்கு தலைக்கு மேலுள்ள பிரச்சினைகளும் சில சூழ்நிலைகளும் காரணமாகும். இந்தக் குழப்ப நிலைக்கு பல வழிகள் உண்டு ஒன்று மனதை ஒரு நிலைப்படுத்தல் என்பது அவசியமாகும்.

இக்குழப்பநிலை, நிதானமின்மை, தெளிவின்மை போன்ற காரணங்களால் நாம் இடும் திட்டங்களுக்கு திடகாத்திரமான முடிவை எடுப்பது கடினமாகத்தான் இருக்கும். திட்டம் சம்பந்தமாக பலரிடம் ஆலோசனை கேட்டாலும் அவர் அவர் அவர்களுடைய சுபாவத்திற்கேற்ப பல கருத்துக்களைக் கூறுவார்கள். அவை எல்லாம் சரியாகவே தோன்றினாலும் அதில் எதைச் செயற்படுத்துவது என்பதும் குழப்பத்தை உண்டு பண்ணும். இவற்றைவைத்து நாம் நம் சிந்தையின்படி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதாவது "யார்யார் எதைச் செல்லினும் கேட்டுக்கொள் உனக்குச் சரி என்பது மட்டும் செய்" என்பது போல்.

இப்படி நிதானமின்மையால் எடுக்கும் முடிவுகள் சிலவேளைகளில் பாதகமான முடிவுகளைத் தந்து விடுவதும் உண்டு. ஆகவே நாங்கள் முதலில் மனதை ஒரு வழிப்படுத்த வேண்டும். இது ஒரு கடினமான செயற்பாடே ஆனாலும் நாம் ஓரளவேனும் முயற்சிக்கவேண்டும் முயற்சிப்பதன் மூலம் பழக்கத்திற்குக் கொண்டுவரலாம். இதன் சம்பந்தமாக ஒரு கீதாசாரமும் உண்டு

"மனதை ஒரு வழிப்படுத்த முடியாதவனுக்கு அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் கிடையாது. அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் அற்றவன் வாழ்வில் அமைதியும் இன்பமும் பெற முடியாது" என்பதாகும்

இப்படித்தான் நம்மவர் ஒருவர் ஒருவரிடம் சென்று

"நான் உங்களோட கொஞ்சநேரம் பேச வேண்டும்!"

"வாங்க உட்காருங்கோ என்ன விசயம்?"

"நான் மிகவும் குழம்பிப் போயிருக்கிறேன். தெளிவடைய வேணும் அதுக்கு என்ன வழி?"

"மனதிலே உள்ள குழப்பங்களை யெல்லாம் போக்கி நிதான நிலையை அடைய வேணும் என்றால் அதற்கு முன்னால் நீங்கள் உங்கள் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்."

"எப்படி"

"எப்பொழுது நீங்கள் நிதான நிலைக்கு வரவேணும் என்று ஆசைப்படுகின்றீகளே, அப்போது நீங்கள் குழம்பியநிலையில் உள்ளீகள்... அப்படியென்றால் உண்மையை ஒப்புக்கொண்டு அதை உணர ஆரம்பிக்க வேணும்."

"அப்படியா?"

" ஆமாம். பைத்தியக்காரன் மற்றவர்களைப் பைத்தியமாக நினைக்கிறான். அப்படி நினைக்கிறவரைக்கும் அவன் பைத்தியம் தான். தனக்கு பைத்தியம் என்பதை அவன் உணர ஆரம்பித்தான் என்றாலே அவன் நிதான நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறான் என்று அர்த்தம்!" அவன் குணமாவதற்கு வாய்ப்பிருக்கிறது!"

"அப்படி என்றால் நான் நிதானம் தவறிய நிலையிலே இருக்கிறேன் என்பதை முதலில் உணர ஆரம்பிக்க வேணும் என்கிறீர்கள்"

"ஆமாம் அப்படி உணர ஆரம்பித்த விட்டாலே நிதான நிலையை நோக்கி நீங்கள் முன்னேற ஆரம்பித்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

இவ்வளவு தூரம் மிகவும் தெளிவாக சொன்னதற்கு நன்றி. நான் உள்ளுக்குள்ளே குழம்பியிருக்கிறேன் என்றதை நேற்றே உணர ஆரம்பித்து விட்டேன்."

"பரவாயில்லையே! எப்படி அது?" "நேற்று உங்களிடம் வருவதற்குப் பதிலாக பக்கத்துக் கட்டிடத்தில் உள்ள வழக்கறிஞரிடம் போய்விட்டேன் டொக்டர்"

"இன்றைக்கும் நீங்கள் வழக்கறிஞரிடம் தான் வந்து இருக்கிறீர்கள்."அப்படி என்றால்...?"

"நான் டொக்கர் இல்லை வழக்கறிஞர்! நான் தான் ஏதோ குழப்பத்தில கறுப்புக் கோட்டுக்குப்பதிலா வெள்ளைக் கோட்டை போட்டுத் தொலைத்துவிட்டேன்!"

**சுரேந்திரன்**



# சில வரையறைகளும் தமிழ்த்தினப்போட்டிகளும்

இப்போது வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கோட்டமட்ட, மாவட்டமட்ட "தமிழ்த்தினப் போட்டிகள்" வேகமாக நடைபெற்றுக் கொண்டுவருகின்றன. இப்போட்டிகளானது மாணவர்கள் மத்தியில் "கலைத்திறன்" "மொழித்திறன்" களை வளர்ப்பதற்காகவே நடாத்தப் படுகின்றன.

'நாடகம்' 'நடனம்' 'வாய்ப்பாட்டு' இவைகள் தவிர்ந்த ஏனையவைகளான சிறுகதைகள், கவிதைகள் உள்ளிட்ட ஆக்க வெளிப்பாடுகள் அனைத்தும், மாணவர்களின் சுயமான படைப்புக்களாகவே இருக்கவேணும்.இது சுற்று நிருபவெளிப்பாடு. இங்கே சிறுகதை, கவிதை போன்ற போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு மண்டபத்திலேயே வைத்து "தலைப்புக்கள்" வழங்கப்படுகின்றன. ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலங்களோ அவர்களுக்கு வழங்கப்படும். அதுக்குள் அவர்கள் எழுதி முடிக்க வேணும் கதைகளோ, கவிதைகளோ சில மணிநேரத்துக்குள் எழுதி முடிப்பவையல்ல- அதுக்கு ஆழ்ந்த சிந்தனை வேணும். மொழித் தேர்ச்சி வேணும். படைப்புக்கள் என்பது கத்திமாதிரி தீட்டத் தீட்டத்தான் கூர்மைபெறும்- ஒரு படைப்பாளியின் ரகசியமே திருப்பித் திருப்பி திருந்த எழுதுவதில் தானாம். எழுதுவதெல்லாம், நல்ல கதைகளல்ல, பரிசுகள் பெற்றவர்கள் எல்லாம் நல்ல படைப்பாளிகளுமல்ல. சிறுகதை, கவிதைகளில் மாணவர்களை ஊக்கப்படுத்தப்படவேணுமென்றால், அதுக்குப் போட்டிகளல்ல- மாணவர்களுக்கு இலக்கியம் சார்ந்தநல்ல நூல்களை வழங்கி வாசிக்கும் பழக்கத்தை உண்டுபண்ணவேணும்.

கடந்த கால ஆசிரியர் தின விழாக்களைப் பார்க்கும் போது ஆசிரியர்களுக்கும் இதேபோல் போட்டிகள் நடாத்தப்பட்டன. அந்தப் போட்டிகளில் சில புகழ்ப்படைப்பாளிகளும் பங்குபற்றியிருந்தார்கள். ஆனால் பெறுபேறுகளைப் பார்க்கும் போது முதல் மூன்று இடங்களுக்குள்ளும் அந்தப் படைப்பாளிகளுக்கு இடங்கள் கிடைக்கவில்லை- கிடைக்கவில்லை என்பதற்காக அவர்கள் மன உளச்சல் படவில்லை. ஆனால் அவர்களுக்குத் தெரியும் கதைகளோ, கவிதைகளோ மணித்தியாலங்களுக்குள் எழுதுபவை அல்ல என்று- ஆனால் அவர்களிடம் இது பற்றிக் கேட்டால் உடனே சொல்லுவார்கள்- தான் D.E யுக்காகத்தான் போட்டியில் கலந்து கொண்டதாக.

தமிழ்த்தினப்போட்டிகள் என்பது ஒரு தரக்கணித்தல் பரீட்சை. இப் பரீட்சையானது கவிதைகள், சிறுகதைகள் தவிர்ந்த ஏனையவைகளில் போட்டிகள் வைப்பதே பொருத்தமாகிறது. கவிதை, சிறுகதை சார்ந்த துறைகளில் மாணவர்களை வளர்க்கவேணும். என்றால் பாடசாலைகளில் இருக்கின்ற நூலகங்களை பயனுள்ளதாக ஆக்க வேணும் இன்று வடக்குக்கிழக்கு மாகாணங்களில் எத்தனையோ நூல்கள் வெளிவருகின்றன. அவைகள் இலக்கிய நூல்களாக இருக்கலாம், கல்வி, வணிகம் சார்ந்த நூல்களாகவும் இருக்கலாம். இங்கே எத்தனை பாடசாலைகள் நூல்களைக் கொள்வனவு செய்கின்றன? சிலர் கூறலாம் புத்தகக் கொள்வனவுகளுக்கு தங்களுக்கு அனுமதிகள் இல்லை என. ஒரு மாதத்துக்கு ஒரு புத்தகத்துக்கு அனுமதியில்லையென்றாலும் ஒரு வருடத்துக்கேனும் ஒரு புத்தகத்துக்கு அனுமதிகள் இருக்கின்றன.

கல்வி,அல்லது கலை சார்ந்த வெளியீடுகளை வெளியிடும் சில வெளியீட்டாளர்கள் பாடசாலைகளுக்குச் சென்றால் அந்த வெளியீட்டாளர்களிடமிருந்து எத்தனை பாடசாலைகள் புத்தகங்களை கொள்வனவு செய்கின்றன. வெளியீட்டாளர்களைக் கேட்டால் சொல்லுவார்கள் கொடுத்த புத்தகங்கள் அனைத்தையும் திருப்பித்தந்த கதைகளை வாசிப்பு என்பது அறிவின் பெருக்கம். நல்ல நல்ல நூல்களை இனங்கண்டு அவைகளை வாசிப்புக்களுக்கு உட்படுத்த வேண்டும்.

சிறுகதைகள்,கவிதைகள் என்பது பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கும் பாடமல்ல அது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கவேணும். இந்த ஆண்டு "தமிழ்த்தினப்போட்டி' களுக்கான சுற்று நிருபம்படி நாடகங்களுக்கு சில வரையறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது பங்குபற்றும் நாடகங்கள், இரண்டு வாத்தியங்கள் மட்டுமே பயன்படுத்தலாம். ஒன்று தோல் வாத்தியம், மற்றையது நரம்பு வாத்தியம். வாத்திய இயக்குனர்கள் அந்தப் பாடசாலை மாணவர்களாய் இருக்கவேண்டும். அல்லது ஆசிரியர்களாய் இருக்கவேணும். இவ்முன் நிபந்தனைகளை நோக்கும் போது, சகல பாடசாலைகளிலும் வாத்தியப் பாண்டித்தியர்கள் இருக்கின்றார்கள் எனத்தோன்றுகிறது. பாடசாலைகளை நகரப் பாடசாலைகள், கிராமத்துப் பாடசாலைகள் என இருவகைப்படுத்தினால் எத்தனை பாடசாலைகளில் மிருதங்கக் கற்கை நெறிகள் இருக்கின்றன?

முன்பு வாத்தியக் கலைஞர்கள் என்றால் சில்லறைகளாய் கிராமங்களில்தான் அதிகமாக இருப்பார்கள். கிராமங்களில் ஒரு கூத்து மரபு இருந்தது-பஜனைகளுக்கென்று ஒவ்வொரு வீடுகளிலும் 'தாளங்கள்' இருந்தன. இப்ப கிராமங்கள் எல்லாம் நகரங்களாக மாறுகின்றன. 'அண்ணாவி' மரபே அற்றுப் போகிறது. நகரங்களில் தான் சில நுண்கலைக் கல்லூரிகள் இயங்குகின்றன. நகரப்பாடசாலைகளில் ஒரு மாணவனேனும் வாத்தியங்களுடன் பரிச்சயமானவனாய் இருப்பான். இவ்வரையறைகளினால் அதிகமான பாடசாலைகள் நாடகங்களில் பங்குகொள்ள முடியாத நிலை உருவாகியிருக்கிறது.

நாடகத்தில் இசை இரத்தமும் சதையும் தாலாட்டு ஒப்பாரி எங்கள் வாழ்வோடு ஒன்றிப்போனவை ஒரு ஆசிரியர் சொன்னார்- வெறும் மத்தளத்தோடும், ஹார்மோனியத்தோடும் நாடகம் செய்யும் போது- செத்தவீட்டுக் காட்சிக்கு மத்தளம் தான் அடிக்கவேணும் என்று-சிலர் நினைக்கலாம். செத்த வீட்டிற்கு ஒப்பாரி இருக்கிறது என்று ஒரு கல்யாணவீட்டுக்கு, பறையொலி ஒலிக்கச்செய்தால்.... அந்தக் காட்சியின் 'படிமம்' சொல்லும் செய்தி பெரியது.

கமராவினால் சொல்ல முடியாத கதைகளைத்தான் சினிமாவில் வார்த்தைகளாய் பயன்படுத்த வேண்டும். ஆனால் தமிழ்ச்சினிமாவோ வார்த்தைகளின் கோர்வைகள் நாடகத்தில் வார்த்தைகளால் அசைவுகளால், சொல்ல முடியாத செய்திகளை பல வாத்தியக்கருவிகள் ஒன்று சேர்ந்து, வென்று, கூடிய அதிர்வுகளைக் கொடுக்கும். படிமங்களிலான அதிர்வுகளைக் கொடுக்கும் ஒரு நல்ல கவிதையைப்போல்தான் நாடகமும்.

சென்ற ஆண்டு தமிழ்த் தினப் போட்டிகளில் மாகாண மட்டத்துக்குத் தெரிவான பல நாடகங்கள் மூன்று நான்கு வாத்தியங்களைப் பயன்படுத்தினவாம். வளங்கள் நிறைந்த சில பாடசாலைகளோடு வளங்குன்றிய பாடசாலைகள் போட்டிபோட முடியாதநிலை என்று சகல பாடசாலைகளும் சமநிலைகளில் பங்குபற்றவேணும் என்ற கருதுதலினால் தான் இந்த வரையறைகளாம்.... இப்படிச் சிலர்கூறினர். வரையறைகள் என்பது மட்டுப்படுத்தல் அல்லது கட்டுப்படுத்தல்- கால்க்கொலுசுகளைக் கழற்றிவிட்டு எப்படி நாட்டியம் ஆடுவது?

"தட்டிப் பார்த்தேன் தொட்டங்கச்சி தாளம் பிறந்தது.....

ரி. ராஜேந்தர்

இதொரு சினிமாப் பாடல் . இப்பாடல் சிரட்டைகளில் தட்டிப் பாடப் படுகின்றது. தாளத்தோடு கைகளைத் தட்டினாலும் அது ராகத்தோடு ஒன்றி விடும். ஒரு நாடக இயக்குனர் சொன்னார். இம்முறை தான், மேசை, குடம், செருப்பு, மணிச் சத்தத்துக்குச் சைக்கிள், என்று சொல்லி விட்டு ஒரு ஆட்டுக்கிடாயும் வேணும், மேடைக்கு அது இரைக்குகத்தும் சத்தத்தில் தான் நாடகம் தொடங்குகிறது என்று வரையறைகள் என்பது கால்கட்டுக்களாய் இருக்கக் கூடாது. இந்த வரையறைகள் சில வேளைகளில், மரபு ஆற்றுகைகளுக்கு பொருத்தமாய் இருக்கலாம். இயல்பு நெறி- நவீன நாடகங்களில் உரையாடல்களை விட இசைகளில் தான் உணர்வு பீறிடும். ஆகவே, துறை சார்ந்தவர்கள், இச் சுற்று நிருபத்தயாரிப்புக்களில் அடங்கினால், இனிவரும் போட்டிகளில், குறிப்பாக இயல்பு நெறிநாடகங்கள் மூலம் நல்ல நெறியாளர்களை பாடசாலைகள் தோற்றுவிப்பதோடு நல்ல நடிகர்களையும் உருவாக்கும்.

**பிரஞ்ஞன்**


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியிற் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

- பணிநிலை:- கணினித்தரவு பதியுநர்
- தகைமை:-

01. எம்.எஸ்.ஒபீஸ் கற்கை நெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

02. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

தகுதியுடையவர்கள் 2004.08.20 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களுடன் வருகை தரவும்.

1. தன்வரலாற்றுச் சான்றிதழ்
2. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
3. ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

மனிதவளமேலாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-9777)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

*அன்பின் பாவலரே!*
*தமிழனுக்கு எப்போது விடிவு வரும்?*

**செ.ரேகா.**
**புதுக்குடியிருப்பு.**

தமிழன் அறிவியல் பூர்வமாகவும், அரசியல் பூர்வமாகவும் விழிப்படையும் போது.

*கனம் பாவலரே வணக்கம்!*
*அடிக்கடி மனம்மாறும் மனிதர்கள் பற்றிய தங்கள் கருத்து என்ன?*

**கோபி.**
**முழங்காவில்.**

அவர்கள் அரசியல் வாதியாகும் தகுதியைக் கொண்டிருக்கிறார்கள் என்பதேயாகும்.

*அன்பின் பாவலரே!*
*கருணாவுக்கும் டக்ளசுக்கும் உருவான நெருங்கிய உறவுபற்றி உமது கருத்து என்ன?*

சு.சுதன்
பெரியபரந்தன்.

இரு துரோகிகளுக்கிடை




யேயான நட்பு அது......

*அன்பின் பாவலரே!*
*ரி.வி.சி வானொலியை கேட்டு சில நேயர்கள் அக்கருத்துக்களை ஏற்கிறார்கள். இவர்களுக்கு நீர் புத்திமதி கூறுவீராக?*

**ராணி.**
**யாழ்ப்பாணம்.**

அவர்களுக்கு மதி இருந்தால் தானே புத்திமதி ஏறும்....!

*பாவலரே!*
*எனக்குத் திருமணம் நெருங்குகிறது அடிக்கடி கனவில் A-9, A-9 என எனது காதலி கூறுகிறாள் என்னவாக இருக்கும்?*

**வா.செல்வன்.**
**வள்ளிபுனம்.**

"போகாதே போகாதே என் கணவா (A9 பாதையில்).... பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்" எனப் பாடப்போகிறாள் என நினைக்கிறேன்.

*இனவாதக் கூச்சலிடும் ஜே.வி.பி யினரிடம் எமக்கான இடைக்கால நிர்வாகத்தை எந்த வகையில் எதிர்பார்க்கலாம் விளக்குவீரா?*

**மு.வ.சுதா.**
**பரந்தன்.**

அதன் இறுதிக்காலம் வரை இடைக்கால நிர்வாகத்தை எதிர்பார்க்கவே முடியாது.

*ஈழத்திலே பிறந்து ஈழத்தையே அழிக்க துணை போகும் துரோகிகளுக்கு என்ன செய்யலாம்?*

**தே.இ.கிருபா.**
**கரவெட்டி.**

துரோகிகளுக்கு வழமையாக என்ன செய்யப்படுகிறதோ அதையே செய்யலாம்.

*தெளிவற்ற முகங்கள் எப்போது தெளிவாகும்?*

**எஸ்.கவிதா**
**எழுதுமட்டுவாழ்.**

அவர்களின் இதயங்களில் இருந்து அறியாமை இருள் விலகும் போது.

*நாகரிகத்தினை உடை விஷயத்தில் மட்டுமே பின்பற்றி அரைகுறை ஆடையுடன் உலா வந்து தழிழர் பண்பாட்டுக்கே கேடு விளைவிக்கும் நங்கையர் பற்றி என்ன கருதுகின்றீர்? அவர்களுக்கு உமது கருத்தென்ன?*

**எம்.விஜிதா.**
**புதுக்குடியிருப்பு.**

ஆடை பாதி அலங்காரம் பாதியென உலா வருவோர் மீது அதிக அக்கறைதான் உங்களுக்கு...! பண்பாட்டை மறந்து தன்பாட்டில் திரிவோர்க்கு என்னத்தைத் தான் சொல்வது? அரைகுறை மனிதராக வாழாதீர்கள் என்று சொல்லலாமா?

*பாவலரே! தமிழீழம் செல்லும் திசையில் வரும் தடைக்கற்கள் எப்படியாகும்? ஒரு வரியில் பதில் தாரும்.*

**த.மூர்த்தி.**
**சோறன்பற்று.**

படிக்கற்களாகும்.

*எமது மண்ணுக்காக தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த அந்த மாவீரர்களைப் பற்றிய ஒரு சிறு கவிதையை விரித்து விடும் பாவலரே!*

**யோ.தாரணி**
**கிளிநொச்சி**

மாவீரர்கள்...
மக்கள் மனதில் உயிர்ப்புற
மண்ணுள் புதையுண்ட
சுதந்திர வித்துக்கள்.

*அநுரா யுத்தத்திற்கும் தயார் சமாதானத்திற்கும் தயார் என்கிறாரே! இதே போல் முன்னர் ஜே.ஆர் அவர்களும் இவ்வாறே கூறினார், இது பற்றி தங்கள் கருத்து யாது?*

**தீபா.**
**மாங்குளம்.**

பேரினவாதிகள் எப்போதும் முட்டாள்த் தனமாக ஒரே மாதிரித் தான் பேசுவார்கள்.




ஆள் கனக்க எண்ணத்தோட வந்தவர் பிறகு சும்மா உங்கின ஒரு காணிய வாங்கி விட்டிட்டுப் போவம் எண்ணுறார். "என்ன எண்ணத்தோட."

ஆள் வன்னிக்க ஒரு அஞ்சுநச்சத்திர கோட்டல் கட்டுவம் எண்டுதான் வந்தவர் பிறகு.... இஞ்ச வந்து பாத்தா ஏற்கெனவே கொட்டலுகள் கட்டியாச்சு.....

நீ என்ன சொல்லு எங்கடயாங்கள் அங்க போய் கொட்டல் கள்ளதானே வேலை செய்யினம். அவயட யோசினையெல்லாம் அதுக்குள்ளதானே நிக்கும்.

பின்ன இஞ்ச வந்து ஏதும் கைத்தொழில் நிறுவனங் களைச் செய்யிற அளவுக்கு ஒருவரும் நினைக்கின மில்லையே.

உதை விடு நாளொண்டுக்கு யாழ்ப்பாணத்துக்கு அந்நியச் செலாவணி ஆறு கோடி ரூபா வருதாம். மாசம் நூற்றெண்பது கோடி இந்தப் பணம் மக்களின்ர சுபிட்சத்துக்கு பயன்பட்டா....?

பயன் படாம.... உந்தக் காசிலதான் மோட்டச் சயிக்கிளுகள்ள சுத்துற இளந்தாரியளால பார்வழிய குடிச்சிட்டு ரோட்டால போற பிள்ளையளோட தனகுப்பட்டு, சைக்கிள் செயினுகள் கத்தியள் பொல்லுகளோட ஒரு ரௌடியிஸம் வெளிக்கிடுது. உழைப்பில்லாம வாற பணம் இந்தக்கால கதாநாயகர்களா தங்கள மாத்தி - ஊருக்குள்ள நச்சுக் கிருமியளாத்திரியுதுகள். காசை அனுப்புறவை திருந்தவேணும்.

* * *

"என்னப்பா பஸ்ஸ விட்டிட்டம் போல இதுக்குத்தான் சொல்லுறது எப்பன் நேரத்தோட எழும்ப வேணுமெண்டு"

"ஆர் படுத்துக்கிடந்த, நான் எழும்பி ரீ வைச்சுத் தரு மட்டும் படுக்கையில கிடந்த நீங்கள் எழும்பி மற்றவேலையளயெண்டாலும் பாக்கலாந்தானே"

"துவங்கிற்றீர்! ஒரு மோட்டச்சயிக்கிளெண்டா பிரச்சினையில்ல தெருவில நிண்டு ஏன் வாக்குவாதப்படவேணும்."

"மெய்தான் உங்கட உழைப்பில லோன் போட்டு வாங்குங்கோவன்"

"ஏன் கொண்ணையட்ட கேட்டு வாங்கினா என்ன?"

"அது தான் தாலிகட்ட முதலே வாங்கியாச்சே"

"அதுக்குப் பிறகு தரமாட்டாரோ?"

"ம்.... இது இந்தியாவுமில்ல எங்கட வீட்ட காஸ்குக்கருமில்ல- பஸ்வருது."

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 81



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் – 81

.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................

பெயர் : ..................................................... **ஈழநாதம்**
முகவரி : ..................................................... யாழ்சாலை,
..................................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 80



ம.கலைநிலா
இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

### பரிசுக்குரிய வரிகள்

*எழுபதில் தரப்படுத்தல்- வெடித்தது தமிழர் போராட்டம்*
*கல்வியில் இன்னமும் தொடர்கிறது பாரபட்சம்*
*இனியும் மன்னிக்க மாட்டோம்*
*புரட்சி செய்வோம், புதுயுகம் படைப்போம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*அரசின் புறக்கணிப்பை தமிழர் கல்விப் பட்டியலில்*
*இணைக்கும் இன்னொரு சம்பவம் இது-*
*அதுவே, பட்டியலில் பெயரில்லாத*
*பட்டதாரிகளின் போராட்டம்.*

சேவியர் வாஷிங்டன்,
புளியங்குளம்.

*பல இன்னல்கள் மத்தியிலும் தமது படிப்பை தொடர்ந்த-*
*-வர்கள் தான் இங்கு மறியல் போராட்டம் நடத்தும்*
*வேலையற்ற பட்டதாரிகள், கொடிய சிங்கள அரசே*
*உடனடியாக கொடு இவர்களுக்கு நியமனத்தை.*

க.ஜெயக்குமார்,
புளியங்குளம்.

*போரின் கொடூரத்தால் தமிழினம் அகதியாய் அவல வாழ்வு*
*வாழ்ந்து வந்தாலும் திறமையாய் பல்கலையில் தேறிய*
*தமிழ் மாணவர் சமூகத்துக்கு நியமனம் வழங்க பின்நிற்கும்*
*சிங்களமே எமக்கு நியமனங்கள் வரும் வரை எமது போராட்டம் தொடரும்*

த.கோகுலராஜ்,
கனகாம்பிகைக் குளம்.

*காலிமுகத்திடலில் 58ல் உன் அகிம்சை காலியானது.*
*77இல் தனியரசுக்கு மக்கள் தந்த தீர்ப்பை யார் ஏற்றது.*
*உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உன் உரிமை*
*செத்துக் கிடப்பது உலகிற்கே தெரியும் மண்டியிடாதே.*

கே.சுசி,
யாழ்ப்பாணம்.

*சங்கப்புலவன் முச்சங்கங்களை உருவாக்கினான்*
*அவைதான் தமிழினை வளர்த்தெடுப்பதற்காக*
*எம் நாட்டில் இச்சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது*
*வேலையில்லாத பட்டதாரிகள் சங்கம் - இது தான் ஏனோ?*

க.சுபத்ரா,
முல்லைத்தீவு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.